Print For Academic Purposes Only (IJTLLS)

பசுமை சூழல் பேணுவோம் பார்தனைக் காப்போம் *Be Eco-Friendly*

E-ISSN: 2581-7140

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்

INTERNATIONAL JOURNAL OF TAMIL LANGUAGE AND LITERARY STUDIES (Ijtlls)

A Bi-Yearly Peer-Reviewed International Journal

மற்றும்

தூய ஜெரோம் கல்லூரி
அனந்தநாடார்குடி, நாகர்கோவில்
கன்னியாகுமரி மாவட்டம்

ST.JEROME'S COLLEGE
Anandhanadarkudy
Nagercoil
Kanniyakumari District

இணைந்து நடத்தும்

பன்னாட்டுக் கருத்தரங்கம்

நாள் : 21.12.2019

நிகழிடம் : தூய ஜெரோம் கல்லூரி

தமிழ் இலக்கியங்கள் வழி மாண்புகள்

NOBILITY EVINCED THROUGH TAMIL LITERATURE

சிறப்பிதழ் 2 : தொகுதி – 2 திசம்பர் 2019
SPECIAL ISSUE II : VOL – 2, DECEMBER 2019

E-ISSN: 2581-7140

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்

INTERNATIONAL JOURNAL OF TAMIL LANGUAGE AND LITERARY STUDIES (Ijtlls)

A Bi-Yearly Peer-Reviewed International Journal

மற்றும்

தூய ஜெரோம் கல்லூரி

அனந்தநாடார்குடி, நாகர்கோவில்
கன்னியாகுமரி மாவட்டம்

ST.JEROME'S COLLEGE

Anandhanadarkudy
Nagercoil
Kanniyakumari District

இணைந்து நடத்தும்

பன்னாட்டுக் கருத்தரங்கம்

நாள் : 21.12.2019

நிகழிடம் : தூய ஜெரோம் கல்லூரி

தமிழ் இலக்கியங்கள் வழி மாண்புகள்

NOBILITY EVINCED THROUGH TAMIL LITERATURE

சிறப்பிதழ் 2 : தொகுதி - 2 திசம்பர் 2019

SPECIAL ISSUE II : VOL – 2, DECEMBER 2019

தமிழ் இலக்கியங்கள் வழி மாண்புகள்

NOBILITY EVINCED THROUGH TAMIL LITERATURE

Advisory Editorial Board

PUBLISHER: D. Maheswari,
3/350, Veterinary Hospital Back side,
Virudhunagar – 626001.
Mobile: 8526769556
Mail: maheswari@ijtlls.com
dmakesh88@gmail.com, ijtllsetamiljournal@gmail.com

PUBLISHER'S MESSAGE

Aim & Objectives

International Journal for Tamil Language and Tamil Studies is an online Peer-Reviewed International Journal published twice in a year on July and January, which is published by **Maheswari Publishers,** patronized by **Pandian Educational Trust, Virudhunagar, Tamil Nadu, India**. It also publishes **Literary Druid, for English Language and Literature (Online)** to foster research in the domain areas**.**

International Journal for Tamil Language and Tamil Studies aims to bring down Academic Research to promote research support for the academicians and scholars in the field of Tamil Language and Literature. Research through this medium is motivating in all aspects of main and inter-disciplines by consequent projects and e-publication. Making Internationalization of the research works in the globalized world aid the scholarly community to develop scholarly profile in research through the quality of publications. The audacity and vision of academic research on internet could foster green printing and open access nature in research. All of these motivate best distribution of research that produces positive outcomes for the betterment of the world.

Disclaimer

International Journal for Tamil Language and Tamil Studies is committed to research Ethics and consider plagiarism as a crime. The authors are advised to adhere academic ethics with respect to acknowledgment of quotations from other works. The Publisher & Editors will not be held responsible for any lapse of the provider regarding plagiarism in their manuscripts. The submissions ought to be original, must accompany the declaration form stating your research paper as an original work, and has not been published elsewhere for any research purpose. The contributor will be the sole responsibility for such lapses on any legal issues and publication ethics.

Contact ijtllsetamiljournal@gmail.com for submission and other information. See www.ijtlls.com for guidelines.

D. Maheswari
Publisher and Director

Message from the Editor-in-Chief

International Journal for Tamil Language and Tamil Studies is an online Peer-reviewed International Journal of Tamil Language and Literature which is committed to academic research, welcomes scholars and students all over the world who to advance their status of academic career and society by their scholarly ideas. The journal welcomes publications of quality papers on the domain area.

Research ought to be active to create a major frontier in the academic world. It must augment the neo-theoretical frame that facilitates re-evaluation and augmentation of existing practices and thoughts. In due course, this will effect in a prime discovery and lean to the knowledge acquired. Research is to establish, substantiate facts, restate previous works ant to resolve issues. An active venture to endow cogent approach to these types for educational reformations through academic research has become the central intent of the journal.

D. Maheswari

வாழ்த்துரை



அருட்பணி அ. சுவக்கின்
தாளாளர்,
தூய ஜெரோம் கல்லூரி,
அனந்தநாடார்குடி, நாகர்கோவில்,
கன்னியாகுமரி மாவட்டம்.

"என்மொழி என்னினம் என்நாடு நலிகையில்
எதனையும் பெரிதென எண்ண மாட்டேன்"

என்று தமிழ்மொழியை உயிர் மூச்சாய் எண்ணி வாழ்ந்த சான்றோர் வழிநின்று செயல்படும் அனைத்து தமிழ் மக்களுக்கும் என் வாழ்த்துக்கள். பல்துறை சார்ந்த ஆய்வுக்கட்டுரைகளைத் திறம்பட நடத்திய வணிக மேலாண்மைத் துறை பேராசிரியர்களைப் பெரிதும் வாழ்த்துகின்றேன். ஆய்வுச் சிந்தனைகளில் மாணவர்கள் தலைசிறந்து விளங்க வேண்டும் என்ற நோக்கினில் ***தமிழ் இலக்கியங்கள் வழி மாண்புகள்*** என்ற தலைப்பை உருவாக்கி ஆய்வுக்கட்டுரைகளை **'தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்' (IJTLLS)** வழியாக பதிப்புச் செய்வதற்கு முற்பட்ட தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ச.ராஜேஸ், முனைவர் சா.ஜோக்கிம் பெலிக்ஸ் மற்றும் இவர்களோடு இணைந்து செயல்படும் தமிழ்த்துறைப் பேராசிரிய பெருமக்களுக்கும் எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் உரித்தாக்குகின்றேன். சொமாஸ்கன் சபையினர் நடத்தும் தூய ஜெரோம் கல்லூரியில் ஏழை எளிய மாணவர்கள் மற்றும் தனித்து விடப்பட்ட இளைஞர்கள் பயன்பெறும் விதமாக பல்வகை வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஆய்வுப்பணிகளில் சிறந்து விளங்கும் விதமாக இக்கருத்தரங்கம் நடைபெறுகிறது. இக்கருத்தரங்கத்திற்கு ஆய்வுக்கட்டுரைகளை வழங்கி உறுதுணை புரிந்த பேராசிரியர்கள் மற்றும் ஆய்வு மாணவர்களுக்கு எனது வாழ்த்துகளும் நன்றிகளும். மாணவர்கள் பயன்பெறும் விதமாக பல்வகை வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி அவர்களின் கல்விப்பணி சிறக்க ஊக்கமும் ஆக்கமும் அளித்து வருவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

வாழ்க வளமுடன் !

நேசத்துடன்
அருட்பணி அ. சுவக்கின்
கல்லூரித் தாளாளர்

அணிந்துரை



முனைவர் அ. அமல்ராஜ்,
முதல்வர்,
தூய ஜெரோம் கல்லூரி
அனந்தநாடார் குடி, நாகர்கோவில்
கன்னியாகுமரி மாவட்டம்.

நுண்மாண் நுழைபுலம் உடைய எழில் நலம் மிக்க ஆராய்ச்சியாளர்கள் பலர் ஆர்வத்தோடு கட்டுரைகளை எமது கல்லூரி ***தமிழ் இலக்கியங்கள் வழி மாண்புகள்*** எனும் தலைப்பில் நடத்தும் பன்னாட்டுக் கருத்தரங்கத்திற்குத் வழங்கியுள்ளனர். அவர்களது ஆர்வத்தையும் ஆய்வுத் திறமையையும் வாழ்த்துகிறேன். தமிழ் இலக்கணம், சங்க இலக்கியம், தற்கால புதினம், தமிழர் வாழ்வு மற்றும் வாழ்வாதாரம், தமிழர் நிலை ஆகிய தளங்களில் தமிழ் நூல்களை ஆய்வு செய்து தமது ஆய்வுத் திறனையும் ஆழமான அறிவுப் புலத்தையும் வெளிப்படுத்தியுள்ளார்கள். அனைவருக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். தூய ஜெரோம் கல்லூரியில் நடைபெறும் இக்கருத்தரங்கத்திற்குக் கட்டுரைகளை ஆய்வுக்கோவையாகப் பதிப்பு செய்வதற்கு அனுமதி அளித்த **“தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்வுதழ் (IJTLLS)-க்கு** எனது மனமார்ந்த நன்றிகள். ஆய்வுக் கட்டுரைகளைத் தொகுப்புப் பணியில் ஈடுபட்ட தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ச.ராஜேஸ், முனைவர் சா.ஜோக்கிம் பெலிக்ஸ் மற்றும் தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் அனைவருக்கும் நன்றிகள். கருத்தரங்க அமைப்பாளர்களான வணிக மேலாண்மைத்துறைப் பேராசிரியர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள். மேலும், கருத்துச் செறிவுமிக்க ஆய்வுக் கருத்தரங்களை நடத்தி சிறப்பு செய்திட வாழ்த்துகளும் பாராட்டுகளும் உரித்தாக்குகிறேன்.

பாசத்துடன்
முனைவர் அ. அமல்ராஜ்
முதல்வர்

வாழ்த்துரை



முனைவர் ஜி.எம். ஜோசப் டன்ஸ்டன்,
மேனாள் துணைவேந்தர் (புனித ஜோசப் பல்கலைக்கழகம், நாகலாந்து)
இயக்குநர்,
தூய ஜெரோம் கல்லூரி,
அனந்தநாடார் குடி, நாகர்கோவில்,
கன்னியாகுமரி மாவட்டம்.

“தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள் - இன்பத்
தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்”

என்ற பாரதிதாசன் வரிகளின் வழி தூய ஜெரோம் கல்லூரி, தமிழ்த்துறை சார்பில் நடைபெறுகின்ற இக்கருத்தரங்கத்திற்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். புனலும் நிலாவொளியும் அங்கு புதுமை செய்தே நெளிந்தோடும் வரிகளுக்கு ஒளி பாய்ச்சுவதைப் போல் செம்மையான பாய்ச்சலோடு இக்கருத்தரங்கம் பீடுநடை போடுகிறது. தமிழுக்கும் தமிழருக்கும் வளமும் வலிமையும் சேர்க்கக்கூடிய ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் படைத்தளித்த பேராசிரியப் பெருமக்களுக்கும், ஆராய்ச்சி மாணவர்களுக்கும் எனது மனப்பூர்வ நன்றிகள். தொலைநோக்குப் பார்வையுடன், **‘தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்’ (IJTLLS)** இப்பதிப்பைச் செய்கிறது. வெட்ட வெட்ட கிடைக்கும் தங்கச் சுரங்கம் போன்று ஆய்வுப் புலமையில் அடியாழம் காணும் இதழாகவே பார்க்கின்றேன். தூய ஜெரோம் கல்லூரியானது சொமாஸ்கன் சபையினரால் மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. ஏழை எளிய மாணவர்களின் வாழ்வை வளமடைய செய்யும் நோக்கில் கல்விப் பணி ஆற்றி வருகின்றது. கல்லூரியில் தமிழ்த் துறையானது தமிழுக்குப் பெருமைச் சேர்க்கும் விதமாக பல்துறைக் கருத்தரங்கத்தை நடத்தி வருகிறது. தமிழுக்கும் தமிழ்நாட்டுக்கும் பெருமைச் சேர்க்கும் விதமாக பல்வேறு ஆய்வுச் சிந்தனைகளை இவ்வுலகுக்கு அளித்து வருவது பெருமைக்குரிய நிகழ்வுகளாகும். தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ச.ராஜேஸ் மற்றும் முனைவர் சா.ஜோக்கிம் பெலிக்ஸ் அவர்களுக்கு வாழ்த்துகளும் நன்றிகளும். வணிக மேலாண்மைத்துறைப் பேராசிரியர்களைப் பெரிதும் வாழ்த்துகின்றேன். மேலும் சிறக்க வாழ்த்துக்கள் பல……..

நன்று தமிழ் வளர்க – தமிழ்
நாட்டினில் எங்கணும் பல்குக! பல்குக!
என்றும் தமிழ் வளர்க!
வாழ்த்துக்கள்…….

என்றும் பிரியமுடன்
முனைவர் ஜி.எம். ஜோசப் டன்ஸ்டன்
இயக்குநர்

அணிந்துரை



முனைவர் ச. ராஜேஸ்

தமிழ்த்துறைத்தலைவர்
தூய ஜெரோம் கல்லூரி
அனந்தநாடார்குடி, நாகர்கோவில்,
கன்னியாகுமரி.

'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு'

சேர நாடாம் நாஞ்சில் நாட்டினில் மாந்தன் தோன்றிய முதலிடமாம் குமரி கண்டத்திலே அமைந்திருக்கின்ற கல்லூரி தூய ஜெரோம் கல்லூரி. லெமூரியா கண்டத்தில் மாந்தன் தோன்றிய சான்றுகள் ஏராளமான பதிவுகளில் உள்ளன. என்றும் இளமையாய் காட்சியளிக்கும் என் இதயத் தமிழ் மேலோங்கி நிற்கும் போது ஆனந்தத்தில் மிதக்கின்றேன். தமிழ் இலக்கியங்கள் சார்ந்து ***தமிழ் இலக்கியங்கள் வழி மாண்புகள்*** எனும் தலைப்பில் நடக்கும் இக்கருத்தரங்கிற்கு தமிழ்கூறும் நல்லுலகம் அதிக படைப்புகளை வழங்கி பெருமை சேர்த்திருக்கின்றது. ஆய்வாளர்களின் ஆழமான ஆய்வுப்புலமையில் உதித்த தரமான ஆய்வுக்கட்டுரைகள் ஆய்விதழுக்கும் பெருமை சேர்த்திருக்கின்றது. அரிய வகை கட்டுரைகளை எல்லாம் தொகுத்து ஒருசேர வெளியிட்டு இருக்கின்றோம். அவ்வரிய கட்டுரைப் புதையல்கள் ஆய்விதழ் வடிவம் பெற பெரிதும் துணை நின்ற கல்லூரி நிர்வாகத்தினருக்கு எனது நன்றிகள். **"தமிழ் மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்"** மேலும் பல மேன்மைகளைப் பெற்றிட பெரிதும் வாழ்த்துகின்றேன். வாழ்வியல் கோட்பாடுகளை இச்சமூகம் மறந்துவிடக்கூடாது என்று நினைத்து இவ்வரிய கருத்தரங்கத்தினைக் கட்டமைத்து செயல்படுத்தியுள்ளோம். பல நற்றமிழ் சான்றோர்கள் உயரிய சிந்தனையில் கட்டுரைகளைப் பகிர்ந்துள்ளனர்.

அனைவருக்கும் வாழ்த்துகளும் பாராட்டுகளும்...

பாசத்துடன்
முனைவர் ச. ராஜேஸ்
தமிழ்த்துறைத்தலைவர்

பாராட்டுரை



முனைவர் சா. ஜோக்கிம் பெலிக்ஸ்,
உதவிப்பேராசிரியர்,
தூய ஜெரோம் கல்லூரி,
அனந்தநாடார்குடி, நாகர்கோவில்,
கன்னியாகுமரி மாவட்டம்.

"எளிய நடையில் தமிழ்நூலில் எழுதிடவும் வேண்டும்.
இலக்கணநூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்.
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதும் வேண்டும்."

மறைக்கப்பெற்ற மாபெரும் வரலாற்றையும் சிதைக்கப் பெற்ற ஒப்புயர்வற்ற மொழியையும் கொண்ட தமிழினத்தின் முன்னேற்றம் கருதி இவ்வருந்தமிழ்ப் புதையல்களைத் தமிழ் கூறும் நல்லுலகிற்கு எடுத்துரைக்க வேண்டும். தமிழ் மொழியை மூச்சாகவும் பேச்சாகவும் செயலாகவும் கொண்டு ஒருநாளின் முழுப் பொழுதும் தமிழாகவே வாழ்ந்திட தமிழ் நூல்களைப் படித்திடல் வேண்டும். தனித்தமிழ் என்ற புலமை பரவிடல் வேண்டும். தூய ஜெரோம் கல்லூரி தமிழ்த்துறையினர் ***தமிழ் இலக்கியங்கள் வழி மாண்புகள்*** எனும் தலைப்பில் நடத்தும் இக்கருத்தரங்கம் வெற்றி பெற்றிட வாழ்த்துகின்றேன். தமிழை ஆரிய இருளினின்று மீட்டுக் காத்திடும் தருணம் பிறந்து விட்டதென எண்ணுகின்றேன். வீழ்ந்து பட்ட தமிழனுக்கு வழிப்பூட்டவல்ல அரிய ஆராய்ச்சிப் படைப்புகளைக் காணமுடிகிறது. **'தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்' (IJTLLS)** பதிப்புக் குழுவினருக்கும் வாழ்த்துகள். சற்றும் தரம் குறையாமல் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அடிமைப்பட்டுக் கிடக்கும் தமிழ் மொழியை மீட்க தங்களது அளப்பரிய தமிழ்ப்பணி மெய்சிலிர்க்க வைக்கின்றது. தமிழ்மொழியினைத் தூக்கிப்பிடித்தால்தான் தமிழினம் தன்னிலைப் பெறும் அதற்கு இக்கருத்தரங்கம் பேருதவி புரியும் ஆழ்ந்த ஆய்வுக் கருத்துகளைப் படைத்தளித்த பேராசிரியப் பெருமக்களுக்கும் ஆய்வு மாணவர்களுக்கும் வணிக மேலாண்மைத் துறைப் பேராசிரியர்களுக்கும் எனது வாழ்த்துக்களும் நன்றிகளும். தனித்தமிழ் இயக்கக் கொள்கைகளில் அதிக கவனம் செலுத்தி பதிப்புப் பணியில் மென்மேலும் சிறக்க ஆய்விதழ் அமைப்பினருக்கு வாழ்த்துகள்!

தனித்தமிழை நேசிப்போம்!

வாழ்த்துகளுடன்
முனைவர் சா. ஜோக்கிம் பெலிக்ஸ்
உதவிப்பேராசிரியர்

பதிப்புரை மற்றும் நன்றியுரை

திருமதி. த.மகேஸ்வரி,
இயக்குநா் மற்றும் பதிப்பாசிரியா் - IJTLLS,
தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்,
விருதுநகா் - 626 001.



தமிழ்மொழி மற்றும் இலக்கியத்திற்காக எமது **தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ் (Ijtlls)** தம் இலக்கிய மற்றும் ஆராய்ச்சி அரும்பணியைச் செய்து வருகின்றது.

தமிழ் இலக்கியங்கள் வழி மாண்புகள் என்ற பொருண்மையில் கருத்தரங்கம் நடத்தி அதை எமது ஆய்விதழ் வாயிலாக வெளிக்கொணர ஒப்புதல் அளித்த தூய ஜெரோம் கல்லூாி நிா்வாகம், முதல்வா், கல்லூாித் தமிழ்த்துறைத்தலைவா், தமிழ்த்துறைப் பேராசிாியா்கள், வணிக மேலாண்மைத்துறைப் பேராசிரியர்கள் மற்றும் கல்லூாிப் பேராசிாியா்கள் அனைவருக்கும் நன்றி.

இப்பன்னாட்டு கருத்தரங்கத்தின் ஓா் அங்கமாக **தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ் (IJTLLS)** செம்மையாய் செயல்பட்டு ஆய்வுக் கட்டுரைகளை இணையத்தில் பதிப்பு செய்து உள்ளது. எதிா்காலத்தில் தமிழ் ஆராய்ச்சிகளை உலக அரங்கத்திற்கு எடுத்துச் செல்ல ஓா் ஆய்வுக்களமாக எமது இதழ் செயல்பட்டு வருகிறது. அதற்கு தமது உறுதுணை அளித்த அனைவருக்கும் நன்றி.

பன்னாட்டு கருத்தரங்கில் தமது ஆய்வைச் செம்மை நிறுத்தி தமிழ்மொழி, தமிழா் நாகரிகம், தமிழா் பண்பாடு மற்றும் கலாச்சாரம் போன்ற பொருண்மையில் கிடைத்த தரவுகளைக் கட்டுரைகளாக வழங்கி சிறப்பித்த தமிழ்ப் பேராசிாியா்கள், ஏனைய அனைத்து துறைப் பேராசிாியா்கள், எழுத்தாளா்கள், தமிழ் ஆா்வலா்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவா்களை மனதாரப் பாராட்டுகிறோம்.

நன்றி

திருமதி. த.மகேஸ்வரி
இயக்குநா் மற்றும் பதிப்பாசிரியா் - IJTLLS

பொருளடக்கம்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, December-2019 Available at: www.ijtlls.com

தொடைநயமும் திரையிசைப் பாடல்களும்

Prosody (Thodainayam) and Cinema Songs

முனைவர் அ. சுஜாதா ஜாய்ஸ், உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
நாஞ்சில் கத்தோலிக்க கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கன்னியாகுமரி மாவட்டம்.

Abstract

In Tamil Literature, the work, "Yapparungkarikai" scores its highest place in the line of grammar books of Tamil Language. It deals with the linguistic elements of Tamil Grammar. The segmental devices of the linguistic forms are measured through leveled calculation in Tamil Language. 'Thodainayam' nearly called in English as 'Prosody' is the vital one in use to bring down good rhetoric. Most of the Tamil cinema songs are naturally embedded with such rhetoric elements. Hence, the aim of the research article fosters to decipher the cineme songs embedded with the perfect Tamil prosody.

Keywords: Prosody, Thodainayam, Tamil Cinema Songs

தமிழ்மொழி இலக்கிய வளமும் இலக்கண வளமும் நிறைந்தமொழி. தமிழ் மொழியின் இலக்கணச் செழுமையை அறிந்து கொள்ளும் வாயில்களில் தொல்காப்பிய வரிசையில் வைத்துப் பார்க்கக்கூடிய தரமிக்க நூல் அமிர்தசாகரரால் இயற்றப்பட்ட 'யாப்பருங்கலக் காரிகை' நூலாகும். யாப்பு உறுப்புக்கள் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்பனவாகும். இதில் தொடை இலக்கணத்திற்குச் சான்று பகரக்கூடிய பல திரையிசைப் பாடல்கள் அன்று முதல் இன்று வரை உலாவந்து கொண்டிருக்கின்றன. யாப்பருங்கலக் காரிகை தரும் தொடை நயத்தையும், அத்தொடை இலக்கண அடிப்படையிலமைந்த திரையிசைப் பாடல்களையும் ஆராய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

தொடை

செய்யுளில் வரும் அடிகளையோ சீர்களையோ ஒன்றையொன்று பொருந்தும் வகையில் தொடுப்பது தொடை எனப்படும். பல்வேறு விதமான மலர்களால் தொடுக்கப்படும் பூமாலையைப் போல பல அடிகளைக் கொண்டு பொருத்தமுறத் தொடுக்கப்படுவதால் தொடை எனப்படுகிறது. 'தொடை' செய்யுளின் ஓசைக்கும், இனிமைக்கும், சிறப்புக்கும் இன்றியமையாததாகிறது.

தொடை வகைகள்

அடிகள் தோறும் முதலெழுத்து ஒன்றிவருவது மோனை. இரண்டாமெழுத்து ஒன்றிவருவது எதுகை. அடியின் இறுதி எழுத்து ஒன்றிவருவது இயைபு. மாறுபட்ட பொருள்பட வருவது முரண். ஒவ்வொரு அடியின் முதலெழுத்து அளபெடுத்து வருவது அளபெடைத் தொடையென தொடை ஐந்து வகைப்படும். இதனை யாப்பருங்கலக் காரிகை பின்வருமாறு எடுத்துரைக்கின்றது.

> **"எழுவாயெழுத்தொன்றின் மோனையிறுதியியைபிரண்டாம்**
> **வழுவாவெழுத்தொன்றின் மாதேயெதுகைமறுதலைத்த**
> **மொழியான் வரினுமுரணடிதோறுமொழிமுதற்கண்**
> **அழியாதளபெடுத் தொன்றுவதாகுமளபெடையே" (யாப்பருங்.16)**

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, December-2019 Available at: www.ijtlls.com

மோனைத் தொடை, இயைபுத் தொடை, எதுகைத் தொடை, முரண் தொடை, அளபெடைத் தொடை ஆகியவை மட்டுமல்லாது அந்தாதித் தொடை, இரட்டைத் தொடை, செந்தொடை என்னும் தொடையும் செய்யுளில் பயின்று வருவது பற்றியும் யாப்பருங்கலக் காரிகை எடுத்துரைக்கின்றது.

“அந்தமுதலாத் தொடுப்பதந் தாதியடிமுழுவதும்
வந்தமொழியேவருவதிரட்டைவரன் முறையான்
முந்தியமோனைமுதலாமுழுதுமொவ் வாதுவிட்டாற்
செந்தொடைநாமம் பெறுநறுமென்குழற் றேமொழியே” (யாப்பருங். 17)

ஒரு அடியின் இறுதி எழுத்தோ, சீரோ அடுத்த அடியின் முதலாகி வருவது அந்தாதித் தொடை. ஓரடியின் முதலில் வந்த சொல்லே அடி முழுவதும் வருவது இரட்டைத் தொடை. மோனை, எதுகை முதலாகச் சொல்லப்பட்ட தொடை வரையறையின்றி மாறுபட தொடுக்கப்படுவது செந்தொடையென யாப்பருங்கலம் விளக்கமளிக்கிறது. இவை மட்டுமல்லாது தொடை விகற்பங்களும் உண்டு. தொடை விகற்பங்களைத் தவிர்த்து தொடை வகை பற்றி அறியலாம்.

தொடையும் திரையிசையும்

யாப்பு உறுப்புக்களில் ஒன்றாகிய தொடைக்குப் பல திரையிசைப் பாடல்களை உதாரணமாகக் கூறலாம். அவற்றை நாம் இலக்கணக் கண்கொண்டு காணாவிடினும் அவற்றில் காணப்படும் தொடை நயம் நம்மை வியக்கச் செய்கின்றது. யாப்பருங்கலக் காரிகை எடுத்துரைக்கும் எட்டுவகைத் தொடைகளுக்கும் சான்று பகரும் வகையில் திரையிசைப் பாடல்களும் காணப்படுகின்றன.

மோனைத்தொடை

அடிதோறும் முதலெழுத்து ஒன்றிவர தொடுக்கப்படுவது மோனைத்தொடை எனப்படும்.

“**மா**வும் புள்ளும் வதிவயின் படர
மாநீர் விரிந்தபூவும் கூம்ப
மாலைதொடுத்தகோதையும் கமழ
மாலைவந்தவாடை
மாயோள் இன்னுயிர்ப் புறத்திறுத் தற்றே”

இப்பாடலில் மா என்னும் எழுத்து முதலில் வரும்படி தொடுக்கப் பட்டிருப்பதால் அடி எதுகையாயிற்று. இவ்வாறு முதல் எழுத்து ஒன்றி வரும்படியான திரையிசைப் பாடல்கள் பல உள்ளன.

கருணைமழையேமேரிமாதா
கண்கள் திறவாயோ
கனிந்துஉருகும் ஏழைமகனின்
கால்கள் தருவாயோ” (படம் : அன்னைவேளாங்கன்னி)

இப்பாடலில் ஒவ்வொரு அடியின் முதலெழுத்தாக ‘க’ என்னும் எழுத்து அமைந்து மோனைத் தொடைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

எதுகைத்தொடை

அடிதோறும் முதற்சீரில் இரண்டாமெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது அடி எதுகைத் தொடை எனப்படும்.

“வ**டி**யோர்கண் ணீர்மல்கவான்பொருட்கண் சென்றார்
க**டி**யார் கனங்குழாய்!காணார்கொல் காட்டுள்
இ**டி**யின் முழக்குஅஞ்சிஈங்கவுள் வேழம்
பி**டி**யின் புறத்தசைத்த கை”

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, December-2019 Available at: www.ijtlls.com

இச்செய்யுளில் முதற்சீரின் இரண்டாம் எழுத்தாகிய 'டி' ஒன்றிவரத் தொடுக்கப்பட்டிருப்பதால் அடி எதுகைத் தொடையாயிற்று.

"**கண்**ணோடுகாண்பதெல்லாம் - தலைவா
கண்களுக்குச் சொந்தமில்லை
கண்ணோடுமணியானாய் - ஆனால்
கண்ணைவிட்டுப் பிரிவதில்லை" (படம் : ஜீன்ஸ்)

இப்பாடலில், இரண்டாம் எழுத்தாகிய 'ண்' என்னும் எழுத்து ஒன்றி வருவதால் அடி எதுகையாயிற்று. முதல் எழுத்தாகிய 'க'வும் ஒன்றி வருவதால் இப்பாடல் மோனைத் தொடையும் ஆயிற்று.

முரண் தொடை

செய்யுளின் அடிதோறும் சொல்லோ, பொருளோ முரண்பட தொடுப்பது முரண்தொடை எனப்படும்.

"**இருள்**பரந் தன்னமாநீர் மருங்கில்
நிலவுகுவித் தன்னவெண்மணல் ஒருசிறை
இரும்பின் அன்னகருங்கோட்டுப் புன்னை
பொன்னின் அன்னநுண்தாது இறைக்கும்
சிறுகுடிப் பரதவர் மடமகள்
பெருமதர் மழைக்கணும் உடையவரால் அணங்கே"

இச்செய்யுளில் இருள் - நிலவு, இரும்பு–பொன், சிறு–பெரு என ஒன்றுக்கொன்று முரண்பட்ட சொற்கள் அடிதோறும் பயின்று வந்துள்ளமையைக் காணலாம்.

"**அகரம்** இப்போ**சிகரம்**ஆச்சு
தகரம் இப்போ**தங்கம்**ஆச்சு
காட்டுமூங்கில்பாட்டுப் பாடும்
புல்லாங்குழல்ஆச்சு" (படம் : சிகரம்)

"ஒருவன் ஒருவன் **முதலாளி**
உலகில் மற்றவன் **தொழிலாளி**
விதியைநினைப்பவன் **ஏமாளி**
அதைவென்றுமுடிப்பவன் **அறிவாளி**" (படம் : முத்து)

இதில் அகரம்- சிகரம், தகரம் - தங்கம், காட்டு மூங்கில் - புல்லாங்குழல் எனவும் முதலாளி–தொழிலாளி, ஏமாளி–அறிவாளி எனவும் முரண்பட்ட சொற்கள் இடம் பெற்று பாடலை இனிமையாக்குவதோடு பொருளாழம் மிக்கவையாகவும் காணப்படுகின்றன.

இயைபுத்தொடை

செய்யுளின் அடிதோறும் இறுதிஎழுத்து அல்லது இறுதிச்சீர் ஒன்றிவரத் தொடுப்பது இயைபுத்தொடை எனப்படும்.

"இன்னகைத் துவர்வாய்க் கிளவியும் **அணங்கே**
நன்மாமேனிச் சுணங்குமார் **அணங்கே**
ஆடமைத் தோளிஊடலும் **அணங்கே**
அரிமதர் மழைக்கணும் **அணங்கே**
திருநுதல் பொறித்ததிலகமும் **அணங்கே**"

'அணங்கே' என்னும் சொல் செய்யுளின் ஒவ்வொரு அடியிலும் இறுதிச்சீராக வந்திருப்பதே இயைபுத் தொடையின் வெளிப்பாடாகும்.

"கல்யாணத் தேன் **நிலா**
காய்க்காதபால் **நிலா**

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, December-2019 Available at: www.ijtlls.com

நீதானேவான் **நிலா**
என்னோடுவா**நிலா**
தேயாதவெண்**ணிலா**
உன் காதல் கண்**ணிலா**
ஆகாயம் மண்**ணிலா"** (படம் : மௌனம்சம்மதம்)

இப்பாடலில் 'நிலா' என்னும் சொல் ஒவ்வொரு அடியின் இறுதியிலும் இடம்பெற்று இயைபுத் தொடைக்கு உதாரணமாயிற்று. இப்பாடல் மட்டுமல்ல எத்தனையோ பாடல்களில் இதுபோன்ற ஒரேசொல் அல்லது ஒரேஎழுத்து ஒவ்வொரு அடியின் இறுதிச்சீராக வந்து அழகுபடுத்தும் தமிழ்த் திரையிசைப் பாடல்களும் உள்ளன.

அளபெடைத்தொடை

ஒவ்வொரு அடியின் முதற்சீரும் அளபெடுத்து வரும்படியாக தொடுப்பது அளபெடைத் தொடை எனப்படும்.

"**ஆஅ**அளியஅலவன்தன் பார்ப்பினோடு
ஈஇர் இரையும்கொண் டீர்அளைப் பள்ளியுள்
தூஉத் திரையலைபத்துஞ்சாதுறைவன்தோள்
மேஎவலைப்பட்டநம்போல் நறுநுதால்
ஓஒஉழக்குந் துயர்"

இச்செய்யுளில் அடிதோறும் ஆஅ, ஈஇ, தூஉ, மேஎ, ஓஒ என முதற்சீர் அளபெடுத்து வரத்தொடுத்ததால் அளபெடைத் தொடையாயிற்று.

"**ஆஅ**ரோடும் மண்ணில் எங்கும் நீரோடும்
ஏஎரோடும் என்றும் நம்மதேரோடும்
போஒராடும் வேலை இல்லை
யாஅரோடும் பேதமில்லை
ஊஉரோடும் சேர்ந்துண்ணலாம்" (படம் : பழநி)

இப்பாடல் நீரின், ஏரின், ஊரின் பெருமை சொல்கிறது. ஏஎரோடும், போஒராடும் யாஅரோடும், ஊஉரோடும் என ஒவ்வொரு அடியும் நீண்டு ஒலிப்பதால் அளபெடைத் தொடையாயிற்று. செய்யுட்களில் அளபெடுக்கும் எழுத்தை அடையாளப் படுத்துவதன் அடையாளமாக அந்த நெடில் எழுத்தின் அருகில் அதன் குறில் எழுத்து குறிக்கப்படும். திரைப்படப் பாடல்களில் இவ்வாறு குறிக்கப்படுவதில்லையெனிலும் முதல் சீர்கள் நீண்டு ஒலிக்கும் பாடல்கள் அளபெடைத் தொடைக்கு உதாரணமாக அமைகின்றன.

அந்தாதித் தொடை

அடிதோறும் இறுதிக்கண் நின்ற எழுத்தோ, அசையோ, அடியோ அடுத்த அடிக்கு ஆதியாக வரும்படி தொடுப்பது அந்தாதித் தொடை எனப்படும்.

"உலகுடன் விளக்கும் ஒளிதிகழ் அவிர்**மதி**
மதிநலன் அழிக்கும் வளங்கெழு**முக்குடை**
முக்குடைநீழல் பொற்புடை**ஆசனம்**
ஆசனத் திருந்ததிருந்தொளிஅறிவன் அவ்
ஆசனத் திருந்ததிருந்தொளிஅறிவனை"

இப்பாடலில் அவிர்மதி, மதி, முக்குடை, ஆசனம் ஆசனத்திருந்த திருந்தொளி அறிவனை என சீரும்,அடியுமாக ஒரு அடியின் இறுதிச்சீர் அல்லது அடி அடுத்த அடியின் தொடக்கமாக அமைவதால் அந்தாதித் தொடையாயிற்று.

"வசந்தகாலநதிகளிலேவைரமணி**நீரலைகள்**
நீரலைகள்மீதினிலேநெஞ்சிரண்டின் **நினைவலைகள்**
நினைவலைகள்தொடர்ந்துவந்தால் நேரமெல்லாம் **கனவலைகள்**

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, December-2019 Available at: www.ijtlls.com

கனவலைகள்தொடர்வதற்குகாமனவன் மலர்க்கணைகள்'' (படம்: மூன்று முடிச்சு) இப்பாடலின் ஒவ்வொரு அடியின் இறுதிச் சீர்களாகிய நீரலைகள், நினைவலைகள், கனவலைகள், மலர்க்கணைகள் ஆகிய சொற்களே அடுத்த அடியின் தொடக்கமாக அமைந்து அந்தாதித் தொடைக்கு உதாரணமாகத் திகழ்கின்றது.

இரட்டைத்தொடை

செய்யுளின் ஒரு அடி முழுவதும் ஒரு சொல்லே வரும்படியாகத் தொடுப்பது இரட்டைத் தொடை எனப்படும்.

"ஒக்குமேஒக்குமேஒக்குமேஒக்கும்
விளக்கினிற் சீறெரிஒக்குமேஒக்கும்
குளக்கொட்டிப் பூவின் நிறம்''

'ஒக்குமே' என்னும் ஒரே சீரே ஒரு அடி முழுவதும் வந்து அழகு சேர்த்து இரட்டைத் தொடையாயிற்று.

"பூவேபூவேபூவேபூவேபூவே
பூவேபூவேபூவேபூவேபூவே
பூவேபூவேபூவேபூவே
பூவேபூவேபூவே" (படம் :பூவெல்லாம் கேட்டுப்பார்)

இப்பாடலில் 'பூவே' என்னும் ஒரே சொல்லே ஓரடியில் மட்டுமல்ல நான்கு அடிகளிலும் வந்து சிறப்புச் செய்தது அரிதிலும் அரிதாகும்.

செந்தொடை

மோனை, எதுகை முதலாய் தொடைகள் ஏதும் பயின்று வராமல் வேறுபட தொடுக்கப்பட்டதால் செந்தொடை எனப்பட்டது.

"பூத்தவேங்கைவியன்சினைஏறி
மயிலினம் அகவும் நாடன்
நன்னுதல் கொடிச்சிமனத்தகத் தோனே''

பூவுடன் கூடிய பரந்த கிளைகளையுடைய வேங்கை மரத்தில் மயில்கள் கூட்டம் கூட்டமாக அமர்ந்திருந்து அகவும். அத்தகைய குறிஞ்சிநாட்டுத் தலைவனே! குறிஞ்சிநிலப் பெண்ணாகிய கொடிச்சியின் மனத்தில் நீயே நீங்காமல் நிலை பெற்றிருக்கின்றாய் என இப்பாடலில் இயல்பாக தலைவன் - தலைவியின் களவொழுக்கம் பற்றிப் பேசப்படுகிறது.

"சிந்துநிதியின்மிசைநிலவினிலே
சேரநல் நாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத்தெலுங்கினில் பாட்டிசைத்து
தோணிகளோட்டிவிளையாடிவருவோம் (படம் : கை கொடுத்ததெய்வம்)

எவ்வித தொடைலயத்திற்கும் கட்டுப்படாத மகாகவி பாரதியின் இப்பாடல் தமிழின், தமிழனின் தமிழ் நாட்டின் பெருமை சொல்வதைக் கேட்டும், பார்த்தும் இன்புறுவது மனதுக்கு இனிமை தருவதல்லவா!

தொல்காப்பியம், யாப்பருங்கலக் காரிகை போன்ற இலக்கண நூற்களில் குறிப்பிடப்படும் இலக்கண விதிகளுக்குச் சான்றாகப் பல திரையிசைப் பாடல்கள் காணப்படுகின்றன. இவையனைத்தும் எளிமையான எடுத்துக்காட்டுகளாகவும் இனிமையானப் பாடல்களாகவும் இலக்கிய உலகில் வலம்வந்து கொண்டிருக்கின்றன. திரையிசைப் பாடலாசிரியர்களின் யாப்பிலக்கணப் புலமைக்குச் சான்றாகவும் விளங்குகின்றன.

துணைநூற் பட்டியல்

1. இராசா.சி. *தொல்காப்பியம்* (பொருள்திகாரம்பகுதி -2) 2008.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, December-2019 **Available at: www.ijtlls.com**

2. திருஞானசம்பந்தம், ச. *யாப்பருங்கலக் காரிகை* (மூ. உ) 2011.
3. கண்ணகிகலைவேந்தன் (ப. ஆ), *நாடகக் கலையும் திரைத்தமிழும்*, 2006

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies

A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, December-2019 Available at: www.ijtlls.com

"அஞ்ஞாடி" புதினத்தில் வாழ்வியல் பாடல்கள் விவரிக்கும் சமூகம்

Society Depicted in the Folklore of the Novel "Agnaadi"

[1]**ஸ்ரீ. நிர்த்தியா,** முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்க் கலைஆய்வு மையம், தெ.தி. இந்துக் கல்லூரி, நாகர்கோவில் - 629 002.
[2]**முனைவர் இரா. நி. ஸ்ரீகலா** (நெறியாளர்), உதவிப்பேராசிரியர்,
தமிழ்க் கலைஆய்வு மையம், தெ.தி. இந்துக் கல்லூரி, நாகர்கோவில் - 629 002.

Abstract

The novel "Agnaadi" is relatively a fiction, normally written in prose form. the events are accommodated to the ordinary train of human events and the modern state of 19 C society. Folklore is another form which depicts the way characters manage to talk about their everyday life events, including conflicts or crises. In Simple, folk literature is about individual experiences of a particular society. The main purpose of folklore is to convey a moral lesson and present useful information. In the modern academic world, folklores are studied to understand ancient literature and civilization.

Keywords: Society, Folklore, Novel "Agnaadi"

மானிட வாழ்வியல் பயணத்தில், கடந்து வந்த பாதைகளின் அடிச்சுவட்டை கலையழகுடன் தனது இலக்கியப் படைப்புகள் வழி பிரதிபலிக்கச் செய்யும் படைப்பாளியான பூ. மாணிக்க வாசகம் என்ற இயற்பெயர் கொண்ட பூமணி ஆசிரியர் கவிதை, சிறுகதை, நாவல், உரையாடல், கட்டுரை, மொழிபெயர்ப்பு, திரைப்படம் எனப் பல படைப்புத் தளங்கள் வழி தன் இலக்கியத்திறனை வெளிப்படுத்தியுள்ளார். தனது அனுபவங்களை இலக்கியங்கள் வழி கலைப்படுத்துபவர். இவரது 'அஞ்ஞாடி' புதினம் 2014-ம் ஆண்டிற்கான சாகித்திய அகாதெமி விருது உள்பட பல விருதுகளைப் பெற்ற சிறப்புக்குரியது.

வர்ண, மத பேதங்கள் மறைந்து வண்ண மயமாய், நல்ல சமூகம் அமைய வேண்டும். வேறுபாடுகள் அகன்று ஒற்றுமை நிலவ வேண்டும். பூசல்களைத் தகர்த்து மனித நேயம் மலர வேண்டும். அடிமைத் தழைகளை அகற்றி சுமூகமான சமூகம் உருவாக வேண்டும் என்ற நோக்கத்தில், நம் பாரத நாடு சிறப்புற்றுத் திகழ, நம்மிடையே வளர்க்க வேண்டிய நல்ல பண்புகளை அஞ்ஞாடி புதினம் சிந்திக்கச் செய்கின்றது.

சமூகத்தில் நிலவிய ஏற்றத்தாழ்வுகளால், திணிக்கப்பட்ட வரிச்சுமை, புனித இடங்களுக்கு அனுமதி மறுப்பு, தன் மானம் காக்க எழுச்சிகுரல் எழுப்ப வேண்டிய நிர்பந்தம், சம உரிமை பெற எழுந்த போராட்டங்கள், அதனால் ஏற்பட்ட மரணங்கள். வழக்குகள், தீர்வுகள் என பெரிய வரலாற்றின் உயிர்ப்பான பதிவாக அமைந்துள்ளது அஞ்ஞாடி புதினம். மனிதர்களது சமுதாய மதிப்புகள் வெற்றி பெறுவதைக் குறிக்கோளாகக் கொண்ட இப்புதினத்தில் மக்களின் வாழ்வியலை விவரிக்கும் பல பாடல்கள் இடம் பெற்றுள்ளன. அவ்வகையில் அஞ்ஞாடி புதினத்தின் வழி வாழ்வியல் பாடல்கள் உணர்த்தும் சமுதாயதச் சிந்தனைகளை ஆராய முற்படுகின்றது இக்கட்டுரை.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, December-2019 Available at: www.ijtlls.com

வாழ்வியல் பாடல்கள்

வாழ்க்கையின் இன்பத்துன்ப நிகழ்வுகளில் இயல்பாய் புலப்படும் புன்னகையும், கண்ணீர் துளியும் போல, மனித மனத்தை வெளிப்படுத்தும் சொற்சித்திரமாய் திகழ்வது வாழ்வியல் பாடல்கள்.

"மனித உள்ளத்தின் ஆளத்தையும், அங்கே தோன்றி எதிரொலிக்கும் பல்வேறு இதய ஒலிகளையும் இன்ப துன்பங்களையும் ஆசா பாசங்களையும் வாழ்க்கைப் போராட்டங்களையும் நாட்டுப்புறப்பாடல்களில் காணலாம்"[1]. இதன் அடிப்படையில் அமைந்ததே வாழ்வியல் பாடல்கள்.

தாலாட்டு

கள்ளம் இல்லா குழந்தைகளின் வருங்காலம் குறித்து கற்பனை செய்யும் உறவுகளின் வர்ணனைகள் தாலாட்டாய் பரிணமிக்கின்றன. குழந்தை துயில் கொள்ள, தாலாட்டிசைக்கும் பாடல்களின் பொருண்மைகள் எண்ணிலடங்காதவை. நாவலில் தனக்குப் பிள்ளைச் செல்வம் கிட்டாத நிலையில், தன் மாமியாருக்குப் பிறந்த இளைய மகளான செவனம்மாவை துயில் கொள்ளச் செய்ய, வீரம்மா ஒரு பிள்ளைத்தாச்சி போல்

"….. நீலவளவி தொடும் - எஞ்செல்ல மகளுக்கு
நெறத்துக்கொரு பச்சதொடும்
கோல வளவி தொடும் - நான் பெத்த மகளுக்கு
கொணத்துக்கொரு பச்சதொடும்"[2]

என தாலாட்டிசைப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

விளையாட்டுப் பாடல்கள்

குழந்தைகளின் வளர்ச்சி நிலைகளில் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் பல பாடல்கள் இடம் பெறுகின்றன. அவர்கள் மகிழ்ச்சியுடன் விளையாடும் பருவத்தில், கேலி செய்தும், விளையாட்டின் தன்மைகளை எடுத்துரைத்தும், என தங்களின் மன நிலையை விளையாட்டுப் பாடல்களாய் விளக்குகின்றனர். அஞ்ஞாடி புதினத்தில் மரபாச்சி விளையாட்டு, தட்டாங்கல், சடுகுடு, குடட்டி என பல விளையாட்டுகளில் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. ஆண்டியின் மகள் வீரம்மா நிலாக் காலத்தில் பூசணிப்பழம் தூக்கி விளையாடும் போது

"சித்தகத்திப் பூவே மெல்ல வந்து மெல்லப்போ
செவ்வரளிப் பூவே மெல்ல வந்து மெல்லப்போ
துத்திப் பூவே மெல்ல வந்து மெல்லப்போ
தும்பப் பூவே மெல்ல வந்து மெல்லப்போ
மஞ்சணத்திப் பூவே மெல்ல வந்து மெல்லப்போ
மாதுளம் பூவே மெல்ல வந்து மெல்லப்போ"[3]

என அடுக்ககடுக்காய் பல பூக்களை கோர்த்துப் பாடல் பாடியமை விளக்கப்பட்டுள்ளது.

தொழில் பாடல்கள்

மனித வாழ்வாதாரத்தைப் பூர்த்தி செய்ய உழைப்பு அவசியம். வியர்வை சிந்த உழைக்கும் தொழிலாளர்கள் பணிச்சுமையும், களைப்பும் தெரியாமல் புத்துணர்வுடன் பணியில் ஈடுபட பாடல்களைப்பாடுகின்றனர். உழைப்பாளர்களின் மனநிலையை பிரதிபலிப்பதாய் அப்பாடல்கள் அமைந்துள்ளன. அஞ்ஞாடி புதினத்தில் ஆண்டியுடன் விளையாடித் திரிந்த மாரி திருமணத்திற்குப் பின் தந்தையுடன் வெளுப்புத் தொழிலில் முனைப்புடன் ஈடுபடுகிறார். சலவைத் தொழிலில் கைகள் செயலாற்ற, உதடுகளும், உள்ளமும் சந்தம் அமைக்கத்தூண்ட, தன்னை மறந்து பாடுகிறார்.

"அடி வானம் வெளுத்துருச்சு
அடஞ்சபொழுது மொளச்சிருச்சு
வெயிலேறிக் காயுமுன்னே

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, December-2019 Available at: www.ijtlls.com

வெள்ளாவித் துணியெடுத்து
கழுதையில பொதியேத்தி
கம்மாய்க்குப் போகவேணும்"[4]

மகனின் நல்ல மாற்றம், அவனது பாடலிலும், செயலிலும் புலப்பட பெற்றோர் மகிழ்வுற்றனர்.

தொழில் பாடலில் மலர்ந்த மழைப்பாடல்

மழை வளம் பெற்று மண் வளம் சிறப்புற, மகிழ்ச்சியுடன் பணிக்குத் திரும்பிய மாரி ஆனந்தத்தில்

"காலமழ பொழிஞ்சது
காடு கர நனஞ்சது
கோணிகொளம் நெறஞ்சது
கோட வெயிலு மறஞ்சது
நஞ்சபிஞ்ச வெளையுமாம்
நம்ம பஞ்சம் தொலையுமாம்
நெறையவேல இருக்குமாம்
நெதமுங் கூலி கெடைக்குமாம்"[5]

மழை வளத்தால் கிடைக்கும் பயன்களைப் பாடல் வழி விளக்கியுள்ளார்.

உணவும் பாடலும்

பசியைப் போக்க உழைக்கும் மக்கள், சுவைக்கும் உணவின் தன்மையையும் பாடலில் வெளிப்படுத்தியுள்ளனர். நாவலில் 'துப்பன்' உணவையும் அதற்குரிய வெஞ்சனத்தையும் சுவைக்க தன்னைச் சுற்றியுள்ளோர். அதன் சொற்சுவையினை உணரும் வகையில் பாடல் பாடுகின்றார்.

"கம்மஞ்சொறே நீ
கள்ளத்தனம் பண்ணாத
கருவாட்டுக் கொழம்புவச்சுக்
கடத்தீருவென் வகுத்துக்குள்ள
சோளச்சோறே நீ
தோரணையாச் சிரிக்காத
வாளக் கருவாட்ட
வதக்கி ஒன்னத் தீட்டீருவேன் ...."[6]

கும்மிப்பாடல்

பக்தியின் போதும், விழாக்களில் மகிழ்ச்சியின் பொருட்டும், பெண்கள் இணைந்து வட்டமாக சுற்றி சுற்றி பாடல்பாடி கும்மியடிப்பர். நாவலில் வேம்படியில் மாவிளக்கை இறக்கி வைத்து விட்டு சிறுபெண்கள் சுற்றிச்சுற்றி கும்மியடிக்கிறார்கள். இதனை,

"வேப்ப மரத்தவும் தூருங்கம்மா
வெத்தலப் பந்தலப் போடுங்கம்மா
வேத்துவாற நம்ம தாயிக்கு
வெள்ளிக் குஞ்சங் கொண்டு வீசுங்கம்மா"[7]

என்ற பாடல் வழி அறியலாம்.

ஒப்பாரிப்பாடல்

இறந்தவர்களை நினைத்து அவர்கள் மீது பாடப்படும் பாடல்களே ஒப்பாரி. இறந்தவர்களின் பெருமை, அவர்களின் இழப்பின் வேதனை, உறவு முறை ஆகியவை ஒப்பாரிப் பாடலின் பொருளாக அமைந்துள்ளது. கருப்பி தன் மகள் வீரம்மா இறந்த வேதனையில்,

"நெய்யூத்திப் பாத்திகெட்டி

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, December-2019 Available at: www.ijtlls.com

நெல்லிமரம் நட்டிவச்சென்
நெல்லிமரம் காய்க்கு முன்னே – நான் பெத்த மகளே நீ
நித்திரையும் ஆனதென்ன"[8]

என துயரத்தில் தன் உள்ளம் தூக்கத்திற்கு மறுக்க, காரணமான மகளை எண்ணி ஒப்பாரி பாடுகிறார்.

கோடாங்கிப்பாடல்

சின்னக்குருவு என்ற இளம்பெண் நடுச்சாமத்தில் எழுந்து அலற, மகளின் மாற்றங்களைக் கண்ட பெற்றோர் வேதனையில் கோடாங்கியை அழைத்து வந்து காரணம் அறிந்து குணப்படுத்த குறிகேட்டனர். கோடாங்கி சின்னக்குருவிடம்

"ஒனக்கு
என்ன என்ன வேணுஞ்சாமி – நீயும்
எறங்கி வந்து சொல்லுசாமி – எஞ்சாமி
சொல்லுசாமி
ஏழு கடல் தாண்டி நானும் - ஒனக்கு
எடுத்து வந்து குடுத்துருவென் - எஞ்சாமி
குடுத்துருவென்"[9]

என பாடல் பாடி குறி கேட்டு அறிந்தமை விளக்கப்பட்டுள்ளது.

உயர்வான எண்ணம்

"ஒவ்வொரு மனிதனுக்கும் உரிமையும், மகிழ்ச்சியும் தேவை. தேவைகளைப் பெற, வளரவும், வாழவும் தடையில்லாத முன்னேற்றமான ஆக்கங்கள் வேண்டும்"[10] நல்ல எண்ணங்கள் நாம் செய்யும் செயலில் பாதி வெற்றிக்கு வழி வகுக்கும். இதன் அடிப்படையில் நாவலில் கழனியில் விதைப்பில் ஈடுபடுவோர் விளைச்சல் சிறக்க,

"வேலாண்டி தொணையிருக்க
பாலாகப் பெருக வேணும்
கொழுந்தாடும் கொடியாக
குடும்பம் தழைக்க வேணும்"[11]

என வாழ்த்துப்பாடல் பாடுகின்றனர்.

தொகுப்புரை

சமூக மேம்பாட்டிற்கான பாதைகளை நோக்கி பயணிக்க, நமக்கு வழிகாட்டுபவை இலக்கியங்கள். மக்களின் நாகரிகம், பண்பாடு, பழக்க வழக்கங்கள், நாட்டு நடப்பு, வரலாறு என அத்தனையையும் புதின இலக்கியங்கள் வழி நாம் அறிய முடிகிறது. **"மனிதனுடைய விருப்பு வெறுப்புகளையும், எண்ணங்களையும், எழுச்சிகளையும் வேட்கைகளையும், குறிக்கோள்களையும் எதிரொலிக்கிறது".[12]** இதன் அடிப்படையில் அமைந்த அஞ்ஞாடி புதினம் அக்கால மக்களின் வேதனைகளையும் அவற்றிலிருந்து மீண்டு உயர்வு பெற வேண்டும் என்ற எண்ணத்தையும் உணர்த்துகின்றது. நல்ல மாற்றங்கள் மலர வேண்டும். நல்ல சமூகம் அமைய வேண்டும் என்று நல்வாழ்வு வாழ விரும்பும் நாம், நமது உள்ளத்திலும், செயலிலும் நம்பிக்கையோடு திகழ்ந்து, அவற்றின் உறுதியோடு செயலாற்ற நம் வாழ்வும் சிறக்கும்; சமூகமும் மேம்படும்.

துணை நூற்கள்

1. சு. சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, பக்கம். 28 – 29.
2. பூமணி, அஞ்ஞாடி, பக்கம். 246.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, December-2019 Available at: www.ijtlls.com

3. மேலது, பக்கம். 91.
4. மேலது, பக்கம். 45.
5. மேலது, பக்கம். 259.
6. மேலது, பக்கம். 141.
7. மேலது, பக்கம். 205.
8. மேலது, பக்கம். 322.
9. மேலது, பக்கம். 342.
10. பி. குமரேசன் - கவிஞர் தே. ப. பெருமாள் கவிதைகள் ஓர் ஆய்வு, பக்கம்.179.
11. பூமணி, *அஞ்ஞாடி*, பக்கம். 364.
12. அ.ச. ஞானசம்பந்தன, இலக்கியக்கலை, பக்கம்.47.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, December-2019 Available at: www.ijtlls.com

தமிழ் இலக்கியத்தில் பரதவர்

Parathavar Community in Tamil Literature

முனைவர் நே.நிஷாநேவிஸ், உதவிப்பேராசிரியர்,
தமிழ்க் கலைஆய்வு மையம், தெ.தி. இந்துக் கல்லூரி, நாகர்கோவில் - 629 002.

Abstract

The Parathavar are one of the ancient tribes who lives aside the sea shores of Tamil Nadu's coast line. Parathavar are also known as Paravar or Bharathar. This community has been mentioned in Tamil Sangam Literature texts. They were maritime inhabintants of the littoral Sangam landscape known as 'Neithal', who were involved in fishing, harvesting of pearl oyisters, chank, and matrime trades. Works in the Tamil Sangam literature which refer to the lives of Parathar include are Ettuthokai, Pathupattu, Ahanannru, Nattrinai, Kurunthogai. This article explains how these ethnic people are mentioned in the ancient Tamil Literature.

Keywords: Parathavar Community, Tamil Literature

பரதவர், பரதர் அல்லது பரவர் என்போர் மிகப்பழமையான தொல்குடிமக்கள் ஆவர். ஐயாயிரம் ஆண்டு பாரம்பரியம் மிக்க இம்மக்கள் மீன்பிடித்தல், முத்துக்குளித்தல் போன்ற தொழில்களைச் செய்து தங்கள் வாழ்க்கையில் பெருஞ்செல்வந்தர்களாகச் சிறப்புடன் வாழ்ந்தவர்கள். மேலும் குறுநில அரசர்களாக, வணிகர்களாக, பட்டங்கட்டிகளாக, அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவராக வாழ்ந்தவர்கள். இத்தகைய சிறப்பு மிக்க இச்சமுதாய மக்கள் குறித்து சங்க இலக்கியங்களில் அதிகமாக காணக்கிடக்கின்றன. பரதவர்களின் சிறப்பையும் சங்க இலக்கியங்கள் பரதவர் குறித்த செய்திகளையும் தொகுப்பதே ஆய்வின் நோக்கமாகும்.

> **பரதர், பரதவர், பரவர், வலையர் எனும் சொற்கள் நாகர் இனத்தவரான மீனவர்களைக் குறிக்கும் சொற்களாகும் என்பது ஜேம்ஸ் ஆர்னலின் கூற்று.[1] கி.பி.1912 இல் அங்காள பரமேஸ்வரி உவர்ப்பவ புராண சரித்திரத்தைப் பதிப்பித்த மேல் மலையனூர் வீரப்பதாசன் ஆதி ஐதீக புராணத்தில் தொண்ணூறு பரதவச் சமுதாய முன்னோடிகளைத் தொகுத்து கூறியுள்ளார்.[2]**

சங்ககாலத்தில் பரதமக்கள் குறுநில மன்னர்களாகவும் தாங்கள் வாழும் பகுதிகளில் பாண்டிய நாட்டரசின் அதிகாரம் பெற்ற தலைவர்களாகவும் வாழ்ந்து வந்தனர். பரதவர் திறங்கண்டு வியந்த பாண்டிய மன்னர்கள் கடற்கரையடுத்த பகுதியை ஒரு குறுநில அரசாகவே கருதினர். இத்தகைய சீரும் சிறப்புமிக்க பரதவர்கள் குறித்த செய்திகள் இலக்கியங்களின் வாயிலாக தொகுக்கப்பட்டுள்ளது.

தமிழக வரலாற்றில் முதலில் தொகுக்கப்பட்ட ஆதாரமாகத் திகழ்வன சங்க இலக்கியமான எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் ஆகும். இதில் முதல் மூன்று நூற்றாண்டு, இராமேஸ்வரம் முதல் குமரி வரை வாழ்ந்த பரதகுல மக்களைப் பற்றி பல்வேறு இடங்களில் குறிப்பிடுகின்றன. சங்ககாலக் கவிதையில் ஐந்தில் ஒன்று இவர்களின் வீரத்தையும் காதலையும் சிறப்பித்துக் கூறுகின்றது. சங்க பாடல்களுள், பத்துப்பாட்டு, பதிற்றுப்பத்து,

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, December-2019 Available at: www.ijtlls.com

புறநானூறு, ஆகிய புறத்திணைப் பாடல்களில் 120 வரிகளும் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, ஐங்குறுநூறு, கலித்தொகை ஆகிய அகத்திணைப் பாடல்களில் 410 பாடல்களும் பரதவர் குறித்துப் பேசுகின்றன என்பார் தமிழறிஞர் திரு.கேசவராமன்.[3]

பரதவர் என்றாலே மீன்பிடித் தொழில் செய்பவர்கள் என்பதை உணர்த்தும் சங்க இலக்கியங்கள் குறித்து காணலாம்.

"திண்திமில் வன்பரதர்'(புறம்-24)
உறுதிமிக்க படகையாளும் வலிமைமிக்க பரதர்
"புன்தலை இரும் பரதவர்" (பட்டினப்பாலை-90)

உப்புநீர் படுவதால் பழுப்பேறிய தலைமுடியைக் கொண்ட வலிமை மிக்க பரதவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பரதவர் மீன்பிடித் தொழில் செய்வதற்காக பயன்படுத்திய கருவிகள் குறித்தும் தொழில்நுட்பங்களைக் குறித்தும் சங்க இலக்கியங்களில் காணலாம்.

"மீன் எறி பரதவர்" (நற்றிணை 45)
எறி உளியால் கடல் மீன் மேல் எறிந்து
புண்படுத்தும் பரதவர் ஆவார்.
"உரவுக் கடல் உழந்த பெருவலைப் பரதவர்" (நற்றிணை 63)

வலிமைமிக்க கடலில் படகில் சென்று பெருவலையை பாய்ச்சி இழுக்கும் பரதவர்களாக இருந்துள்ளனர்.

"இருங்கழித் துழாவும் பனித்தலைப் பரதவர்" (நற்றிணை 373)

உப்பளங்களில் உள்ள மீன்களை மூழ்கிப் பிடிக்கும் உழைப்பால் நனைந்த தலையையுடைய பரதவர்.

"திண்திமில் பரதவர்" (குறுந்தொகை 388)

உறுதிமிக்க மீன்படகைச் செலுத்தும் பரதவர்.

"நுண்வலைப் பரதவர்" (குறுந்தொகை 184)

நுட்பமான கண்களையும் முடிச்சிகளையும் கொண்ட வலையைக் கையாளும் பரதவர்.

"கொடுந்திமில் பரதவர் கோட்டு மீன் எறிய" (குறுந்தொகை 304)

வளைந்த படகில் கடலுக்குச் சென்று எறியுளியால் அங்குத் திரியும் வாள்சுறாவின் மேல் எறிந்து காயப்படுத்தும் பரதவர்.

"பெருங்கடல் பரதவர்" (குறுந்தொகை 320)

தொலைதூரப் பெருங்கடல் மேல் அச்சம் இன்றிச் செல்லும் பரதவர்.

"பழந்திமில் கொன்ற பரதவர்" (அகநானூறு 10)

பழுதுபட்ட பழைய படகைக் கழித்து விடும் பரதர் அல்லது விறகுக்காகச் சிதைக்கும் பரதவர்.

பரதவர் தங்கள் மீன்பிடித் தொழிலில் கையாண்ட யுக்திகள் மீன்பிடிக் கருவிகள் குறித்து தெளிவாகப் புலப்படுகிறது.

பரதவர் குடியிருப்புகள் குறித்தும் இலக்கியங்கள் தெளிவுப்படுத்துகின்றன.

"கானலம் சிறுகுடிக் கடல்மேல் பரதவன்" (நற்றிணை4)

கடற்கரைச் சோலையில் அமைந்த சிறுகுடி என்னும் குடியிருப்பில் இருந்து கடல்மேல் செல்லும் பரதவன்.

"பெருங்கடல் வேட்டத்தும் சிறுகுடிப் பரதவர்" (அகநாநூறு 140)

பெருங்கடலில் மீன் வேட்டைக்காகச் செல்லும் சிறிய குடியிருப்பில் வாழும் பரதவர். மேலும் பரதவர் மீன் பிடிக்க அதிகாலையில் கடலுக்குச் சென்றுள்ளனர் என்பதை இலக்கியம்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, December-2019 Available at: www.ijtlls.com

சுட்டுகின்றது. இன்றைய காலகட்டத்திலும் அதேபோல் அதிகாலையில் மீன்பிடிக்கச் செல்கின்றனர்.

"நாள் வலை முகந்த கோள்வல் பரதவர்" (அகநானூறு 300)

இளங்காலைப் பொழுதில் புதிதாகப் பின்னிய வலையால் பாடு அறிந்து மீன்களைப் பிடிக்கும் பரதவர்.

"வலம்புரி மூழ்கிய வான்திமில் பரதவர்" (அகநானூறு 350)

பெரிய படகில் கடலுக்குச் சென்று மூழ்கி வலம்புரிச் சங்குகளைக் கொண்டு வரும் பரதவர்.

இதன்மூலம் பண்டைத் தமிழகத்தில் மீன்பிடித்து வாழ்ந்தவர்கள் பரதவ மீனவர்கள் என்பதையும் நீரில் மூழ்கி வலம்புரிச் சங்குகளையும் கொண்டு வந்துள்ளனர் என்பதை சங்கப் பாடல்கள் மூலம் நமக்குப் புலனாகிறது.

மேலும் பரதவர் என்ற சொல்லுக்கு அயல்நாட்டுடன் கடல் வணிகத்தில் ஈடுபட்டவன் என்று இலங்கை கல்வெட்டு குறித்துள்ளன.

நெய்தல் திணைக்கு உரியவர்களை நினைக்கும் பொழுது "பரதவர்" என்னும் மக்கள் தாம் நம் கண்முன் தோன்றுவர்" என்று கவிஞர் மீனவன் குறிப்பிடுகிறார்.

தமிழில் பரவை என்றால் பெரும் நீர்பரப்பு அல்லது கடல் என பொருள்படும். பரவை என்பதிலிருந்து பரவர் சொல் பிறந்தது (பரவை+அர்) பரதர் என்றால் நெய்தல் நிலமக்கள், வைசியர் எனவும் பரதர் என்ற சொல்லுக்குத் தென்திசை ஆண்ட குறுநில மன்னர்கள் எனவும் அகராதிகள் பொருள் கூறுகின்றன.

> **பரதவர் செய்யும் தொழில், வாழிடம் பயன்படுத்தும் கருவிகள் வைத்து வேறு பெயர்களிலும் அழைக்கப்படுகின்றனர் செப்பு உலோகத்தால் படகு செய்து மீன் பிடித்தமையால் இப்பரதவர் செம்படவர் எனப்பட்டனர்.**[6]

மேலும்,

> **"கரையார்" என்றும் பரதவருக்கு ஒரு பெயருண்டு கடற்கரை. அனைத்தும் அவர்களுக்குச் சொந்தம் கரையோரமே அவர்களது குடியிருப்பு இருந்தது. எனவே கரையார் எனும் பெயர் எழுந்தது. இனி கடலின் கரைகளிலே அவர்கள் பட்டினம் பல கட்டினர், துறை பலவும் சமைத்தனர். ஆகவே "பட்டினவர்" என்ற பெயரும் உண்டு.**[7]

நாவாயில் (நாவாய்-மரக்கலம்) கடல் வணிகம் செய்தவர் "நாவிகர்" என்று பெயர் பெற்றனர். கடல் வணிகம் செய்த பெரிய நாவிகன் மாநாவிகன் ஆவார். மாநாவிகர் மருவி "மாநாய்கர்" என்று வழங்கப்பட்டது. **நாவாய்களில் வணிகம் செய்தவரை "நாவிகன்" என்றும் அழைத்தனர். நாவிகன் என்பது மருவி "நாய்கன்" எனப்பட்டார் என்கிறார் மயிலை சீனிவெங்கடசாமி.**[8]

மேலும், சிலப்பதிகாரத்தில் பல இடங்களில் பரதவர் பற்றிய குறிப்புகள் காணக்கிடக்கின்றன. ஐந்தாம் காதையாகிய இந்திரவிழவூரெடுத்த காதையில் கூறப்படும்,

> "அரச குமரரும் பரதகுமரரும்
> கவர்பரிப் புரவியர் களிற்றின் தொகுதியர்
> இவர்பரித் தேரினர் இயைந்தோருக்கு ஈண்டி"

(இந்திரவிழவூரெடுத்த காதை 158-160)

என்ற அடிகள் மூலம், வீதிகளில் அரசகுமரரும் பரதகுமரரும் குதிரைகள் களிறுகள் ஆகியவற்றைப் பல எண்ணிக்கையில் உடையவராகவும் தேரை உடையவராம் அந்நகர் பரதர் திகழ்ந்தனர் என்பது அக்காலத்தில் அப்பரதர் பெற்றிருந்த செல்வச் செழிப்பையும் உணர்த்தி நிற்கின்றன.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, December-2019 Available at: www.ijtlls.com

சிலப்பதிகாரத்தை அருபம்பத உரையுடனும் அடியார்க்கு நல்லார் உரையுடனும் தென்கலைச் செல்வர் டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் வெளியிட்டார். இதில் பரதவர் என்னும் சொல்லுக்கு ஒவ்வொரு உரையாசிரியரும் ஒவ்வொரு பொருளைத் தருகின்றனர்.

"உரைசால் சிறப்பின் அரசுவிழை திருவின்
பரதவர் மலிந்த பயங்கெழு மாநகர்" (மனையறம்படுத்த காதை 1-2)

புகழ்பொருந்திய சிறப்பினையுடையவர்களும் அரசர்மதிக்கும் செல்வவளம் மிகுந்தவர்களும் ஆகிய பரதவர்கள் நிறைந்து வாழ்வதால் பயன்பெற்று விளங்கும் பூம்புகார் நகரம் இங்கு "பரதவர்" சொல்லுக்கு 'வணிகர்', 'கடலோடிகள்' என்றும்

"மீன்வலைப் பரதவர்" (இந்திரவிழவூரெடுத்த காதை 25)

இதில் 'பரதவர்' என்னும் சொல்லுக்கு 'பட்டினவர்' என்றும்,
அதேபோல்,

"அரச குமாரரும் பரதகுமாரரும்" (இந்திரவிழவூரெடுத்தகாதை 158)

இதில் 'பரதர்' என்ற சொல்லுக்கு "பட்டினவர்" என்று பொருள் தருகிறார் அடியார்க்கு நல்லார்.

'பரதவர்' அல்லது 'பரதவர்' என்றும் பழந்தமிழ்ச் சொல்லுக்கு வணிகர், கடலோடிகள் என்னும் பொருளைப் பழைய உரையாசிரியர்களும் புதிய உரையாசிரியர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

பரதர், பரவர் எனும் பெயர்கள் நெல்லை, இராமநாதபுரம், தூத்துக்குடி, குமரிமாவட்டத்திலும், சென்னை, செங்கற்பட்டு, தென்னாற்காடு தஞ்சை மாவட்டங்களில் வாழும் மீனவர்கள் பட்டினவர், கரையார் என்ற பெயர்களிலும் இராமநாதபுரம் குமரி மாவட்டங்களில் ஒரு பகுதியினர் முக்குவர் என்ற பெயரிலும் வாழ்கின்றனர். பரதவர், பரதர், பரவர் என்ற முப்பெயர்களும் எழுந்து வேறுபாடுகளைக் கொண்டவைதாம். பரதவர் என்ற பெயரில் தகரம் கெட்டு 'பரவர்' என்றும் வகரம் கெட்டு 'பரதர்' எனவும் மாறியுள்ளது.

"திணைதொறு மரீஇய திணை நிலைப் பெயரே"[9]

என்ற தொல்காப்பிய நூற்பாவிற்கு விளக்கம் கூறுகின்ற இளம்பூரணார் நெய்தல் நிலமக்கட் பெயர்களாக நுளையர், நுளைச்சியரையும் தலைமக்கட் பெயர்களாகத் துறைவன், கொண்கண் ஆகிய பெயர்களையும் குறிப்பிடுகிறார். இவர்களோடு **பரதவர், பரத்தியரை நெய்தல் நிலப் பெயர்களாக இறையனார் பொருள் கூறுகின்றார்.**[10]

ஐவகை நிலங்களுள் ஒன்றான நெய்தல் நில மக்கள் தொன்றுதொட்டு இன்றுவரை பரதவர் என்றே வாழ்ந்து வருகின்றனர். பரதவர்கள் தமது சுயத்தை நினைவு கொள்வதற்காகவும், இழந்து நின்றவற்றை மீட்டுப் பெறுவதற்காகவும், இடையறாத - நீண்ட - நெடிய வரலாற்றைக் கொண்டுள்ளது. இச்சமூகம் என்பதை நிறுவுவதற்காகவும் பரதவரின் முந்தைய நிலையை அறிவது அவசியமாகிறது. இன்றைய இளைய சமுதாயம் தன்னை புதுப்பித்துக்கொள்ள வேண்டியது காலத்தில் கட்டாயமாக உள்ளது. பரதவர்களாகிய மீனவர்கள் தங்களை மீட்டுருவாக்கம் செய்து, தங்கள் தொழில் உக்திகளை பெருக்கி கொண்டு மீன்பிடித்தொழிலை மேம்படுத்தி வளம் காண முன்வர வேண்டும். மீனவர் பிறரிடம் கையேந்தாத பிறர்கீழ் வேலை செய்யாத சமுதாயமாகும். இன்றும் தன்னைத் தானே முன்னேற்றிக் கொள்ளும் திறன் படைத்தவர்கள் பரதவர்கள். மேன்மேலும் உழைத்து சமுதாயத்தில், உயர்ந்த மக்களாக வாழ்வார்கள் என்பதில் ஐயமில்லை.

நூற்பட்டியல்

1. James Hornell. *The outrigger conbes of Indonesia*. Madras Fisheries Bulletin P.12).
2. முனைவர் அரு.பரமசிவம், *பரதவர் இன மீட்டுருவாக்க வரைவியல்*, ப.118.
3. கவிஞர் மீனவன், *பண்டைத் தமிழரும் பரதவர் வாழ்வும்*.ப.60.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, December-2019 Available at: www.ijtlls.com

4. அநுராதாபுரம், *அபயகிரிக் கல்வெட்டு*, I.C.1970 N.94.
5. சேலை சகாதேவ முதலியார், *காழி சிவகண்ணு சாமிப்பிள்ளை கழகத் தமிழகராதி*, ப.647.
6. முனைவர் அரு.பரமசிவம், *பரதவர் இன மீட்டுருவாக்க விரைவியல்*.ப.21
7. எம்.எஸ்.சுப்பிரமணிய *அய்யர் பரதர் மதம்மாறிய கதை.* தினமணி சுடர் 27.09.1989, வார அறுபந்தம்).
8. மயிலை சீனிவெங்கடசாமி, அ.கா.பெருமாள் (தொகுப்பாசிரியர்) *கானலம் பெருந்துறை*, ப.32.
9. தொல்காப்பியம், *பொருளியல், அகத்திணையியல்*, நூற்பா.20.
10. இறையனார் *அகப்பொருள்* உரை,ப.20.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, December-2019 Available at: www.ijtlls.com

முனைவர் ஸ்ரீகுமாரின் ஆய்வுகளை முன் வைத்து விளிம்பு நிலை நாவல்களும் அணுகுமுறைகளும்

Marginalization Novels and its Approaches in Dr. Sreekumar's Research Perspective

முனைவர் ப.ம.மயிலா, இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
ஸ்ரீ அய்யப்பா மகளிர் கல்லூரி, சுங்கான்கடை.

Abstract

Literature is born from society. Literature ad society are inseparable and society by literature have grown together. Writers of literature have penned the agonizing life of the economically oppressed people. Among them Rajam Krishnan, Poomani and Sridhara Ganesan are remarkable writers. This is the contemporary scenario where marginalization has been spoken and written widely. It was Dr.Sreekumar, who has developed this concept even before the advent of this concept marginalization. He explored the fictional narratives of Poomani's *Pirahu* and Sridhara Ganesan's *Vuppu Vayal*. The main aim of using Dr.Sreekumar's perspective is to highlight how both the novelists successfully documented the problems of the marginalized people to the society.

Keywords: Marginalization Novels, Approaches, Dr. Sreekumar's Perspective

முன்னுரை

சமுதாயத்திலிருந்து பிறந்ததே இலக்கியம். இலக்கியத்ததால் சமுதாயமும் சமுதாயத்ததால் இலக்கியமும் ஒன்றை ஒன்று சார்ந்தே வளர்ந்து வந்துள்ளன. பொருளாதார ரீதியாக நசுக்கப்பட்டு வந்த அடித்தட்டு மக்களின் வாழ்வியற் புலங்களைக் கருவாகக் கொண்டு நாவல் எழுதிய ஆசிரியர்கள் பலர். அவர்களுள் இராஜம் கிருஷ்ணன், பூமணி, ஸ்ரீதர கணேசன், போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். விளிம்பு நிலை என்னும் கருத்துப்படிவம் (concept) பரவலாகப் பேசப்பட்டும் எழுதப்பட்டும் வருகிகின்ற காலகட்டம் இது. இந்த கருத்துப்படிவம் வருவதற்கு முன்பே விளிம்புநிலை மக்களை முன்வைத்து எழுதப்பட்ட நாவல்களை தன் ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட விளிம்புநிலை நாவல்களையும் (பூமணியின் 'பிறகு', ஸ்ரீதர கணேசனின் 'உப்பு வயல்') அவற்றை பற்றிய முனைவர். ஸ்ரீகுமாரின் மதிப்பீட்டினையும் காண்போம்.

'பிறகு'

ஒரு நூற்றாண்டைக் கடந்து நிற்கும் தமிழ் நாவல் பரப்பு பல காலகட்டங்களை உள்ளடக்கியது. குறிப்பாக அம்பேத்கார் நூற்றாண்டு விழாவை சார்ந்து உருவாகிய எழுச்சி, மண்டல் கமிஷன் நடைமுறை, சுதந்திரத்திற்குப் பிறகான கல்வி, வேலை வாய்ப்புகளில் ஏற்பட்ட பங்கேற்புகள் இவையெல்லாம் படைப்பிலக்கியத் தளத்தில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தின. மராத்திய மாநிலத்தை மையங்கொண்டு உருவான தலித் இலக்கியம் என்னும் இலக்கிய வகைமை தமிழகத்திலும் தனது வீச்சினைப் பதிவு செய்தது. யாழன் ஆதி, ஜே.பி. சாணக்கியா, பாமா, சிவகாமி, அழகிய பெரியவன், அபிமானி, சுகிர்தராணி, மதிவண்ணன், ராஜ் கௌதமன், அரங்க மல்லிகா, தய். கந்தசாமி, முனைவர். ஸ்ரீதர கணேசன் என தலித்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, December-2019 Available at: www.ijtlls.com

படைப்பாளர்கள் தமிழுக்குக் கிடைத்தார்கள். இத்தகைய தலித் படைப்பாளிகளில் முக்கியமான ஒருவராக பூமணி கருதப்படுகிறார்.

வைதீகம் உருவாக்கி வைத்திருக்கும் சமூக அடுக்குகளில் மேல் கீழ் என்னும் எதிர் எதிர் நிலைகளில் வாழ்ந்து வரும் ஆதிக்க சக்திகளுக்கும் அடித்தட்டு சாதிகளுக்கும் இடையிலான முரண்பாடுகளே முனைவர் ஸ்ரீகுமார் விவாதத்திற்கு எடுத்திருக்கும் பூமணியின் ‘பிறகு’ நாவலாகும்.

‘பிறகு’ நாவலில் முக்கியமான சமூகமாக முன்னிலைப்படுத்துகின்ற சக்கிலிய சமூகமான அருந்ததியர் சமூகம் மனிதக் கழிவினை மனிதரகற்றும் மிகக் கொடுமையான உழைப்பினை சமூகத்தில் செய்து வருகிறது. வன்கொடுமை சார்ந்த சக்கிலியர் வாழ்விலிருந்து விடுபட இந்த தொழிலிலிருந்து வெளியேறி மாற்றுப்பணித் தேடி செல்லும்போதும் அங்கும் வஞ்சகத்தையும் அதன் தொடர்ச்சியாக செயல்படும் சாதி இழிவு சார்ந்த ஒடுக்கு முறையையும் பூமணியின் ‘பிறகு’ நாவல் பேசுகிறது.

‘பிறகு’ நாவலைப் பற்றிய விமர்சனம் ‘நாவலும் சமுதாயமும்’ நூலில் இடம் பெற்றுள்ளது. பொதுவாக குடியிருப்புகளைக் குறிப்பிட ‘சேரி’ என்னும் சொல்லை பயன்படுத்தியதிலிருந்து மாறி இன்று ‘சேரி’ என்னும் சொல் சாதியால் ஒடுக்கப்பட்டு வாழும் தலித் மக்களின் குடியிருப்புகளாக கழிவுகளோடும் கீழ்மைகளுடனும் பிணைக்கப்பட்டுள்ளது.

> **‘கிழிக்காமல் பார்த்தால் அடித்துப் போட்ட பாம்பாய் சக்கிலியர் குடி தோணிக் கிடைக்கிறது. பெரும்பாலும் ஒற்றை முகடு போட்ட கூரை வீடுகள் கட்டை கட்டையாக ஒரு இருபது தேறும். வீட்டுக் கொட்டாரங்களில் குலம்பு தடம்பட்டு உளம்பலாடிய எருமைச் சாணி நசநசப்பு’ (நாவலும் சமுதாயமும். ப. 104)**

என்று நாவலிலிருந்து சேரி பற்றிய சித்தரிப்பினைக் கொடுக்கும் முனைவர் ஸ்ரீகுமார் அடித்தட்டு மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் இயல்பான வார்த்தைகள் தரக்குறைவானது என்ற விமர்சனத்தையும் கூறத் தவறவில்லை. இதனை

> **‘தாயளி அவன் தொண்டையில் துரு மொளைக்க என்னமாக்கத்தறான் பாரு....’ எனத் தரக்குறைவான வார்த்தைகளைத் தாராளமாகப் பேசி கொள்ளும் ….’**
>
> **(நாவலும் சமுதாயமும். புக். 106-106)**

என்னும் மேற்கோளின் மூலம் அறியலாம். இந்த சமூகத்தில் தொடர்ச்சியாக சில கற்பிதங்கள் சொல்லப்பட்டு வருகின்றன. அவற்றுள் ஒன்று எஜமானர்கள். முதலாளிகள் இவர்களின். தயவில் தான் ஏழைகளும், உழைப்பாளிகளும் வாழ்க்கை நடத்துகின்றனர் என்பது மேல் தோற்றத்தில் இது உண்மை என்ற மாயத் தோற்றத்தை ஏற்படுத்தினாலும் சிறிது சிந்தித்து பார்த்தால் இது சரியான கருத்தல்ல என்பது தெரியவரும். இந்தக் கருத்தை நாவலை முன்வைத்து முனைவர் ஸ்ரீகுமாரும்

> **‘சம்சாரிய நம்பித்தான் சக்கிலியன் பொழைக்கிறான்னு சொன்னாலும் நெசத்துக்கு சக்கிலியன் இல்லைன்னா சம்சாரி பிழைக்க முடியாது என்ற உண்மை அறிந்திருந்தும் வெளிக்காட்டிக் கொள்ளாத ஊமை ஜனங்கள் சக்கிலிக்குடியினர். தனக்கு உரிமைப்பட்ட தேர்தல் ஒட்டைக்கூட சுயமாகப்போட முடியாமல் பணக்காரர்கள் யாருக்கு இடச் சொல்கிறார்களோ அவர்களுக்கு ஒட்டிட முன்வரும் அறியா ஜனங்கள் அவர்கள்’**
>
> **(நாவலும் சமுதாயமும். ப. 106)**

என்று உறுதிப்படுத்துகிறார். முனைவர். ஸ்ரீகுமாரின் மதிப்பீட்டின் படி இந்த நாவல் ஒரு நடப்பியல் நாவலாக கருதப்படுகிறது. இதனை:

> **‘இந்திய விடுதலைக்குப் பிறகு அரசியல் மற்றும் பொருளாதார மாற்றங்களினால் இந்திய கிராமங்களில் ஏற்பட்டிருக்கும் பாதிப்புகளும் அதை**

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, December-2019 Available at: www.ijtlls.com

> **ஒட்டிய இந்திய கிராமக் கலாச்சாரங்களிலும் சமூக கட்டமைப்புகளிலும் ஏற்பட்டிருக்கும் வளர்ச்சி நிலைகளும் பின்னடைவுகளும் கிராமங்களில் மெல்லப் பரவுகின்ற ஜனநாயக உணர்வுகளினால் ஏற்படுகின்ற எதிர்ப்புகளும் என்றில்லாது சமகால இந்திய சமூகத்தையும் கிராமத்தையும் அற்புதமாக சித்தரிக்கும் ஒரு நடப்பியல் நாவல் பூமணியின் 'பிறகு'**
>
> **(நாவலும் சமுதாயமும். ப. 114)**

என்னும் மேற்கோள் மூலம் அறிய முடிகிறது.

'உப்பு வயல்'

ஸ்ரீதர கணேசன் தமிழின் மிக முக்கியமான நாவலாசிரியர்களில் ஒருவர். பலநூறு ஆண்டுகளாகத் தங்கள் மீது திணிக்கப்பட்ட சுரண்டல்களையும், ஒடுக்கல்களையும் எதிர்த்துப் போராடத் தொடங்கியுள்ள தலித் குடியில் பிறந்தவர். தூத்துக்குடி மாவட்டத்திலிருந்து எளிய அடித்தட்டு சமூகத்திலிருந்து வந்தவர். உழைப்பு சார்ந்து, உழைக்கின்ற மக்கள் சார்ந்து யதார்த்தமான முறையில் அவருடைய நாவல்கள் அமைந்திருக்கும்.

தமிழ் மக்களின் பாரம்பரியமான உற்பத்திப் பொருள்களின் உப்பும் ஒன்று. சங்க இலக்கியம் உப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர்களை 'உமணர்' என்று சுட்டுகிறது. (புறம் 102) உமணர்கள் பழங்காலத் தமிழகத்தின் வலிமையான சக்தியாக விளங்கினர். 'உமணர்' உப்பு வியாபாரத்திற்கு இடம் பெயர்ந்து வெளியூர் செல்லும் போது அவர்களுடைய பாதுகாப்பிற்கு படைவீரர்களை அமைத்துக் கொள்ளும் செல்வம் உடையவர்களாகவும் சமூகத் தகுதி உடையவர்களாகவும் இருந்தனர். (அகம்.207) உப்பு வணிகத்திற்கு ஊர் விட்டு ஊர் செல்லும்போது அவர்களின் குடும்ப பெண்கள், அவர்களின் பாதுகாவலர்கள், சமையல் பொருள்கள் என எல்லாமும் இடம் பெற்றிருந்தன (குறுந்தொகை. 124). மேலும் நெல்லுக்கு இணையான மதிப்பை உப்பு பெற்றிருந்தது. (குறுந்தொகை.269).

இத்தகைய தகுதியும் சிறப்பும் பெற்றிருந்த உமணர்கள் அதன் பிறகு என்ன ஆனார்கள் என்ற குறிப்புகள் எதுவும் கிடைக்கவில்லை. வரலாற்றின் நெடிய பக்கங்களில் காணாமல் போன உமணர்கள் சென்ற இருபதாம் நூற்றாண்டின் பின்பாதியில் படைப்பிலக்கியங்களில் கதாப்பாத்திரங்களாக, சமூகத்தின் ஓரத்தில் ஒடுக்கப்பட்ட மக்களாக, விளிம்பு நிலை வாழ்க்கை வாழ்பவர்களாக அறிமுகமானார்கள். இத்தகைய உப்பளத் தொழிலாளர்களில் நிலையை சித்தரிக்கிறது ஸ்ரீதரகணேசன் எழுதியிருக்கும் 'உப்பு வயல்' எனும் அவரது முதல் நாவல். ஒதுக்குப்புற விளிம்பில், மக்கிப்போன சேரியில் வாழும் இவர்களின் நம்பிக்கைக் கனவுகளை வேகமாக வளர்ந்து வரும் புதிய முதலாளித்துவம் எப்படியெல்லாம் சிதைத்துச் சின்னபின்னமாக்குகிறது என்பதைச் சொல்லுகிறது இது.

நாவலின் மையக்கரு தலித் மக்களின் வாழ்க்கை அவலம். இவர்களின் பல்வேறுபட்ட வாழ்வியல், சமூகப் பின்னணிகளை விலாவாரியாக அலசுகிறது. இந்நாவல் வடுவச்சி என்ற பெண் கதாப்பாத்திரத்தின் வழியாக பல்வேறு வகைகளில் கிளைபரப்பி நிற்கிறது. வடுவச்சி, பூவதியம்மாள், மல்லிகா என்னும் பெண் கதாப்பாத்திரங்கள் வலுவாக சித்தரிக்கப்பட்டு அதன் வழியாக நாவல் வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது.

'உப்புவயல்' நாவல் குறித்த மதிப்பீடுகளை 'மொழியும் சமூகமும்' என்னும் நூலில் முனைவர். ஸ்ரீகுமார் தந்துள்ளார்.

> **'அடித்தட்டு, மேல்தட்டு மக்களின் வாழ்வியல் புலங்களை அடிச்சரடாகக் கொண்டு இயக்கவியல் நோக்கில் அடித்தள மக்களான உப்பளத் தொழிலாளர்களின் வாழ்வியல் யதார்த்தங்களை மிக நுட்பமாகச் சித்தரித்துச் சமூகத்தை ஆய்வு செய்யும் நாவல் ஸ்ரீதர கணேசனின் உப்புவயல் நாவலாகும்' (மொழியும் சமூகமும், ப. 86)**

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, December-2019 Available at: www.ijtlls.com

என்று 'உப்புவயல்' நாவல் குறித்து முனைவர். ஸ்ரீகுமார் அவர்கள் கட்டுரையின் தொடக்கப்பகுதியிலேயே குறிப்பிடுகிறார்.

> **'வடுச்சி தன் குடும்பத்தின் மீதும் குடும்பத்திற்காக துயர்படும் தாயின் மீதும் கொண்டுள்ள பாசத்தால் உப்பளத் தொழிலுக்குப் போகிறாள். அத்தொழில் சார்ந்த வாழ்க்கை ஏற்படுத்திய பாதிப்புகள், தாக்கங்கள், காயங்கள், இழப்புகள் ஆகியவைகளோடு வளர்ச்சி பெற்றும் தழும்புகளோடு குடும்ப கட்டுமானத்திற்கு உள்ளேயே மீண்டும் சூழலால் தள்ளப்படுகிறாள். தொழிலாளர் சங்கங்களின் பிரிவுகள், ஒரே பிரிவுக்குள்ளேயே நடைமுறை முரண்கள் எலும்புத் துண்டுகளாய் பாயும் நாயாய் சிதைந்த தொழிலாளர் வாழ்க்கை, ஊர்வலம், மனுக்கொடுத்தல் என்ற தொழிலாளி வர்க்க நடைமுறையைச் சுற்றி வளைத்தும், நேரடியாகவும் தாக்கும் முதலாளிவர்க்கத் தந்திரம் இந்த முச்சரட்டுப் பின்னலிலே தான் நாவலின் பயணம்' (மொழியும் சமூகமும். ப.87)**

என்று நாவல் உருவாகி வளர்த்தெடுக்கப்பட்டிருக்கும் செயல்முறை குறித்து தன்னுடைய பார்வையை முன்வைக்கும் முனைவர். ஸ்ரீகுமார் இந்த நூவலில் மையப்பொருள் **'தலித் மக்களின் வாழ்க்கை அவலம் தான்' (மொழியும் சமூகமும், ப.87)** என்கிறார். ஆனால் அதே வேளையில் இது தலித்திய நாவலும் இல்லை. வடுவச்சியை மையப்படுத்திப் பேசுவதால் பெண்ணிய நாவலும் இல்லை என்று கூறும் முனைவர். ஸ்ரீகுமார் 'உப்புவயல்' என்ன வகைப்பட்ட நாவல் என்று இறுதியில் குறிப்பிடும் பொழுது,

> **'வடுவச்சியும் சரி, தலித்துகளும் சரி தொழிலாளர் வர்க்கம் என்ற நிலைப்பாட்டில்தான் சித்தரிக்கப்படுகிறார்கள். ஆனால் இப்பார்வை முன் முடிவு செய்யப்பட்ட தீர்வை நோக்கிய நகர்வாகவோ இல்லாமல் இரத்தமும் சதையுமான, உயிர்ப்பும் துடிப்புமான, வாழ்வார்வமும் வாழ்வெதிர்ப்புமான இயல்புப் போக்காகவே செய்கிறது. சாதாரண நடப்புகளிலிருந்து யதார்த்தம் வேறுபடுவது என்பதே தினசரி சம்பவங்களின் பொதுமைப்படுத்தப்பட்ட கலைப்பார்வையின் விளைவால்தான்' (மொழியும் சமூகமும், ப.90)**

என்று கூறுகிறார்.

முடிவுரை

முனைவர், ஸ்ரீகுமார் ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட அனைத்து நாவல்களும் விளிம்பு நிலை மக்களின் வாழ்வியல் புலங்களை மையக்கருவாகக் கொண்டவையே. இராஜம் கிருஷ்ணன், தோப்பில் முகம்மது மீரான். ஆர்.எஸ்.ஜேக்கப், சின்னப்ப பாரதி, பொன்னீலன், களந்தை பீர் முகம்மது, நாஞ்சில் நாடன் என பல்வேறு பட்ட தளங்களில் விளிம்பு நிலை மக்களைப் பற்றி தங்களது படைப்புகளில் தந்து கொண்டிருக்கும் எழுத்தாளர்களின் கதை உலகை பல்வேறு கோணங்களில் இருந்து முனைவர் ஸ்ரீகுமார் ஆய்வுக்கு உட்படுத்திருக்கிறார்.

இந்த நாவலாசிரியர்கள் விளிம்புநிலை வாழ்வியல் பிரச்சனைகளை எவ்வளவு தூரம் வெற்றிகரமாக சமூகத்திற்கு வெளிப்படுத்தியுள்ளனர் என்பதைச் சொல்வதே முனைவர். ஸ்ரீகுமாரின் முக்கிய நோக்கமாக இருக்கிறது. இந்த பிரச்சனைகளை சமூகத்தில் வெளிப்படுத்துவதற்கு நாவலாசிரியர்களினால் உருவாக்கப்பட்டக் கதாபாத்திரங்கள் வெற்றி பெற்றுள்ளனவா என்பதை தனது அடுத்தநிலை விமர்சனமாக முனைவர். ஸ்ரீகுமார் முன்வைக்கிறார்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, December-2019 Available at: www.ijtlls.com

பார்வை நாவல்கள்

1. 'பிறகு'. பூமணி.
2. 'உப்பு வயல்'. ஸ்ரீதர கணேசன்.
3. 'மொழியும் சமூகமும்', முனைவர். ஸ்ரீகுமார்.
4. 'நாவலும் சமூகமும்,' முனைவர். ஸ்ரீகுமார்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, December-2019 Available at: www.ijtlls.com

குறுந்தொகை காட்சிப்படுத்தும் குறிஞ்சித்திணைச் சமூக வாழ்வியல்

Lifestyle of Kurinjithinai Society Visualized by *Kurunthogai*

முனைவர் ஜோ.பென்னி, உதவிப்பேராசிரியர்,
தமிழ்க் கலைஆய்வு மையம், தெ.தி. இந்துக் கல்லூரி, நாகர்கோவில் - 629 002.

Abstract

The term ilakkiyam (literature) refers to an art of presenting the most valuable information through well organized collection of words, expressed a language.The unerradicated Tamil literature that are found till-date serves as a portal of knowledge for today's world to experience the culture, behavior and heritage of the ancient Tamil civilization. Among those, there exists the poetic presentation, "Kurunthogai", which is the subsection of the books "Yettuthogai" and "Pathupattu" of Sangam Literature, which is well known for its uniqueness in detailing the vision of the scope with its short but valuable verses. The poetic work with its unique way of representation brings forth the information on the nature-bounded lifestyle that had been practiced by the ancient sangam civilization. The sangam civilization is known to have lead a principle of "Thinai Nilai" society, in which the people reside in the forests, farm lands and sea shores. Such lifestyles can be seen described in Kurunthogai. Every poem of Kurunthogai projects the sangam civilization's way of living in terms of friendship, love, Chasity, family life, culture, economy and social developments. Among which, this presentation aims to extract and expose the principles of people of Kurinji Thinai in terms of their worships, relationship status and women's honor.

Keywords: Lifestyle, Kurinjithinai Society, "*Kurunthogai*"

முன்னுரை

உலகில் எந்த மொழிக்கும் இல்லாத சிறப்பும் பெருமையும் தமிழ்மொழிக்கு உண்டு. தமிழ் இலக்கியங்கள் கூறும் வாழ்வியல் விழுமியங்களை வேறெந்த மொழி இலக்கியங்களிலும் காண இயலாது. தரணியே வியந்து போற்றும் ஒப்பற்ற சிந்தனைகளை உள்ளடக்கியதாக விளங்குவது தமிழ் இலக்கியங்களாகும். இவ்விலக்கியங்களிலே தனிச்சிறப்புமிக்க நூலாக விளங்குவது சங்க இலக்கிய நூற்களான எட்டுத்தொகையும் பத்துப்பாட்டுமாகும். இவை பண்டைத் தமிழர்களின் சமுதாயம், வரலாறு, வாணிகம், கலை சார்ந்த வாழ்வியல் செய்திகளைக் காட்சிப்படுத்தும் பண்பாட்டுச் சுரங்கமாகவும், வரலாற்றுப் பெட்டகமாகவும் திகழ்கின்றன. அந்த வகையில் எட்டுத்தொகை நூற்களில் ஒன்றான குறுந்தொகையில் குறிஞ்சி நிலமக்களின் வாழ்வியல் நிகழ்வுகள் எவ்வாறு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

திணைச் சமூக வாழ்வியல் முறை

வாழ்வியல் என்பது மனித வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு அமைவதாகும். வாழ்வியல் என்பதற்குக் கழக தமிழ் அகராதி,

E-ISSN: 2581-7140

Special Issue 2 : Vol. 2, December-2019 Available at: www.ijtlls.com

> **"முறைமை, வாழ்தல், நல்வாழ்க்கை, சீவனம்,**
> **உறைவிடம், செல்வம் ஆகிய பொருட்களைக் குறிக்கும்"**

என விளக்கமளிக்கிறது. தமிழ் சமுதாயம் தனிச் சமுதாய அமைப்பிலிருந்து வந்துள்ளது. அதுவே திணைச் சமூக வாழ்வியல் அமைப்பு எனப்படுகிறது. திணைகள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்தாக பகுபடுத்தப்பட்டுள்ளன. 'அன்பின் ஐந்திணை' என்றழைக்கப்படும் இந்நிலங்களில் வாழும் மக்கள் தங்களுக்கென தனித்தனியான வாழ்க்கை முறைமைகளைக் கொண்டிருந்தனர். பாலை நிலம் தவிர்த்த பிற நிலங்கள் யாவும் மக்கள் வாழ்வதற்குரிய இயற்கையையும், அவர்கள் உழைப்பதற்குரிய வாய்ப்பினையும் கொடுக்கும் களங்களாக இருந்துள்ளன. இவ்வைந்து திணைகளில் முதன்மையான திணையாகிய குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த பண்டைய தமிழர்களின் சமூக வாழ்வியல் செய்திகளைக் குறுந்தொகை மிக அழகாக காட்சிப்படுத்துகிறது.

குறிஞ்சி நில வாழ்வியல்

மலையும் மலை சார்ந்த இடமான குறிஞ்சி நிலத்தில் குறவன், கானநாடன், சோனோன், கானவன், இளையர், மறவர், வெற்பன் என ஆடவரையும், கொழச்சி, குறமகள் என பெண்களையும் அழைப்பர். இம்மக்களின், தொழில்களும் பழக்கவழக்கங்களும் எவ்வாறு இருந்தன என்பதை குறுந்தொகை சுட்டிக்காட்டுகிறது. நூற்று நாற்பத்தாறு செய்யுள்களைக் கொண்ட குறிஞ்சித் திணைப் பாடல்களில் இறைவழிபாடு, நாழிகைக் கணக்கர், தழையணி அணிதல், உறவு கொண்டாடுதல், நற்சொல் கேட்டல், மடலேறுதல், மகளிர் மாண்பு, உயிர்பலி கொடுத்தல் போன்ற வாழ்வியல் செய்திகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

முருக வழிபாடு

மலைப்பாங்கான இடமான குறிஞ்சி நிலத்தில் முருகனைத் தெய்வமாக வழிபடுகின்றனர். இக்கடவுளை நல்லிசைப் புலவனாகிய பாரதம் பாடிய பெருந்தேவனார், முருகனது சேவடியும், மேனியும், ஒளியும், உடுக்கையும், வேற்படையும், சேவல் கொடியும் காப்பதினாலே இவ்வுலகம் வாழ்கின்றது என்று போற்றுகிறார். முருகனது திருவடியை,

> **"தாமரை புரையுங் காமர் சேவடி" (குறுந். கடவுள் வாழ்த்து)**

என்று குறுந்தொகை கூறுகிறது. முருகன் சேவற்கொடி மட்டுமின்றி மயிலையும் கொடியாக உடையவன் என்பதை அகநானூறு பதிவு செய்கிறது. சங்க இலக்கியங்களில் முருகனைக் குறித்து வழங்கும் பெயர்கள் மிகுதி. இப்பெயர்கள் அனைத்தும் அவற்றின் சூழல்களின் அடிப்படையில் வெவ்வேறாக அமைகின்றன. குறுந்தொகையில் முருகனை குறித்து சேவலங் கொடியோன், சேய், முதிர்கடவுள், நெடுவேள், தெய்வம், முருகு போன்ற பெயர்கள் சுட்டப்பட்டுள்ளன.

கடியுண் கடவுள்

குறிஞ்சி நிலமக்கள் ஒவ்வொரு ஆண்டும் புதிதாக விளையும் தினையை முதலில் கடவுளுக்குப் படைத்துவிட்டு பின்பு உண்பர். அந்நிலக் கடவுளான முருகனுக்கு வழிபாடு செய்வதும் படையலாகப் படைப்பதும் அவர்களது வழக்கமாக இருந்தது. குறிஞ்சி நிலமக்கள் தினையைக் கடவுளுக்கு முதல் படையலாகப் படைப்பதால் பிற உயிர்கள் ஏதேனும் உண்ணாதவாறு பாதுகாத்தனர். மயில்கள் அத்தினையை உண்டதால், அவை 'அணங்குற்று' ஆடியதாக குறுந்தொகை சுட்டிக்காட்டுகிறது.

> **"புனவன் துடவைப் பொன்போல் சிறுதினைக்**
> **கடியுண் கடவுட் கிட்ட செழுங்குரல்**
> **அறியாதுண்ட மஞ்ஞை ஆடுமகள்**
> **வெறியுறு வனப்பின் வெய்துற்று நடுங்கும்**
> **சூர்மலை நாடன் கேண்மை**
> **நீர்மலி கண்ணொடு நினைப்பாகின்றே"(குறுந்.105)**

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, December-2019 Available at: www.ijtlls.com

என்னும் பாடல் வரிகள் குறிஞ்சி மக்களின் முதல் படையல் வழக்கத்தினை எடுத்துரைப்பதாய் அமைந்துள்ளன. மேலும் அந்நிலக் கடவுளான முருகனை வழிபட்ட முறையையும் இப்பாடல் விளக்கி நிற்கிறது. நிலங்களில் புதியதாக விளையும் பொருளை இறைவனுக்கு படைப்பதை இன்னும் இம்மக்கள் கடைபிடித்து வருகின்றனர்.

நாளிகைக் கணக்கர்

சங்ககால மக்கள் அரண்மனையில் வாயில்கள் அமைத்து வாழ்ந்தனர். இவ்வாயில்களில் வாயிற்காப்போர் காவலுக்காக அமர்த்தப்பட்டிருந்தனர். இவர்கள் காலத்தை அறிய விண்மீன்களை எண்ணி கணக்கிட்டனர். இதனை,

"துஞ்சா வாழி தோழி! காவலர்
கணக்கு ஆய் வகையின் வருந்தி, என்
நெஞ்சு புண் உற்ற விழுமத்தானே" (குறுந்.261)

என்ற அடிகள் உணர்த்தி நிற்கின்றன. பத்துப்பாட்டு நூற்களான முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை போன்றவை முல்லை மலர்களின் முகைகளைப் பரப்பி மாலை நேரத்தை அறிந்த செய்தியை வெளிப்படுத்துகிறது. இன்றும் கிராமப்புறங்களில் இவ்வழக்கம் காணப்படுகிறது.

உறவு கொண்டாடுதல்

தமிழர்கள் காதலுக்கு அளித்த சிறப்பினைத் தொகை நூற்களிலுள்ள செய்யுள்களின் வாயிலாக அறியலாம். அவ்வகையில் வயது வந்த ஆணும் பெண்ணும் கொடுப்பாரும் அடுப்பாருமின்றித் தெய்வத்தின் அருளால், எதிர்பட்டு உள்ளம் கலத்தலைக் களவென்றனர். அவ்வாறு உள்ளம் ஒன்றியக் காதலர் தம் பெற்றோருக்குத் தெரிவித்து மணந்து கொண்டு வாழ்வதனைக் கற்பு வாழ்வு என்றனர்.

"யாயும் ஞாயும் யாராகியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி யறிதும்
செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே" (குறுந். 40)

காதல் உலகில் இருவர் என்ற நிலையில்லை. இருதலைப்புள்ளில் ஓருயிர் போலவும், நீரோடு நீர் கலந்தாற் போலவும், ஈருடலும் ஒருயிருமாய் ஆவதே உண்மைக் காதலென்றனர். எங்கெங்கோ பிறந்த ஆணும் பெண்ணும் உள்ளமொன்றி உறவுநிலை கொண்டமையை ஆசிரியர் இதில் விளக்கியுள்ளார்.

தழையணி அணிதல்

குறிஞ்சி நிலப்பெண்கள் தழை உடையணிதலை வழக்கமாகக் கொண்டிருந்தனர். குடும்பப் பெண்களும், குறப்பெண்களும் தழைகளையும், பட்டைகளையும் ஆடையாக அணிந்தனர்.

"தழையணி அல்குல் தாங்கள் செல்லா
நுழைசிறு நுகப்பிற் கெவ்வமாக" (குறுந்.159)
"குன்றநாட தகுமோ பைஞ்சுனைக்
குவளைத் தண்டழை இவளீண்டு வருந்த" (குறுந்.342)

என்ற பாடல் வரிகளின் மூலம் குறிஞ்சி நிலப் பெண்கள் குளிர்ச்சி பொருந்திய தழையாடைகளை அணிந்த செய்தி பெறப்படுகிறது. தலைவன் ஆவலோடு தரும் தழையணியை தலைவி பெற்று அணிவதும் அவ்வாடை பெண்களுக்கு மேலும் அழகு சேர்ப்பதாகவும், அவனது பிரிவினால் தழையாடை இடையில் நிற்காமல் கழன்று விழுகின்ற நிலையும் அவர்களது அகவாழ்வை வெளிப்படுத்தி நிற்கிறது.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, December-2019 Available at: www.ijtlls.com

நற்சொல் கேட்டல்

நற்சொல் கேட்கும் வழக்கம் பண்டையக காலத்தில் இருந்ததாக குறுந்தொகை சுட்டிக்காட்டுகிறது. பொருள் வயின் பிரிந்த தலைவனை எண்ணி தலைவி துயரம் கொள்ள, அவளது அண்டை வீட்டுப் பெண் 'கணவர் வருவார்' என தலைவிக்கு நற்சொல் கூறியதோடு, 'தேவர்கள் உண்ணும் அமிழ்தமே உண்பாயாக' என்று வாழ்த்துகிறாள். இதனை,

"அமிழ்தம் உண்க அயல்இல் ஆட்டி
. . . .
மலைகெழு நாடனை வரமென் றோளே" (குறுந்.201)
"அரும்பெறல் அமிழ்தம் ஆர்பதம் ஆகப்
பெரும்பெயர் உலகம் பெறீஇயரோ அன்னை
. . . .
ஓங்குமலை நாடனை வரும் என்றோளே" (குறுந்.83)

என்ற அடிகள் உணர்த்துகின்றன. இதன்மூலம் நற்சொல் கேட்டு வாழ்த்துதலும், புகழ்வதும் சங்ககால வாழ்வியலில் இருந்ததை அறியமுடிகிறது.

மடலேறுதல்

தலைவன் மேல் தலைவி விருப்பம் கொள்ளவில்லையெனில் அவன் தோழியின் உதவியுடன் அவளை அடைய விரும்புவான். இறுதியில் மடலேறி 'இன்னார் பெண்ணை இன்னார் விரும்புகிறேன்' என ஊரறிய மடலேறுதலும், மணங்கொள்ளுதலும் சங்க கால ஆடவர்களின் வழக்கமாகும்.

தலைவன், தலைவியின் மீது கொண்ட அன்பால், பனை மடலால் குதிரை செய்து அதன் கழுத்தில் மணிமாலை முதலியவற்றை பூட்டித் தன் உருவத்தையும், தலைவியின் உருவத்தையும் ஒரு படத்தில் எழுதி கையில் ஏந்தி குதிரை மேல் யாவருமறிய ஊர்ந்து வருதலை 'மடல் ஏறுதல்' என்பர். அவ்வாறு அவன் வருவதைக் கண்ட ஊரினர் இருவருக்கும் நட்பு இருப்பதை அறிந்து அதனை வெளிப்படையாகக் கூறி பழிப்பர். அது கேட்டு சுற்றத்தார் இருவருக்கும் மணம் செய்து வைப்பர். பழந்தமிழர் மடலேறிய இச்செய்தியினை,

"மாவென மடலும் ஊர்ப் பூவெனக்
குவிமுகிழ் எருக்கங் கண்ணியும் சூடுப
மறுகினார்க்கவும் படுப
பிறிதுமாகுப காமங்கழ்க் கொளினே" (குறுந். 17)

என்ற குறுந்தொகை வரிகளால் அறியலாம்.

மகளிர் மாண்பு

சங்ககாலத்தில் பெண்கள் கணவனைத் தெய்வமாக மதித்தனர். நாணத்தைத் காட்டிலும் கற்புநெறிக்கு முதன்மை கொடுத்தனர். பூதப்பாண்டியன் இறந்தமையால் அவனது மனைவி உடன்கட்டை ஏறி உயிரை மாய்த்துக் கொண்டதாக புறநானூறு கூறுகிறது. சங்ககாலத்தில் பெண்கள் மட்டுமின்றி அஃறிணை உயிராகிய குரங்கும் இவ்வுணர்வோடு வாழ்ந்தது என்பதை,

"கருங்கண் தாக்கலை பெரும் பிறிதுற்றெனக்
கைம்மை உய்யாக் காமர் மந்தி
கல்லவன்பறழ் கிளைமுதற் சேர்த்தி
ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்துயிர் செருக்கும்" (குறுந். 69)

என்ற குறுந்தொகை வரிகள் புலப்படுத்துகின்றன. ஆண் குரங்கு இறந்ததால் பெண் குரங்கு தம் குட்டியைச் சுற்றத்தாரிடம் ஒப்படைத்துவிட்டு மலைமேலிருந்து கீழே விழுந்ததாக இப்பாடல் விளக்குகிறது. பெண்கள் தம் கணவனைத் தெய்வமாக மதித்ததோடு, கணவனை இழந்த பின் மறுமணம் செய்யும் வழக்கம் இல்லாதவர்களாகவும் இருந்தனர். மேலும்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, December-2019 Available at: www.ijtlls.com

தினைபுனம் காத்தலும், தொடியணிதலும், அருவி நீராடலும் பெண்களின் வழக்கமாக இருந்ததை,

"நிரைவளை முன்கை நேரிழை மகளிர்
இருங்கல் வியலறைச் செந்தினை பரப்பிச்
சுனைபாய் சோர்விடை நோக்கி" (குறுந்.335)

என்ற பாடலடிகள் உணர்த்தி நிற்பதை அறியலாம்.

பலி கொடுத்தல்

நல்வினை செய்யும் கடவுளையும், தீவினை செய்யும் கடவுளையும் பழந்தமிழர்கள் வழிப்பட்டனர். தீவினை செய்யும் கடவுளுக்கு உயிர்பலி கொடுக்கும் பழக்கம் அன்றைய காலத்தில் இருந்துள்ளது. தலைவி தலைவனின் பிரிவுத் துயரால் உடல்மெலிவுற்றிருப்பதை பார்த்த செவிலித்தாய், இது வேலனால் வந்தது என நம்பி வேலனை அழைத்து வெறியாட்டு நடத்தி உயிர்பலி கொடுத்ததாக சங்க இலக்கியம் கூறுகிறது. மேலும் இளைய ஆட்டினைக் கொன்று அதன் குருதிபடிந்த மண்ணைத் தலைவியின் நெற்றியில் பூசுவது வழக்கமாக இருந்துள்ளது. இதனை,

"பல்வேறு ருவிற் சில்லவழ் மடையொடு
சிறுமறி கொன்றிவள் நறுநுதல் நீவி" (குறுந். 362)

என்ற குறுந்தொகை வரிகளின் வாயிலாக அறிந்து கொள்ளலாம். நோயுற்ற பெண்ணின் நெற்றியில், பல வண்ண சோற்றைப் பரப்பி குருதிக் கறை படிந்த மண்ணை நெற்றியில் பூசுவது அக்கால மக்களின் நம்பிக்கையாக இருந்துள்ளது.

முடிவுரை

சங்க சமூகம் எல்லா காலத்திற்கும் ஏற்றதும், பொருத்தமானதும், எற்கத்தக்கதுமான கூறுகளையே தன்னுள் பெற்றிருந்துள்ளது. அதிலும் குறுந்தொகைப் பாடல்கள் சங்ககால சமூகத்தில் நிலவிய ஒழுக்க நியதிகளை அறமாகவே எடுத்துரைக்கிறது. ஒவ்வொரு திணை சார்ந்த சமூகத்தில் வாழ்ந்த மக்களும் இத்தகைய ஒழுக்க நியதிகளைக் கடைபிடித்தே தங்கள் அக, புற வாழ்வினை அமைத்துக் கொண்டனர். ஒழுக்கத்தையும், மனிதநேயத்தையும் முதன்மை அறமாகப் பின்பற்றி அம்மக்கள் வாழ்ந்ததாலேயே சங்ககாலம் ஒரு பொற்காலமாக மிளிர்ந்தது.

துணைநின்ற நூல்கள்

1. டாக்டர். உ.வே. சாமிநாதையர் - *குறுந்தொகை மூலமும் உரையும்.*
2. புலியூர்க்கேசிகன் - *குறுந்தொகை மூலமும் உரையும்*
3. டாக்டர். ந. சுப்பிரமணியன் - *சங்ககால வாழ்வியல்*

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, December-2019 Available at: www.ijtlls.com

திருக்குறளில் கலைகள்

Arts in *Thirukkural*

முனைவர் ஸ்ரீ. ராதிகா, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
தூய ஜெரோம் கல்லூரி, அனந்தநாடார்குடி, நாகர்கோவில், கன்னியாகுமரி - 629201.

Abstract

"Thirukkural" is a precious gem among the classics, unique in the deliverance of code of conduct to the mankind to follow for all time to come. It enshrines in it 1330 couplets under 133 chapters, each chapter comprising of 10 verses. The chapters again fall under three major divisions as 'virtue', 'wealth' and 'love'. The treatise encompasses the whole gamut of human life and by Thiruvalluvar, its illustrious author illuminates every bit of it. In fact, the ethical element in Kural has been over emphasized. Valluvar deserves to be better known as an encyclopedia of human ethics as a great poet and as one who has also sung of the militant life of the Tamil who considered it a great honour to die in battle field. Hence, this article focuses to bring down Arts as evinced in "Thirukkural".

Keywords: Valluvar, Arts, *Thirukkural*

மானுடம் சிறக்கவும், மனிதகுலம் தழைக்கவும் வள்ளுவப் பெருந்தகை இவ்வுலகத்திற்கு வழங்கிய வாழ்வியல் பெட்டகமே திருக்குறள் ஆகும். தனி மனித ஒழுக்கம் சமுதாயக் கடமைகள் ஆகியவற்றோடு அரசநீதி பற்றியும் அழகுற விளக்குகிறார். திருக்குறள் அறம் போற்றும் அறிஞர்களுக்கு ஓர் அறிவுப்பெட்டகமாகவும், மறம் போற்றும் வீரர்களுக்கு மாபெரும் கேடயமாகவும், அரசியல் தலைவர்களுக்கு ஓர் அரும்பெருங் களஞ்சியமாகவும், சிற்றின்பம் நுகர்வோருக்கு ஒரு சிறப்புமிக நூலாகவும் மட்டுமின்றி பல்வேறு கருத்துகளையும் ஒரு சேர வழங்கும் பல்கலைக்களஞ்சியமாகவும் திகழ்கின்றது.

கலைகள்

கலை மன உணர்வுகளின் வெளிப்பாடு நமது பாரம்பரியத்தையும், மக்களின் வாழ்வியலையும் பிரதிபலிப்பவை. கலை சமூக வளர்ச்சிக்கும், மன எழுச்சிக்கும் சிறந்த கருவி. கலைகள் தகவல் பரப்பும் ஊடகமாகவும், பழக்கவழக்கப்பண்பாட்டுப் பெட்டகமாகவும் திகழ்கின்றன. மனிதனை மனிதனாக மாற்றி வாழ்க்கையை அழகாக்குவது கலைகள். கலையினை பயன் கலை (Utilitarian Art), நுண்கலை கவின் கலை (fine Art) என இரு வகைகளாகப் பிரிக்கலாம். செயல், பயன், திறமை, அழகு, சுவை ஆகிய ஐந்து கூறுகளும் கலை என்ற சொல்லில் இருக்க வேண்டும். இந்த ஐந்து கூறுகளில் பயனின் பங்கு அதிகமாக இருந்தால் அது பயன் கலை என்று அழைக்கப்படும். அழகின் பங்கு அதிகமாக இருந்தால் அது நுண்கலை கவின் கலை என அழைக்கப்படும். இலக்கியங்கள் அனைத்தும் பயன்கலை வகையைச் சார்ந்ததாகும். திருக்குறளும், பயன்கலையாக இன்றும் மக்கள் மனதில் நிலைத்து நிற்கிறது.

அரசியல் கலை

திருவள்ளுவர் பொருட்பாலில் அரசியல் என்ற இயலையே வகுத்து அரசியல் கலையை போற்றியுள்ளார். படை, குடி மக்கள், உணவுப்பொருள்கள், நல்ல அமைச்சர்கள், நண்பர்கள்,

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, December-2019 Available at: www.ijtlls.com

அரண் என்ற ஆறு உறுப்புகளையும் அச்சமின்மை, ஈகை, அறிவு, ஊக்கம், காலம், தாழ்த்தாமை, கல்வி, துணிவென்னும்ஆண்மையுடைமை முதலிய நற்பண்பு நலன்களையும் உடையவன் தான் பெருமையும், புகழையும் பெறும் அரசனாக இருக்க முடியும். இதில் குறையுடையவர்கள் நாட்டை ஆளக்கூடிய தகுதி அற்றவர்கள் என்கிறார். இக்கருத்தினை,

> **“படைகுடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும்**
> **உடையான் அரசருள் ஏறு” (திருக்குறள் 381)**

எனும் குறள் வழி உணர்ந்து கொள்ளலாம்.

போர்க் கலை

போர் குறிக் காயமே புகழின் காயம் என்ற பேரா. பெ. சுந்தரம் பிள்ளையின் வாக்கிற்கிணங்க வீரம் மிகுந்தவர்கள், தமிழர்கள். தன்னந்தனியாக நிற்கும் வீரன் ஒருவன், தன்னை எதிர் நோக்கிக் கொண்டு வருகின்ற படை வீரர்களைக் கண்டு சற்றும் பயப்படாது, பகைவர்களே! என் தலைவன் முன் நின்று போர் புரிந்த பகைவர்கள் தான் நடுக்கற்களாக இங்கே நிற்கிறார்கள். எனவே நீங்கள் எங்கள் மன்னன் முன் நிற்காதீர்கள் என்று கூறி பகை வீரர்களைத் திரும்ப போக செய்தான். இதனை திருவள்ளுவர்

> **“என் ஐ முன் நில்லன் மின் தெவ்வீர் பலர் என் ஐ**
> **முன் நின்று கல் நின்றவர்” (திருக்குறள் 771)**

என்ற திருக்குறள் வழி விளக்குகிறார். இதைப் போன்று போர்க்கலை நுணுக்கங்கள் பலவற்றை இகல், படைமாட்சி, படைச் செருக்கு முதலான அதிகாரங்களில் மிகத் தெளிவாக பதிவு செய்துள்ளார்.

காதல் கலை

தமிழர் தங்கள் இன்ப வாழ்க்கையைத் தொன்று தொட்டு களவு, கற்பு என இரு பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். திருவள்ளுவர் தனது திருக்குறளில் இருபத்தைந்து அதிகாரங்களில் காதலின் சிறப்பினைப் பதிவு செய்துள்ளார். உடம்புக்கும், உயிருக்கும் இடையே பிரிக்க முடியாத தொடர்பு இருப்பது போல, தலைவனுக்கும், தலைவிக்கும் இடையே பிரிக்க முடியாத தொடர்பு இருக்க வேண்டும் என்கிறார் தெய்வப்புலவர்.
இதனை,

> **“உடம்பொடு உயிரிடை என்னமற்று அன்ன**
> **மடந்தையொடு எம்மிடை நட்பு” (திருக்குறள் 1122)**

என்ற குறட்பா வழி அறியலாம்.

திருவள்ளுவர் கல்வியின் சிறப்பினைக் கல்வி என்னும் அதிகாரத்தில் விளக்கியுள்ளார். அறிஞர்கள் கூடி இருக்கின்ற சபைதனில் தன்னை சிறந்த பண்பாளனாக உயர்த்துவது கல்வியாகும். கல்வி, கற்றவரை மட்டுமல்லாது, அவரோடு சேர்ந்திருக்கும் மற்றவர்களையும் நல்ல மனிதர்களாக மாற்றும் தன்மை உடையது.

> **“கற்க கசடற கற்பவை கற்றபின்**
> **நிற்க அதற்கு தக” (திருக்குறள் 391).**

எனும் குறட்பாவில் எந்த நூலை எடுத்தாலும், அந்த நூலைக் கற்று, அதில் புரியாத இடங்களில் சந்தேகம் தீரும் படி தெரிந்தவர் உதவியுடனோ அல்லது வேறு நூல்களின் துணையுடனோ தெளிவாக கற்க வேண்டும் என்கிறார்.

பொருளாதாரக் கலை

பொருளின் இன்றியமையாமையை நன்கு உணர்ந்தவர் வள்ளுவப் பெருந்தகை. இதனால் தான் பொருள் செயல் வகை என்னும் அதிகாரத்தில் பொருளாதாரக் கலையைப் பற்றி சிறப்புறக்கூறியுள்ளார். பொருளாதார திட்டம் தீட்டும் முறைகளைப் பொருட்பாவில் எழுபது அதிகாரங்களில் எழுதியுள்ளார். செல்வம் அணையா விளக்கு எண்ணிய

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, December-2019 Available at: www.ijtlls.com

தேசமெல்லாம் சென்று அங்குள்ள மக்களின் அறியாமை, வறுமை ஆகிய இருளினை போக்கி விடும் தன்மை செல்வத்திற்கு உண்டு என்பதை,

"பொருள் என்னும் பொய்யா விளக்கம் இருள் அறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று" (திருக்குறள் 755)

என்ற குறட்பா வழி அறிந்து கொள்ளலாம்.

இசைக்கலை

இசைக்கு மயங்காத உயிர்களே இல்லை எனலாம். அனைவர் மனதையும் கரையச் செய்து, அன்பு கொள்ளச் செய்யும் ஆற்றலை இசைக்கலை பெற்றுள்ளது. குறில் நெடிலாகும் போதே இசையும் தோன்றி விட்டது. திருக்குறளில் உள்ள 1,330 குறட்பாக்களும் குறள் வெண்பாவால் அமைந்துள்ளன. எனவே அனைத்து குறட்பாக்களையும் இசை நயத்துடன் பாடி மகிழலாம். சிறு குழந்தையின் மழலை மொழி புல்லாங்குழல் ஓசை, யாழோசை ஆகியவற்றைக் காட்டிலும் இனிமையாக உள்ளது என்பதை,

"குழல் இனிது யாழ் இனிது என்பதன் மக்கள்
மழலைச் சொல் கேளாதவர்" (திருக்குறள் 66)

என்ற குறட்பா வலியுறுத்துகிறது.

மருத்துவக்கலை

ஆயக்கலைகள் அறுபத்து நான்கில் குறிப்பிடத் தக்கது மருத்துவக்கலை ஆகும். மருந்து பயன்படுத்தாமல் வாழ்கின்ற நெறிகள் பற்றியும், நோய் வந்தால் அதை தாக்கும் மருத்துவ முறைகள் பற்றியும் திருவள்ளுவர் மருந்து என்னும் அதிகாரத்தில் பத்து குறட்பாக்களில் தெளிவாக கூறியுள்ளார்.

நோய் வந்தால் அந்நோய் எந்த வகையைச் சார்ந்தது என அறிய வேண்டும். பின்பு அந்த நோயை முற்றிலும் தீர்க்கவல்ல மருந்து இது என தெளிவாக கூற வேண்டும். அம்மருந்தினை உரிய முறையில் பயன்படுத்த வேண்டும் என்பதை,

"நோய் நாடி நோய் முதல்நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் சொல்" (திருக்குறள் 948).

என்ற குறட்பா வழி பதிவு செய்துள்ளார். மருத்துவர் நோயினைக் குணப்படுத்த என்னென்ன முறைகளைப் பின்பற்ற வேண்டும் என்பதை படிப்படியாக கூறும் வள்ளுவரை மருத்துவ வல்லுநர் என்று சொன்னால் அது மிகையாகாது.

வாழ்க்கைக் கலை

வாழ்க்கைக் கலையே பிறகலைகள் அனைத்திற்கும் தாயகம் ஆகும். 1,330 குறட்பாக்களும் வாழ்க்கைக் கலையை பல வடிவங்களில் பதிவு செய்துள்ளன. குழந்தைப்பருவம் முதல் முதுமைப்பருவம் வரை மனிதன் ஆற்ற வேண்டிய செயல்களை அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பாலில் தெளிவுப்படுத்தி உள்ளார் திருவள்ளுவர். இவ்வுலகில் மனிதன் ஒழுக்கத்துடனும், நற்பண்புடனும் வாழ்ந்தால் தெய்வமாகப் போற்றப்படுவான் என்று உறுதிப்படக் கூறுகிறார் தெய்வப்புலவர். இதனை,

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்" (திருக்குறள் 50)

என்ற குறட்பாவால் உணரலாம்.

இவ்வாறு தெய்வப்புலவர் திருவள்ளுவர் தந்த திருக்குறள் வந்து போன சந்ததிக்கும், வாழ்ந்து வரும் சந்ததிக்கும், வரப்போகும் தலைமுறைக்கும் வாழ்க்கை வழிதனை, வகைவகையாய் நெறிப்படுத்தி, வார்த்தையால் வழிகாட்ட, தித்திக்கும் செந்தமிழில் திகட்டாத சொல்லெடுத்து இமயம் அளவு பொருள்தனை ஒன்றே முக்கால் வரியில் அடுக்கி வைத்து வள்ளுவரின் திருக்கரங்கள் வரைந்து வைத்த பல்கலைகளின் ஓவியம் தான் இந்நூல். தமிழுக்கு தலை வாசலாய், அறிவுக்கு ஆணிவேராய் இருக்கும் வான்புகழ் வள்ளுவன் தந்த

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, December-2019 Available at: www.ijtlls.com

தேனமுத திருக்குறளை நாம் ஒவ்வொருவரும் மனதில் கொண்டால் உள்ளம் நலமாகும், உலகம் நமதாகும்.

துணை நூற்கள்

1. *திருக்குறள்* - தெளிவுரை, நா. விவேகானந்தன்.
2. *திருக்குறள்* - பரிமேலழகர் உரை – புலியூர்க்கேசிகன்.
3. *வழி காட்டும் வள்ளுவம்* - முனைவர் பா. வளன் அரசு.
4. *மனக்காட்டுத் தேனடைகள்* - கவிவேந்தர். கா. வேழவேந்தன்.
5. *பன்னோக்கு பார்வையில் தமிழ்ச் செம்மொழி* – கல்லூரி ஆசிரியர் குமரித் தமிழ் சங்கம் - ஜனவரி 2010.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, December-2019 Available at: www.ijtlls.com

"எரி நெருப்பில் இடை பாதை இல்லை" நாவல் காட்டும் அடக்குமுறைக்கெதிரான போராட்டங்கள்

Revolutions against Oppression shown in the Novel "Eri Neruppil Idai Pathai Illai"

முனைவர் ச. ராஜேஸ், தமிழ்த்துறைத்தலைவர்,
தூய ஜெரோம் கல்லூரி, அனந்தநாடார்குடி, நாகர்கோவில், கன்னியாகுமரி - 629201.

Abstract

"Eri Neruppil Idai Pathai Illai" is a novel written by the Lankan Tamil S. Agasthiyar. The novel deals with the trauma between the high class and the low class people of the people at Yalpanam of Sri Lanka. It deals with the oppression pressured upon the poor people by the upper class people. The, it explains about the utterly suppressed people by caste chauvinism and partiality; continuing with the upraise of the suffered people and the loss fall on them are clearly explained in the article. Hence, the novel decodes the situation of the people in a pathetic manner.

Keywords: Valluvar, Arts, *Thirukkural*

எரி நெருப்பில் இடை பாதை இல்லை, இலங்கையிலுள்ள யாழ்பாணம் பகுதியில் 1947 காலக்கட்டத்தில் நடைமுறையிலிருந்த உயர்த்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட சமூகப் பிறழ்வுகளை மையப்படுத்தும் நாவலாகும். தங்களை உயர்ந்தவர்களாக கருதிக் கொண்ட ஆதிக்க வகுப்பினர், தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வினையும் உரிமைகளையும் பறித்துக் கொண்டதைக் கதையோட்டத்தில் வெளிப்படுத்தும் இந்நாவல் பொறுக்க இயலாத அடக்குமுறையின் விளைவாக உரிமையிழந்த மக்கள் பொங்கி எழுந்து போராட்டத்தில் ஈடுபட்டதையும் அதன் மூலம் அடைந்த இழப்புகளையும் மையப்படுத்துகிறது.

ஆசிரியர் குறிப்பு

எரி நெருப்பில் இடை பாதை இல்லை நாவல் இலங்கைத் தமிழரான எஸ். அகஸ்தியர் என்பவரால் எழுதப்பட்டது. இவர் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க தலைமைக்குழு உறுப்பினராக இருந்தவர். சிங்களம், ரஷ்யன், மலையாளம் போன்ற பல மொழிகளிலும் தரம் வாய்ந்த தமிழ் இதழ்கள் பலவற்றிலும் இவரது படைப்புகள் வெளிவந்துள்ளன. பிரிவினை உணர்வுகளை வேரறுத்து மனித நேயத்தை வெளிப்படுத்தும் வகையில் இவரது நாவல்கள் உள்ளன. அவற்றில் 'மானிட தரிசனங்கள்', 'மகாகனம் பொருந்திய', 'எரி நெருப்பில் இடை பாதை இல்லை', 'எவருக்கும் தாயாக', 'மேய்ப்பர்கள்', 'நரகத்திலிருந்து', 'இருளினுள்ளே' போன்றவை குறிப்பிடத்தக்கவை. இவற்றில் எரி நெருப்பில் இடை பாதை இல்லை என்ற இந்த நாவல் 1992 ஆம் ஆண்டு என்.சி.பி.எச் நிறுவனத்தால் வெளியிடப்பட்டது.

கதைச் சுருக்கம்

பருத்தித்துறை என்ற கிராமத்தில் உயர் குடியில் பிறந்தவர் நடேச பிள்ளை. இவரது மனைவியின் பெயர் செல்லம்மாள் இவர்களுக்குச் செல்லமணி என்ற ஒரு மகள் இருந்தாள். அவள் மீது நடேச பிள்ளை உயிரையே வைத்திருந்தார். அவளைத் திருமணம் செய்து கொடுக்கும் போது வீட்டோடு மாப்பிள்ளை பார்க்க வேண்டுமென நினைத்திருந்தார். தன்னுடைய சாதியிலிருந்து லண்டனுக்குச் சட்டம் படிக்கப் போன கந்தசாமிக்குத் தன்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, December-2019 Available at: www.ijtlls.com

மகளை திருமணம் செய்து வைக்க வேண்டுமென்றும் அவர் நினைத்திருந்தார். நடேச பிள்ளை பொது வாழ்வில் தூய்மையானவர் மட்டுமல்ல சமதர்ம நோக்கம் உடையவர். எனவே தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகளை அவர் மதித்தார். அதற்கும் பின்புலமாக இன்னொரு சம்பவமும் இருந்தது. சுமார் பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு முன்பு கதிர்காமக் கந்தனை வழிபட நடேச பிள்ளையின் குடும்பம் சென்றிருந்தது. அதே நேரத்தில் அங்கு தாழ்த்தப்பட்ட வகுப்பினைச் சார்ந்த சின்னவனும் அவர் மகன் முருகனும் வந்திருந்தனர். அங்குள்ள மாணிக்கக் கங்கையில் செல்லமணி குளித்த போது நீரால் அடித்துச் செல்லப்பட்டாள். அவளை உயிரை பணயம் வைத்துச் சின்னவன் மீட்டார். எனவே தன் மகளின் உயிரை காப்பாற்றிய தாழ்த்தப்பட்ட மக்களிடம் நடேச பிள்ளை மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார்.

நல்ல மனம் கொண்ட நடேச பிள்ளையின் கற்பனைகள் தகரும் வகையில், தன்னை கதிர்காம மாணிக்கக் கங்கையிலிருந்து காப்பாற்றிய சின்னவன் மகன் முருகனை செல்லமணி இரகசியமாக காதலித்ததோடு மட்டுமல்லாமல் அவனையே திருமணம் செய்து கொண்டாள். தன் மானம் அழிந்து விட்டதாக நினைத்த நடேச பிள்ளை அதற்கு காரணமான சின்னவனின் குடும்பத்தை அழித்தொழிக்க விரும்பினார். அவருக்குத் துணையாக அவரது நண்பர் சின்னத்தம்பர் இருந்தார். அந்நேரத்தில் செல்லமணி கர்ப்பமானாள் என்ற செய்தி கிடைத்தது. ஆத்திரத்தின் உச்சியில் இருந்த நடேச பிள்ளையும், சின்னத்தம்பாரும் இணைந்து சதித்திட்டம் வகுத்தனர். முருகனின் தகப்பனான சின்னவனின் குடிசை தீக்கிரையாக்கப்பட்டது. படுகாயமடைந்த சின்னவன் இறந்து போனார். தனது மனைவி மூலம் செல்லமணிக்கு பாசம் வெளிப்படும் வகையில் கடிதம் எழுதினார் நடேசபிள்ளை. மகிழ்வோடு முதல் பிரசவத்துக்காக வந்த செல்லமணியினை ஆணவக் கொலைச் செய்தார்.

அதை தற்கொலை என சாமர்த்தியமாக நிருபிக்கவும் செய்தார். அதன் பின்பும் நடேச பிள்ளையின் வெறி அடங்கவில்லை. அவரும் சின்னத் தம்பரும் இணைந்து எங்கெல்லாம் வாய்ப்புக் கிடைத்ததோ அங்கெல்லாம் தாழ்த்தப்பட்டவர்களுக்கெதிரான தாக்குதல்களையும், கொலை வெறியாடல்களையும் அரங்கேற்றினர். எனவே எப்படியாவது அவர்களை அழிக்க வேண்டுமென தாழ்த்தப்பட்ட மக்கள் முனைந்தனர். ஆனால் நடேச பிள்ளை, சின்னத்தம்பரின் ஆதிக்க செயல்பாடுகளுக்கு முன்னால் அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை, இறுதியில் முருகனின் தாயாகிய தெய்வானை இரகசியமாக சின்னத்தம்பரும், நடேச பிள்ளையும் குடிக்கும் கள்ளில் நஞ்சு கலந்து கொடுக்கச் செய்து அவர்களைக் கொன்றாள்.

பாத்திரப் படைப்புகள்

எரி நெருப்பில் இடைபாதை இல்லை என்ற இந்த நாவல் ஒரு குடும்பக் கதையாக சொல்லப்படுவது போல இருந்தாலும் கதையோட்டத்தில் இனப்பாகுபாட்டின் மோதல்களையும் சிதைவுகளையும் சமரசம் இல்லாமல் பதிவுச் செய்கிறது. உரிமைக்காகவும், ஆதிக்கத்திற்காகவும் முரண்பட்ட நிலையில் போராடும் கதாப்பாத்திரங்கள் வழி நாவலின் கதைப்பின்னல் கவனமாக கையாளப்பட்டுள்ளது. அந்த வகையில் குழந்தை மனமும் கொடிய எண்ணமும் கொண்ட நடேச பிள்ளை, ஆதிக்க வெறியினையே வாழ்வாகக் கொண்ட சின்னத்தம்பர், பொதுவுடைமைப் போராளியாகி சமதர்மத்தை பேசிய முருகன், அடக்கு முறையினை அடக்குமுறையாலே எதிர்கொள்ளும் செல்லையா, சமதர்ம சிந்தனையினை வாழ்வாக்கிய செல்லமணி, அப்பாவியான சின்னவன், அநியாயத்துக்கு பழிவாங்கும் தெய்வானை போன்ற கதாப்பாத்திரங்கள் இந்நாவலை வெகு கவனமாக தாங்கிப் பிடிக்கின்றன.

தாழ்த்தப்பட்டவர்களுக்கெதிரான அடக்குமுறைகள்

தாழ்த்தப்பட்டவர்களுக்கெதிரான பல்வேறு விதமான அடக்குமுறைகள் இந்நாவலில் காட்டப்பட்டுள்ளன. அவை ஊர்க் கட்டுப்பாடுகள் என காலம் காலமாக நடைமுறையில் இருந்தவைதான். அவையாவன,

- தாழ்த்தப்பட்டவர்கள் பொதுக் கிணற்றில் தண்ணீர் எடுக்கக் கூடாது.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, December-2019 Available at: www.ijtlls.com

- உடம்பில் சட்டையணியக் கூடாது.
- ஆதிக்கவாதிகள் வாழும் தெருவில் செல்லக் கூடாது.
- காலில் செருப்பு அணியக் கூடாது.
- பேருந்தில் நின்று கொண்டே பயணம் செய்ய வேண்டும்.
- விருப்பப்பட்ட பெயர்களைச் சூட்டிக் கொள்ளக் கூடாது.
- ஆலயத்திற்குள் சென்று வழிபடக் கூடாது.
- தேனீர் கடைகளில் இரட்டைக் குவளைகள் பயன்படுத்தப்பட்டன.
- பள்ளிக் கூட மாணவர்களும் வெறும் தரையில் அமர்ந்தே கல்வி கற்க வேண்டும்.

இவை தவிர சூழ்நிலைகளுக்குத் தக்கவாறு ஒதுக்கி வைப்பதும், வன்முறையில் ஈடுபடுவதும் ஆதிக்கவாதிகளின் அடக்குமுறைகளாக நாவலில் சித்தரிக்கப்படுகிறது.

அடக்குமுறைக்கெதிரான போராட்டங்கள்

உரிமைகள் மறுக்கப்படும் போது போராட்டங்கள் இயல்பாகவே தோன்றிவிடும். ஆதிக்கவாதிகளால் உரிமைகளை பறி கொடுத்த தாழ்த்தப்பட்டவர்கள் ஆலயப்பிரவேசம், தேனீர் கடை சம்போசனம் என்ற பெயர்களில் சம உரிமைக்கான போராட்டங்களைத் தொடங்கினர். இந்தப் போராட்டங்களுக்கு மனிதாபிமானமுள்ள ஆதிக்க வர்க்கத்தினரும் ஆதரவு வழங்கினர். ஆலய பிரவேச உரிமை வேண்டித் தாழ்த்தப்பட்ட மக்கள் முருகனின் தலைமையில் சுங்கானை சிவன் கோவிலில் நுழைந்தனர். ஆலயமே ரணகள பூமியானது. கத்தி, வாள், கல் போன்றவை ஆயுதங்களாயின. காவல்துறையினர் வந்து நிலைமையைக் கட்டுப்படுத்தி பலரைக்கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் தாழ்த்தப்பட்டவரே. கலவரத்துக்குக் காரணமான ஆதிக்கவர்க்கத்தினர் கைது செய்யப்படவில்லை. கைது செய்யப்பட்ட அனைவருக்கும் அடி உதையோடு சிறைத் தண்டனையும் கிடைத்தது.

தாழ்த்தப்பட்டோர் ஆலயத்திற்குள் நுழைய முற்பட்ட நிகழ்வு ஆதிக்க வர்க்கத்தினரை கடும் கோபமுறச் செய்தது. அந்தக் கோபம் பெருங்கலவரமாக வெடித்தது. கலவரம் உச்ச நிலையினை அடைந்த போது செல்லையா என்ற தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த இளைஞன் சட்டையணிந்து நெல்லியடிச்சந்தி என்னும் பகுதியில் நின்று கொண்டிருந்தான். அவனை அடித்து அவமானப்படுத்திய ஆதிக்க வர்கத்தினர் சுண்ணாம்பு நீரால் அவன் முதுகில் செல்லன் என எழுதினர். மிகுந்த அவமானமும் வேதனையும் அடைந்த செல்லையா தனது ஊர் இளைஞர்களை அழைத்துக் கொண்டு மீண்டும் நெல்லியடிச்சந்தி பகுதிக்கு வந்தான். தன்னை அவமானப்படுத்தியவர்களை அடிக்க வேண்டும் என்பதே அவன் எண்ணமாயிருந்தது. அங்குள்ளத் தேனீர் கடையில் நுழைந்து ஆதிக்க வர்க்கத்தினர் போன்று தனக்கும் தேனீர் தர உத்தரவிட்டான். பயந்து போன தேனீர் கடைக்காரர் அப்படியேச் செய்தார்.

செல்லையாவும் பிற இளைஞர்களும் ஊரில் இல்லாததையும், தங்களை அடிக்கத் தேடுவதையும் அறிந்த ஆதிக்க சக்திகள் அந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி செல்லையாவின் ஊரிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களின் வீடுகளைத் தீக்கிரையாக்கினர். இளைஞர்கள் ஊர் திரும்பியபோது அவர்களால் எரிந்த வீடுகளையும் இறந்தோரின் பிணங்களையும் தான் பார்க்க முடிந்தது. இதற்குக் காரணமான ஆதிக்க வர்க்கத்தினரை பழிவாங்க தாழ்த்தப்பட்டோர் விரும்பினர். ஆனால் அவர்களிடம் எந்த ஆதிக்க வர்கத்தினரும் சிக்கவில்லை. இந்த நிலையில் செல்லையாவின் மகன் இறந்து போனான். அவனை ஆதிக்க வர்க்கத்தினர் போன்று மேளமடித்து எரிக்க வேண்டுமென செல்லையா விரும்பினான். இதற்காக தன் மகனின் பிணத்தைக் கொட்டடி என்னும் பகுதியிலுள்ள ஆதிக்க வர்க்கத்தினரின் மயானத்திற்கு ஊர்வலமாக கொண்டு வந்தான். அதை ஆதிக்கவாதிகள் தடுத்தனர். ஆனால்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, December-2019 Available at: www.ijtlls.com

செல்லையாவும் அவனுடன் வந்த இளைஞர்களும் அவர்களை லட்சியம் செய்யாமல் பிணத்தை எரித்தனர். பிணம் எரிந்து கொண்டிருந்த போது ஆதிக்கச்சக்தியினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். அதில் செல்லையா உயிரிழந்தான். கொட்டடி கொலைச் சம்பவம் நீதிமன்றத்துக்கு வந்தது. ஆனால் அந்த வழக்கில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவில்லை.

ஆலயப் பிரவேசத்துக்குத் தலைமை தாங்கிய முருகன் சிறைவாசம் முடிந்த பின்பு, பொதுவுடைமை கட்சியினரோடு பழகி அவர்களின் கருத்துக்களையும் போராட்ட யுத்திகளையும் புரிந்து கொண்டான். உரிமை வேட்கையுடைய தொழிலாளர்களை ஒருங்கிணைத்து சங்கம் உருவாக்கினான். பொதுமக்களின் போராட்டத்தினால் தான் இனப்பிரச்சனைகளும் தனிமனிதர் பிரச்சனைகளும் தீரும் என்ற உண்மையை உணர்ந்த பல சாதி, பல மதமக்களும் அவனோடு அணி திரண்டனர். இந்த அணி தாழ்த்தப்பட்டமக்களின் உரிமைக்காக போராட முனைந்தது. அத்தகைய போராட்டத்தின் முதல் கட்ட முயற்சியாக தொழிலாளர் சாலையில் எழுச்சி ஊர்வலம் சென்றனர். உணர்ச்சிமிக்க கோ'ங்களை முழங்கினர். அணியாக திரண்ட தொழிலாளர்களின் இத்தகைய அகிம்சை போராட்டம் ஒரு புதிய விடியலாக அமைந்தது.

நிறைவுரை

சாதீயப் பாகுபாடு என்பது அடிப்படையில் ஒடுக்கு முறையின் வடிவமாகும். இந்த வழக்கம் தெற்காசியா முழுவதிலும் உள்ளது. மனிதனை இழிவுப்படுத்தும் நிலையில் சாதிக்கு இணையான கொடூரமான அமைப்பு வேறு இல்லை எனலாம். தீண்டாமை வெறியினால் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது ஏவப்படும் பாகுபாட்டு வன்முறைகள் அவர்களை உடல்ரீதியிலும், மனரீதியிலும் பாதிக்கின்றது. அந்த அடிப்படையில் ஆதிக்க சக்திகளின் எண்ணங்களையும், திட்டங்களையும், செயல்களையும் அப்பட்டமாக படம் பிடித்த இந்த நாவல் பாதிக்கப்படும் அடித்தட்டு மக்களின் வாழ்வினையும், தட்டி எழுப்பப்படும் அவர்களின் தன்மான உணர்வுகளையும் பிரதிபலிக்கிறது. உரிமைக்காகப் போராடும் போது ஏற்படும் இழப்புகள், இனி ஒரு நல்ல சமுதாயம் அமைவதற்கான படிக்கட்டுகள் என்பதையும் அடையாளப்படுத்துகிறது. பழிக்கு பழி வாங்க வேண்டுமென வன்முறை வெறியாடல்கள் மூலம் நடத்தப்படும் போராட்டங்கள் பிறரை மட்டுமல்ல தன்னையும் அழிக்கும் என திட்டவட்டமாக கூறும் இந்நாவல் வர்க்க ரீதியான போராட்டங்கள் வெற்றி பெற வேண்டுமானால் தொழிலாளர்கள் இலட்சியம் நிறைந்த அணியாகத் திரண்டு அகிம்சை வழியில் போராட வேண்டும் என்பதையும் காட்சிப் படுத்துகிறது. மொத்தத்தில் இந்நாவலை ஆதிக்கமும், அடக்குமுறையும், வன்முறை வெறியாடல்களும் இல்லாத புதிய சமூகம் மலர துணை புரியும் சமூகச் சீர்திருத்த நாவல் எனலாம்.

பார்வை நூல்கள்

1. அகஸ்தியர், 1992, எரி நெருப்பில் இடைபாதை இல்லை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
2. மார்க்ஸ் ஏஞ்சல்ஸ், 1986, சோ'லிஸ்ட் புரட்சி, முன்னேற்ற பதிப்பகம், மாஸ்கோ, ர்'யா.
3. சேது, 2000, இனவெறிக்கெதிரான உலக மாநாடு ஓர் அறிமுகம், மக்கள் கண்காணிப்பகம், மதுரை.

E-ISSN: 2581-7140

Special Issue 2 : Vol. 2, December-2019 Available at: www.ijtlls.com

‘ஐயவி’

Ayavi (White Mustard)

முனைவர் ஜா. ஜாக்குலின் ஜேசுலெட், உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
தூய ஜெரோம் கல்லூரி, அனந்தநாடார்குடி, நாகர்கோவில், கன்னியாகுமரி - 629201.

Abstract

Sangam Literature is as vast as an ocean. It reflects the seamless and stainless Tamil society with its multifaceted aspects. The present paper focuses on the uses of white mustard which plays a vital role in Sangam Literature. White mustard, besides being a cooking ingredient, acts as a major medicinal spice. The origin of white mustard is said to be the Great Himalayas. The importance of white mustard has been sung by various Tamil poets in Sangam Literature including Maduraikanchi, Thirumurugaatrupadai, Puranaanooru, Manimekalai and Nedunalvaadai. There is also a superstitious belief associated with white mustard. People blindly believe that the smoke evolved by burning white mustard seeds chases away the evil spirits and purifies the environment. There may be some scientific reasons behind this belief. The paper accentuates how white mustard has played an important part in Sangam Literature.

Keywords: Sangam Literature, White mustard, Medicine, Belief, Tamil Culture.

சங்க இலக்கியம் ஒரு சுகமான கடல். அதில் நீந்தி கரையேறுவது கடினம். சங்க இலக்கியங்கள் கற்பனையும் கனவும், பொய்யும் புனைவும் அற்ற தமிழ்ச் சமுதாயத்தை உள்ளது உள்ளபடியே காட்டும் கண்ணாடிகள். இவை பழந்தமிழரின் அரிய பண்பு நலனையும், சமூக வரலாற்றையும் காட்டும் காலப் பெட்டகம். அந்தக் காலப் பெட்டகத்தைத் துழாவிய போது கிடைத்த பொருள் தான் ‘ஐயவி’. பண்டைய தமிழ் மக்களிடையே ஐயவி எவ்வாறு எப்படியெல்லாம் இடம் பெற்றிருந்தது என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

‘ஐயவி’ என்றால் என்ன? என்ற ஐயம் நம்மில் பலபேருக்கும் எழுவது உண்டு. வேறொன்றும் இல்லை. வெண் சிறு கடுகு தான் அது.

கடுகு என்றாலே சமையலில் தாளிப்புக்காக பயன்படுத்தும் ஒரு பொருள் என்று தான் தெரியும். ஆனால் அதில் பல வகைகள் உண்டு. ஏராளமான மருத்துவ குணங்களும் இருக்கின்றன என்று நம்மில் பலருக்கும் தெரியாது. அதை விட வெண்கடுகில் சில ஆன்மீக, மருத்துவ குணங்கள் இருக்கின்றன என்பதையும் நிறைய பேர் அறிந்து வைத்திருக்கவில்லை.

வெண்கடுகின் பிறப்பிடம்

‘ஐயவி’ மலைப்பிரதேசங்களில் வளரும் ஒரு செடி. அதாவது குறிஞ்சி நிலப்பயிர். இமய மலையின் அடிவாரங்களில் மிக அதிக அளவில் விளைகின்றது. இமயமலையைச் சுற்றிலும் தேவ கணங்கள் நிறைந்திருப்பதாக நம்புகிறார்கள். பைவருக்கு மிகவும் பிடித்தது இந்த வெண்கடுகு என்று சித்தர்கள் சிலர் குறிப்பிடுகின்றனர். வெண்கடுகு குளிர்ச்சி தருபவையாக இருக்கும். மலையை சுற்றிலும் காவல் புரிகின்ற தேவகணங்கள் தான் இந்த வெண்கடுகு.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, December-2019 Available at: www.ijtlls.com

இந்த வெண்கடுகை பழந்தமிழர்கள் இறை வழிபாட்டிலும், பேய்களை விரட்டுவதிலும், வன்கண் பார்வையிலிருந்து தப்புவதற்கும் பயன்படுத்தியதாக சான்றுகள் உள்ளன.

குறிஞ்சி நிலப்பயிர்

பத்துப்பாட்டில் ஒன்றான மதுரைக் காஞ்சியில் குறிஞ்சி நிலத்தின் இயற்கை வளத்தைப் பாடும் பாடலில் 287-ஆவது வரியில் 'ஐயவி' இடம் பெற்றுள்ளது.

"நறுங்காழ் கொன்று கோட்டின் வித்திய
குறுங்கதிர்த் தோரை, நெடுங்கால் ஐயவி
ஐவன வெண்ணெலொடு அரில் கொள்பு நீடி;
இஞ்சி, மஞ்சள், பைங்கறி, பிறவும்
பல்வேறு தாரமொடு, கல்லகத்து உண்டி" (290)

மணங்கமழும் அகிலையும், சந்தனத்தையும் வெட்டி, மேட்டு நிலங்களில் விதைக்கப்பட்ட கதிர்களையுடைய தோரை என்னும் நெல்லும், நெடிய தாளினையுடைய வெண்சிறு கடுகும், ஐவன நெல் என்னும் வெண்ணெல்லுடன் பிணைந்து வளர்ந்த இஞ்சியும், மஞ்சளும், பசுமை வாய்ந்த மிளகுக் கொடியும் ஒழிந்த பல்வேறு பண்டங்களும் கல் தரையில் குவிக்கப்பட்டிருக்கும் என்ற செய்தியின் மூலம் இது குறிஞ்சிப்பயிர் என்பது புலனாகின்றது.

இறை வேண்டலில்

திருமுருகாற்றுப் படையில் முருகனை வேண்டும் போது
மண்தலைக் கொடியொடு மண்ணி அமைவர,
நெய்யோடு ஐயவி அப்பி, ஐது உரைத்து
குடந்தம் பட்டு, கொழுமலர் சிதறி,
முரண்கொள் உருவின் இரண்டு உடன் உடீஇ,
செந்நூல்யாத்து, வெண்பொரி சிதறி,
மதவலி நிலைஇய மந்தாட் கொழு விடைக்
குருதியொடு விரைஇய நறுவிரை தெளித்து,
பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை
துணைஅற அறுத்துத் தூங்க நாற்றி,
நளிமலைச் சிலம்பில் நல்நகர் வாழ்த்தி,
நறும்புகை எடுத்து, குறிஞ்சி பாடி,
தமிழ் இசை அருவியொடு இன்இயம் கறங்க,
உருவ பல்பூத் தூஉய், வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பி, குறமகள்
முருகு இயம் நிறுத்து, முரணினர் உட்க,
முருகு ஆற்றுப்படுத்த உருகெழு வியல்நகர்" (226 - 240)

என்று கூறப்பட்டுள்ளது. பேய் உள்ளே புகாதவாறு காத்தற் பொருட்டு வெண்சிறு கடுகு பயன்படுத்துவது அக்கால வழக்கம். இதில் தெய்வமாடும் குறப்பெண், மாட்சிமைப்பட்ட தலைமை சான்ற கோழிக் கொடியோடு, நெய்யையும், வெண் சிறுகடுகையும் அப்பி, தன் வழிபடுவதற்குரிய மூல மந்திரத்தை மறைவாக ஓதி வழிபட்டு கொழுவிய மலர்களைத் தூவி, குனிந்து கைகூப்பி வணங்கி வெவ்வேறு நிறத்தையுடைய இரண்டு ஆடைகளை உடுத்தும், சிவந்த நூலைக் கையில் காப்புக்கட்டி, வெண்பொரியைத் தூவி, வலிமையான கொழுத்த கிடாயினது குருதியோடு பிசைந்த தூய வெள்ளரிசியைச் சிறு பலியாக இட்டுப் பலியிடத்தில் வைத்து, சிறிய பசுமஞ்சளோடு மணமிக்க சந்தனம் முதலியவற்றைத் தெளித்துப் பெரிய குளிர்ச்சி நிறைந்த செவ்வலரி மாலையும் ஏனைய மாலைகளையும் பந்தலில் அசையும்படி தொங்கவிட்டு அடர்ந்த மலைப்பக்கத்து உள்ள நல்ல ஊர்களைப் 'பசியும் பிணியும் பகையும் நீங்குக" என்று வாழ்த்தி, நறிய மணப்பொருளைப் புகைத்து, அந்நிலத்திற்குரிய குறிஞ்சிப்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, December-2019 Available at: www.ijtlls.com

பண்ணைப் பாடி, முழங்குகின்ற அருவியின் ஓசையுடன் பல இசைக் கருவிகளும் முழங்க, சிவந்த நிறத்தினையும் உடைய பல பூக்களையும் தூவி, கண்டவர்க்கு அச்சம் தோன்றும்படி இரத்தத்தோடு கலந்த சிவந்த தினையரிசியைப் பரப்பி வைத்து, இறைவன் இவன் என்பார் அஞ்சும் படியாக அம்முருக பெருமான் வரும்படி வழிபாடு நடத்தினர்.

இறைவனுக்குச் செய்யும் வழிபாட்டுப் பலியை பேய் முதலியன நுகராமல் இருக்க வெண்கடுகு நெய்யுடன் அப்பினர் என்று கூறப்பட்டுள்ளது.

பேய்களை விரட்ட

அரிசில்கிழார் என்னும் புலவர் பாடிய பேய்க் காஞ்சி என்னும் புலவர் பாடிய பேய்க் காஞ்சி என்னும் துறையில் போர்க்களத்தில் வேந்தனுக்கு வந்த விழுமத்தை தான் ஏற்று புண்பட்ட வீரன் ஒருவனை பேய்கள் தொடாதவாறு காக்க மேற்கொண்ட முயற்சிகளை,

"தீம்கனி இரவமொடு வேம்பு மனைச் செரீஇ,
வாங்கு மருப்பு யாழொடு பல்இயம் கறங்க,
கை பயப் பெயர்த்து மைஇழுது, இழுகி
ஐயவி சிதறி, ஆம்பல் ஊதி
இசைமணி எறிந்து, காஞ்சி பாடி
நெடுநகர் வரைப்பில் கடிநறை புகைஇ,
காக்கம் வம்மோ - காதல் அம்தோழி!-
வேந்துறு விழுமம் தாங்கிய
பூம் பொறிக் கழற்கால் நெடுந்தகை புண்ணே"

எனும் புறநானூறு 281-ஆவது பாடல் விளக்குகிறது. புண்பட்டவனைப் பேய்கள் வந்து தொடாதவாறு காப்பதற்காக இரவ மரத்தின் தழையையும், வேப்ப மரத்தின் தழையையும், வீட்டில் செருகுதல், வீட்டைச் சுத்தப்படுத்துதல், வாசனை மிக்க அகில், சாம்பிராணி முதலியவற்றைப் புகைத்தல் இசைபாடி இறைவனை துதித்தல் போன்றவற்றை செய்ததாக இலக்கியங்கள் சுட்டுகின்றன.

மேலும் குழந்தை பெற்ற பெண்கள் வெண்சிறு கடுகை உடலில் அப்பி எண்ணெய் தேய்த்து நீவிய செய்தி நற்றிணை பாடல் 40-இல் குறிக்கப்பட்டுள்ளது. நெடுநல்வாடை 86-ஆவது வரியில் ஐயவி பெரிய கோபுர வாயிலில் உள்ள கதவுகளின் ஆணிகளில் ஐயவி எண்ணெய் விடப்பட்ட செய்தியும் நிலைக்கதவில் நெய்யுடன் ஐயவி அப்பிய செய்தியும் இடம் பெற்றுள்ளது.

'நெய்யொடு இமைக்கும் ஐயவித் திரள்காழ்' (நற். 370)
'நீயே ஐயவி புகைப்பவும் தாங்காது, ஒய்யென' (புறம். 98)
'வேம்பு சினை ஒடிப்பவும், காஞ்சி பாடவும்,
நெய்யுடைக் கையர் ஐயவி புகைப்பவும்
பிறந்த குழந்தைகளை பேய் தாக்கி கொல்லாதிருக்க
கடுகினை தலையில் அப்பும் வழக்கத்தினை' (புறம் 296)
'வெறியுற விரிந்த அறுவை மெல்லணை
புதல்வன் துஞ்ச ஐயவி யப்பி நெய்யணி
முச்சி' (மணிமேகலை 3:134-138)

மேற்கண்ட பாடல்களும் 'ஐயவி' பற்றி எடுத்துரைக்கின்றன.

இன்றைய நம்பிக்கை:

வீட்டில் புகுந்து கொள்ளும் தீய சக்திகளை விலக்குவது கடினம் அல்ல. ஆனால் வீட்டில் அமைதியின்மைக்குக் காரணமே தீய சக்திகள் தான் என்பது மட்டும் சத்தியமான உண்மை.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, December-2019 Available at: www.ijtlls.com

வெண்கடுகை வீட்டில் அனைத்து இடங்களிலும் தூவி 24 மணி நேரம் அப்படியே வீட்டைப் பெருக்காமல் வைத்திருந்து, பிறகு அவற்றை பெருக்கி எடுத்து ஒரு துணியில் முடித்து அதனை மூன்று வழிகூடும் இடத்தில் போட்டு விடலாம். பிறகு வீட்டை தண்ணீரில் விபூதி கலந்து அனைத்து இடங்களிலும் தெளித்து விடலாம். இதனால் வியாபார எதிரிகள் மற்றும் அனைத்து எதிரிகளும் விலகுவார்கள்.

பிரபஞ்சத்தின் அனைத்து தீய சக்திகளையும் அடக்கி ஒடுக்கி வைத்துள்ளவர் பைரவர் ஆவார். ஆகவே வெண்கடுகு உள்ள இடத்தில் தீய சக்திகள் இருக்க முடியாது. அவை சாம்பிராணியுடன் தூபத்தில் போடும்போது தீயாய் மாறும்போது அதன் உள்ளே உள்ள தேவகணங்கள் தீய ஆவிகளை அடித்துத் துரத்தும். பிறப்பு மட்டுமின்றி பழந்தமிழர் இறப்புசார் சடங்குகளில் ஐயவி என்ற கடுகினை இறுதி ஊர்வலத்தின் போது சிதறுதல் என்பது இன்றுவரை நடைமுறையில் உள்ள வழக்கம். இறந்தவரது ஆன்மா உறவுகளை துறக்க மனமின்றி இரவில் வீடு வரும்போது வழியில் கடுகினைக் கண்டு அதை பொறுக்கி முடிப்பதற்குள் விடிந்து விடும். விடிந்தபின் ஆன்மா இடுகாடு சென்றுவிடும் என்ற நம்பிக்கையும் இன்றுவரை உள்ளது.

- ❖ ஐயவி குறிஞ்சி நிலப்பயிர். எள் தரும் (நல்) எண்ணெய் போன்று ஐயவி எண்ணெய் தரும் வித்து.
- ❖ குழந்தை பெற்ற தாயை ஐயவி பூசி நீராட்டுவர்.
- ❖ குழந்தையின் தலை முச்சியில் ஐயவி அப்புவர்.
- ❖ குழந்தை பெற்ற தாய்க்கு ஐயவிப் புகைக்காட்டுவர்
- ❖ போரின் போது சமாதான அடையாளமாக ஐயவி புகைப்பர்.
- ❖ அரண்மனை மதில் கதவு எளிதாகச் சுழல ஐயவி எண்ணெய் அப்பியிருந்தனர்.

ஐயவி நாற்றத்தை விரட்டியடித்து பாக்டீரியா, வைரஸ் போன்ற கிருமிகள் உள்ளே நுழையாதவாறு தடுக்கிறது. நோய் எதிர்ப்பு சக்தியை மனிதனுக்குக் கொடுக்கிறது. அதன் புகையை சுவாசிக்கும் போது மன அமைதி கிடைக்கிறது. மன அமைதி இருந்தால் நற்செயல்கள் செய்ய முடியும் ஆகவே வெண்சிறு கடுகை தமிழர்கள் பயன்படுத்தினர் என்ற உண்மை புலப்படுகிறது.

முடிவுரை

சிறுத்தாலும் தமிழர் வாழ்வில் காரம் குறையாதது ‘கடுகு’.

தமிழர் வாழ்வில் அன்று தொட்டு இன்று வரை அறுபடாத நம்பிக்கை சார் பண்பாட்டு தொடர்ச்சியின் ஒரு கண்ணியாகவும் இதே ஐயவி உள்ளது. ‘ஐயவி’யைப் பயன்படுத்தி நாமும் ஐயமற வாழ்வோம்.

பார்வை நூல்கள்

1. *சங்க இலக்கியம் மூலமும் உரையும், தொகுதி* - 1., சாரதா பதிப்பகம், ராயப்பேட்டை, சென்னை -14.
2. *பத்துப்பாட்டு, பகுதி-2,* உரையாசிரியர் முனைவர் வி.நாகராசன், தலைமைப் பதிப்பாசிரியர்கள். முனைவர் கு.வெ.பாலசுப்ரமணியன், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட் 41-பி சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர் சென்னை - 600098.
3. *மணிமேகலை மூலமும் உரையும்.* ந.மு.வேங்கடசாமி நாட்டார், ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை, சாரதா பதிப்பகம்.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, December-2019 Available at: www.ijtlls.com

பெரும்பாணாற்றுப்படையில் உணவு

Food in "Perumpanattupadai"

முனைவர் பா.ம. ஜெயகலா, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
தமிழ்க் கலைஆய்வு மையம், தெ.தி. இந்துக் கல்லூரி, நாகர்கோவில் - 629 002.

Abstract

"Perumpanattupadai" the Sangam Literature brings out the food habits of the people who lived during that age. Ayittiyar used to eat rye with dried fish. Saline water was used for cooking purposes. Ayinar used to eat parboiled rice with monitor lizard meat. Millet mixed with dal was also eaten. Farmers used to eat white rice with chicken fry. They also consumed sugarcane juice and liquos with fish curry. Brahmins used to eat cereal grain with pomegranate and tender mango pickle. Inhabitants of neithal land (seashore) used to eat boar meat. Farmers also used to eat Jackfruit, Tender coconut, bananas, palm fruits and cassava. Hence, the article tries to bring down the facts related to it.

Keywords: Food, Tamil Culture, "Perumpanattupadai"

முன்னுரை

தமிழர்களின் வாழ்வின் பண்பாட்டுக் கருவூலமாகத் திகழ்பவை சங்க இலக்கியங்கள். சங்க இலக்கியம் சங்ககால மக்களின் அகப்புற வாழ்வை சித்தரித்துக் காட்டுகின்றன. எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் சங்க இலக்கியங்களாகப் போற்றப்படுகின்றன.

பத்துப்பாட்டு

நூறு அடிகளுக்கு மேலுள்ள ஆசிரியப்பாவால் அமைந்தப் பாடல்கள் பத்தினைப் பத்துப்பாட்டு எனத் தொகுத்தனர். பத்துப்பாட்டு நூல்களைப் பற்றி பழைய வெண்பா,

**"முருகு பொருநாறு பாண்இரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி, மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சிப் பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து"**

எனக் கூறிகிறது. திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம் ஆகிய ஐந்தும் ஆற்றுப்படை நூல்களாகும். மதுரைக்காஞ்சி புறம் சார்ந்த நூலாகும். முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை ஆகியவை அகம் சார்ந்த நூல்காளாகும். நெடுநல்வாடை அகமும் புறமும் சார்ந்த நூலாகும்.

ஆற்றுப்படை

ஆறு என்றால் வழி எனவும், படை என்றால் படுத்தல் அல்லது சேர்த்தல் எனவும் பொருள்படும். கலைஞர்களும், புலவர்களும், தம் வறுமை தீரப் பொருள் உதவி செய்யும் செல்வந்தர்களை அணுகி தம் புலமையால் உதவிப் பெற்றனர். இவர்கள் தம்மைப்போல் மற்றப் புலவர்களும், கலைஞர்களும் வறுமை தீர்ந்து வளமாக வாழ வழிகாட்டினர்.

உணவு

தொடக்காலம் தொட்டு இன்றுவரை மனிதன் வாழ்வதும், போராடுவதும் உணவுக்காகத்தான். உணவினைச் சுவைபட சமைப்பதிலும் சுவை சேர்த்து உண்பதிலும் தமிழர்கள் சிறந்து விளங்குகின்றனர். சமுதாய ஏற்ற இறக்கங்களுக்கு ஏற்ப உணவுமுறை,

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, December-2019 Available at: www.ijtlls.com

தரம் போன்றவை வேறுபடுகின்றன. உணவுப் பஞ்சம் ஏற்படும் நாட்டில் குற்றங்கள் அதிகமாகின்றன.

"தெய்வம் உணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியோடு தொகைஇ
அவ்வகை பிறவின் கருவென மொழிப" (தொல். பொ. 20)

என கருப்பொருளை வகைப்படுத்துகின்ற தொல்காப்பியர் தெய்வத்திற்கு அடுத்த நிலையில் உணவை வைத்துள்ளார்.

பெரும்பாணாற்றுப்படையில் உணவு

வலிமையான மரத்தினால் செய்யப்பட்ட உளி போன்ற வாயையுடைய கடப்பாரையைக் கொண்டு எறும்புப்புற்றைப் பெயர்த்து புல்லரிசியை எயிற்றியர் சேகரித்ததை,

"இரும்புதலை யாத்த திருந்துகணை விழுக்கோல்
உளிவாய்ச் சுரையின் மிளிர மிண்டி
இருநிலக் கரம்பைப் படுநீறு ஆடி
நுண்புல் அடக்கிய வெண்பல் எயிற்றியர்" (பெரும். 91-94)

இவ்வரிகள் எடுத்துரைக்கின்றன. இதன் மூலம் புல்லரிசியை உணவாக உண்டுள்ளனர் என்பதனை அறிய முடிகிறது. உணவு சமைக்க, உவர்ப்பு நீரைப் பயன்படுத்தியதை,

"- - - - - - - - - - நெடுங்கிணற்று
வல்ஊற்று உவரி தோண்டி" (பெரும். 97-98)

இவ்வடிகள் உறுதி செய்கின்றன. எயிற்றியர் புல்லரிசி சோற்றை கருவாட்டோடு பாணர்களுக்கு அளித்துள்ளதை, **"வாராது அட்ட வாடுஊன் புழுக்கல்" (பெரும். 100)**
என்ற வரி சுட்டுகிறது. இன்றும் வெயிலில் உலர்த்திய மீனைக் கருவாடு என்னும் உணவாக பயன்படுத்துகிறோம். இதனை சிலர் தீயில் சுட்டும் சிலர் மசாலாப் பொருட்களுடன் சமைத்தும் பயன்படுத்துகின்றனர். இவ்உணவு நெய்தல் நிலம் சார்ந்தது.

எயினர்கள் ஈந்தின் விதை போன்ற சிவந்த சோற்றையும், நாய்கள் வேட்டையாடி கொணர்ந்த உடும்பின் பொரியலையும் உண்டதோடு மட்டுமல்லாமல் பாணர்களுக்கும் அளித்ததை,

"கொடுவில் எயினக் குறும்பில் சேப்பின்
களர்வளர் ஈந்தின் காழ்கண் டன்ன
கவல்வினை நெல்லின் செவ்அவிழ்ச் சொன்றி
ஞமலி தந்த மனவுச்சூல் உடும்பின்
வறைகால் யாத்தது, வயின்தொறும் பெறுகுவிர்" (பெரும். 129-133)

இவ்வரிகள் புலப்படுத்துகின்றன. செந்நெல் அரிசியும், உடும்பு இறைச்சியும் இன்றும் வழக்கில் உள்ளன.

பகை மன்னனின் ஆநிரைகளைக் கவர்ந்து வந்து பண்டமாற்று முறையில் கள்ளினைப் பருகியதை,

"கேளா மன்னர் கடிபுலம் புக்கு
நாள்ஆ தந்து நறவுநொடை தொலைச்சி
இல்அடு கள்இன் தோப்பி பருகி" (பெரும். 140-142)

இவ்வரிகளில் ஆசிரியர் சுட்டியுள்ளார். உணவாகவும், மகிழ்ச்சியூட்டும் பானமாகவும் பயன்படுத்தியுள்ளனர்.

வரகினது சோற்றை வேங்கைப்பூவை ஒத்த பருப்போடு கலந்து உண்டுள்ளனர். இவ்வுணவினை மூரல் என்றனர். இச்சசெய்தியினை,

"நெடுங்குரல் பூளைப் பூவின் அன்ன

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, December-2019 Available at: www.ijtlls.com

குறுந்தாள் வரகின் குறள்அவிழ்ச் சொன்றி
புகர் இணர் வேங்கை வீகண் டன்ன
அவரை வான்புழுக்கு அட்டி பயில்அற்று
இன்சுவை மூரல் பெறுகுவீர்'' (பெரும். 192-196)

இப்பெரும்பாணாற்றுப் பாடல் வரிகள் எடுத்துரைக்கின்றன. வரகு சிறுதானிய வகைகளுள் ஒன்றாகும். நமது உடலுக்கு தேவையான தாதுக்கள், இரும்புசத்து, பாஸ்பரஸ், கால்சியம் அனைத்தும் வரகரிசியில் நிறைந்துள்ளது. இவ்வரிசி கொண்டு செய்யப்பட்ட உணவுகளை உண்டால் உடலுக்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் கிடைக்கும். எனவே இன்றும், நாம் வரகரிசியைப் பயன்படுத்துகிறோம். பருப்பு உணவு வகைகளில் முக்கியமான ஒன்றாகும். இன்று அன்றாடம் எதாவது ஒரு வகையில் பருப்பினை நாம் உணவாக பயன்படுத்திக் கொண்டிருக்கின்றோம். பருப்பில் பல வகைகள் உள்ளன. சங்ககாலம் முதல் இன்று வரை வாகுஅரிசியும் பருப்பும் நம் உணவோடு இரண்டற கலந்துள்ளன.

உழவர்கள் பாணர்களுக்க்கு வெண்மைநிற நெற்சோற்றோடு கோழிபொரியலையும் அளித்துள்ளதை,

"வினைஞர் தந்த வெண்ணெல் வல்சி
மனைவாழ் அளகின் வாட்டொடும் பெறுகுவிர்'' (பெரும். 254-255)

இவ்வடிகள் பகர்கின்றன. கரும்பு ஆலைகளில் சென்று பாணர்கள் கருப்பஞ்சாறு பருகியதை, **"கரும்பின் தீம்சாறு விரும்பினிர் மிசைமின்'' (பெரும். 262)** இவ்வரி சுட்டுகிறது. இதன் மூலம் வெண்நெல்சோறு, கோழி இறைச்சி, கரும்புசாறு இவற்றை சங்ககால மக்கள் உணவாக உட்கொண்டதை அறிய முடிகிறது. இவ்வுணவுகளை இன்றும் நாம் பலவகை உணவுகளாக விதவிதமாக சமைத்து விருப்பத்தோடு பயன்படுத்தி வருகிறோம். வலைஞர்கள் கள் தயாரித்து அதனை சூடான மீனோடு பயன்படுத்தியதை,

"அவையா அரிசி அம்களித் துழவை
- - - - - - - - - - - - - - - - - -
வெந்நீர் அரியல் விரல்அலை நறும்பிழி
தண்மீன் குட்டொடு தளர்தலும் பெறுகுவிர்'' (பெரும். 275 – 282)

இவ்வடிகள் எடுத்துரைக்கின்றன. இன்றும் நம் சமூகத்தில் கள், மீன் போன்றன பயன்பாட்டில் உள்ளன. அந்தணர்கள் பாணர்களுக்கு உணவளித்ததை,

"சுடர்க்கடை பறவைப் பெயர்ப்படு வத்தம்
சேதா நறுமோர் வெண்ணெயின் மாதுளத்து
உருப்புற பசுங்காய்ப் போழொடு கறிகலந்து
கஞ்சக நறுமுறி அளைஇ பைந்துணர்
நெடுமரக் கொக்கின் நறுவடி விதிர்த்த
தகைமாண் காடியின் வகைபடப் பெறுகுவிர்'' (பெரும். 305 – 310)

இவ்வரிகள் சுட்டுகின்றன. நெல் சோற்றையும், மிளகுபொடியும், கறிவேப்பிலையும் கலந்த மாதுளங்காய்ப் பொரியலையும், மாவடு ஊறுகாயையும் அந்தணர்கள் உணவாகப் பயன்படுத்தியுள்ளனர். இத்தகைய சிறந்த சத்து மிகுந்த உணவினைப் பாணர்களுக்கும் அளித்துள்ளனர். இவ்வுணவுகள் இன்றும் வழக்கத்தில் உள்ளன.

பட்டினங்களில் வாழும் மக்கள் நெல்லை இடித்து மாவாக்கி அதை உணவாகப் கொடுத்து வளர்த்த ஆண்பன்றியின் கொழுத்த தசையுடன் கள்ளையும் உண்டுள்ளனர். இவ்வுணவினை தம்மை நாடி வந்த பாணர்களுக்கும் அளித்துள்ளனர். இதனை,

"நெல்மா வல்சி தீற்றி பல் நாள்
குழிநிறுத்து ஓம் பிய குறுந்தாள் ஏற்றைக்
கொழுநிணத் தடியொடு கூர்நறாப் பெறுவீர்'' (பெரும். 343-345)

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, December-2019 Available at: www.ijtlls.com

இவ்வரிகள் வழி அறியமுடிகின்றது.

பலாப்பழம், இளநீர், வழைப்பழம், பனையின் நுங்கு, வள்ளி முதலிய கிழங்குகளையும் தோப்புக்குடியில் வாழும் மக்கள் உண்டுள்ளனர். இதனை பாணர்களுக்கும் அளித்துள்ளனர். இச்செய்தியினை,

"தண்டலை உழவர் தனிமனைச் சேப்பின்
தாழ்கோட் பலவின் சூழ்சுளைப் பெரும்பழம்
வீழ்இல் தாழைக் குழவித் தீம்நீர்
கவைமுலை இரும்பிடிக் கவுள்மருப்பு ஏய்க்கும்
குலைமுதிர் வாழைக் கூனி வெண்பழம்
திரள்அரைப் பெண்ணை நுங்கொடு பிறவும்
தீம்பல் தாரம் முனையின் சேம்பின்
முளைப்புற முதிர்கிழங்கு ஆர்குவிர்" (பெரும். 355 – 362)

இப்பாடலடிகள் தெளிவுறுத்துகின்றன. பலாப்பழம், இளநீர், வாழைப்பழம், நுங்கு, கிழங்கு வகைகள் இன்றும் நாம் அன்றாடம் உணவாகப் பயன்படுத்தி வருகிறோம்.

செந்நெல் சோற்றோடு இறைச்சி கலந்த உணவினையும் சங்ககால மக்கள் உண்டுள்ளனர். இதனை,

"வல்லோன் அட்ட பல்ஊன் கொழுங்குறை
அரிசெத்து உணங்கிய பெருஞ்செந் நெல்லின்
தெரிகொள் அரிசித் திரள்நெடும் புழுக்கல்
அருங்கடித் தீம்சுவை அமுதொடு பிறவும்" (பெரும். 472-475)

இவ்வடிகள் நமக்கு எடுத்துரைக்கின்றன. சோற்றோடு ஊன் கலந்த உணவானது இன்று அனைவராலும் விரும்பப்படும் உணவாகும்.

முடிவுரை

சங்ககாலத்தில் தோன்றிய பெரும்பாணாற்றுப்படை வழி அக்கால மக்களின் உணவினை அறிந்து கொள்ள முடிந்தது. பெரும்பாணாற்றுப்படையில் கூறப்பட்ட உணவுகள் அனைத்தும் இன்றும் நம் சமூகத்தில் வழக்கத்தில் உள்ள உணவுகளாகும். உணவுகளில் எந்த வேறுபாடும் இல்லை. ஆனால் இவ்வுணவுகளை சமைத்துப் பக்குவபடுத்துதலில் காலத்திற்கேற்ப மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. சங்ககால மக்கள் ஆரோக்கியமான உணவுகளை உண்டுள்ளனர். திணைக்கு திணை உணவில் மாற்றங்கள் இருந்திருக்கின்றன.

துணைநூற்பட்டியல்

1. திருஞானசம்பந்தம். சு. *தொல்காப்பியம் பொருளதிகாரம்*, கதிர் பதிப்பகம்,, திருவையாறு. (2018).
2. மோகன். முனைவர் இரா. *பத்துப்பாட்டு* (முதற்பகுதி). நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை. (2011).

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, December-2019 Available at: www.ijtlls.com

பாவாணரின் தனித்தமிழ்ப் பற்று

Pavanar's Patriotism for Individual Tamil

முனைவர் சா. ஜோக்கிம் பெலிக்ஸ், உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
தூய ஜெரோம் கல்லூரி, அனந்தநாடார்குடி, நாகர்கோவில், கன்னியாகுமரி - 629201.

Abstract

The research article fosters the ideology of Pavanar and his concept on the antiqueness of the Classic Tamil Language. He evinces that Tamil is the mother of all South Indian languages. He points out it is also the root for Aryan and all South Indian Dravidian Languages. His emphasis shows the classic quality of Tamil Language. To know th supreme state of the Tamil Language, applying Linguistic perspectives are very vital. While emphasizing the classic root of Tamil on other Dravidian Languages, it becomes imperative to know evidently about the origin of Tamil Language. Hence, the article probes with Pavanar's ideas to elicit the classic status of it.

Keywords: Pavanar, Individual Tamil, Classic Antiqueness

துவக்கமாக

பாவாணரின் மொழிக் கோட்பாட்டின் முப்பெருந்தன்மைகளுள் ஒன்றான தமிழ், திரவிடத்திற்குத் தாய் மற்றும் ஆரியத்திற்கு மூலம், ஞால முதன் மொழி ஆகிய இரண்டிற்கும் அடிப்படையாய் அமையும் திறத்தது. சமற்கிருதத்தின் ஐந்து நிலைகளாகத் தென் திரவிடம் (வடுகு), வடதிரவிடம் (பிராகிருதம்), கீழையாரியம், வேதமொழி, சமற்கிருதம் என அவர் குறிப்பிடுவதில் முதன்மையாக அமையும் திரவிடத்திற்குத் தமிழின் தாய்மையைக் காட்டுவது அடிப்படை. ஞாலமுதன் மொழியாம் இயன்மொழியினின்று திரிந்த திரிமொழிகளை விளக்குவதற்குத் தமிழின் திரவிடத் தாய்மை அடிப்படையை ஆராய்வது அவசியம். ஞால முதன்மொழியை நிறுவுவதற்குப் பெருமளவில் மொழியியல் சார்ந்த செய்திகளையே நாட வேண்டியிருக்கிறது. அவ்வகையில் திரவிடத் தாய்மையை ஆராய்வது ஞால முதன்மொழித் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு உறுதுணையாய் அமையும்.

தமிழ் பழமையான மொழி, வளமையான மொழி, வேர்ச்சொற்களைத் தாங்கி நிற்கும் மொழி, பெருநிலப்பரப்பில் பேசப்பட்ட மொழி என்னும் நாற்பெருந்தன்மைகளின் அடிப்படையில் அது திரவிடத்திற்குத் தாயாய் விளங்கும் தன்மையை விளக்கலாம்.

காலப்பழமை

திரவிடக் குடும்ப மொழிகளுள் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கு மொழிகள் மட்டும் இலக்கிய வளமுடையன. எஞ்சியவை பேச்சு மொழியாக இருந்து வருகின்றன. பேச்சு மொழிகளாக இருப்பனவற்றின் பழமையை அறிய பதிவு எதுவும் கிடைப்பதில்லை. இலக்கியம் அமைந்த நான்கு மொழிகளும் வெவ்வேறான கால வரலாறு இலக்கியங்களைக் கொண்டுள்ளன. இந்நான்கு மொழிகளுள் தமிழ் மிகப் பழமையான இலக்கியங்களைக் கொண்டுள்ளது. கிடைத்துள்ள இலக்கியங்களுள் மிகவும் தொன்மையானது தொல்காப்பியம். தொல்காப்பியம் திரவிட மொழிகளில் காணப்படும் தொன்மையான நூல் என்னும் தகுதியைப் பெற்றுள்ளது. இது ஒரு இலக்கண நூலாக இருப்பதால் இதற்குமுன் பல

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, December-2019 Available at: www.ijtlls.com

இலக்கியங்கள் இருந்துள்ளன என்பது வெளிப்படை. அதற்குமுன் பல நூற்றாண்டுகள் பேச்சு மொழியாய் தமிழ் இருந்துள்ளது.

தொல்காப்பியர் காலத்தில் மலையாளம், கன்னடம், தெலுங்கு, துளு போன்ற திரவிட மொழிகள் எதுவுமே உருவாகவில்லை. தொல்காப்பியம் குறிப்பிடும் திசைச்சொற்கள் தமிழின் கிளை வழக்குச் சொற்களே. அவை அன்று புரிந்து கொள் தன்மையினவாக இருந்தன. அக்கிளை வழக்குகள் பின்னர் தனித்தனி மொழிகளாக உருப்பெற்றன. (இசுரயேல் 1973: 351 – 4)

“திசைச்சொல் என்பன செந்தமிழ் நிலத்து வழங்காது கொடுந்தமிழ் நிலங்களில் மட்டும் வழங்கிய திருந்திய சொற்களும் சொல் வழக்குகளுமே… முற்காலக் கொடுந்தமிழ்களே பிற்காலத் திரவிட மொழிகள் என்றறிதல் வேண்டும்” (பாவாணர் 1968: 2,3) “இலக்கணம் நிரம்பிய சிறந்த வழக்கான தமிழ் செந்தமிழ். அது திரிந்தது கொடுந்தமிழ்” (பாவாணர் 1944: முன். 9) “கொடுந்தமிழ்ச் சொற்கள் செந்தமிழ் நாட்டைச் சூழப் பல திசையிலும் வழங்கினமையின் திசைச் சொற்களெனப்பட்டன” (பாவாணர் 1944: முன். 10). செந்தமிழும் கொடுந்தமிழும் சேர்ந்தது தமிழாதலால் தமிழல் திரவிட மொழிகளெல்லாம் பழைய கொடுந்தமிழ்களே. (பாவணர் 1944: முன். 22)

கிறிஸ்துவிற்குமுன் தமிழிலன்றித் திரவிட மொழியெதிலும் இலக்கியம் உருவாகவில்லை. (பாவாணர் 1967: 36) திரவிட மொழிகளில் இலக்கியங்கள் தோன்றிய காலங்களைப் பற்றிக் குறிப்பிடும்போது கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகியவற்றின் இலக்கியங்களுக்கான முயற்சிகள் துறையே கி.பி. 3, 5, 12 ஆம் நூற்றாண்டுகள் அளவில் நடந்துள்ளன என்பர். (குசலப்ப கவுடா 1972: 78). திரவிட மொழியிலக்கியங்களை இந்த அளவிற்கு முன்கொண்டு சென்றாலும் தமிழின் இலக்கியக் காலத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிக நீண்ட கால இடைவெளி இருப்பதைக் காணலாம். இது தமிழின் பழமையைத் தெற்றெனக் காட்டுகிறது.

மொழி வளர்ச்சி வரலாற்றில், தாய் மொழியினின்று பிரிந்து தனிமொழியாக வடிவம் பெறும் நிலையை அபபிரம்ச நிலை என்பார்கள். மலையாள இலக்கண ஆசிரியரான இராசராசவர்மா கி.பி. 14 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை மலையாள மொழி இந்த அபபிரம்ச நிலையை தாண்டவில்லை என்கிறார். இக்காலத்தை அவர் கரிந்தமிழ்க் (தமிழ்ச்சிதைவு) காலம் என்று கூறுகிறார். (குஞ்ஞன் பிள்ளை 1970: 218). இதுபோன்று திரவிட மொழிகள் அனைத்தும் தனித்தனி மொழிகளாக வடிவம் பெறும் நிலையின வாகச் சில காலம் இருந்துள்ளன. பின்னரே அவை தனித்தனி மொழிகளாக ஆகியுள்ளன.

தமிழல்லாத பிற திரவிட மொழிகளில் இலக்கிய நடைக்கும் பேச்சு நடைக்கும் இடையே காணப்படும் வேறுபாடுகளைக் காட்டிலும் தமிழில் இலக்கிய நடைக்கும் பேச்சு நடைக்கும் இடையே காணப்படும் மிகுதியான வேறுபாடு, தமிழின் சொல்வளம், செந்தமிழின் பல்வேறுவகைப்பட்ட இலக்கண வடிவங்கள், இன்றைய திரவிட மொழிகளைக் காட்டிலும் பழந்திரவிட மொழிகள் தமிழோடு பெருமளவில் ஒத்துவருவது, திரவிட மொழிகளில் காணப்படும் வேர்ச்சொற்களும் சொல்லுருவங்களும் தமிழ்ச் சொற்களின் சிதைவுகளாய் இருப்பன. பழந்தமிழில் குறைந்த அளவே வடசொல் இருப்பது, அவ்வடசொற்களும் உருமாற்றி வழங்குவது ஆகியவற்றைத் தமிழின் தொன்மைக்குச் சான்றுகளாகக் காட்டுவார் கால்டுவெல் (1856: முன். 81 – 83)

இன்றும் பச்சமலையாளம், அச்ச கன்னடம், அச்ச தெலுங்கு ஆகியவற்றைப் பார்த்தால் அவற்றுக்கும் தமிழுக்கும் இடையே உள்ள தொடர்பு புலனாகும். அதிலும் அவற்றின் பழமையான நிலை தமிழுடன் நெருக்கத் தொடர்பினைக் காட்டுகின்றன.

வளமை

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, December-2019 Available at: www.ijtlls.com

தமிழன் சொல்வளத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது தமிழுக்குரியதென்று கருதப்படும் சொற்களுடன் தெலுங்கு, கன்னடம் முதலிய திரவிட மொழிகளுக்குக்குரியதென்று கருதப்படும் சொற்களையும் கொண்டுள்ளது என்பார் கால்டுவெல் (1856: முன். 82). வழக்கிழந்த சொல்லுருவங்கள், ஆட்சியிழந்த சொல்லாக்க முறைகள், முரண்பட்ட மரூஉ முடிபுகள் ஆகியவற்றின் கருவூலமாகத் தமிழ் திகழ்வதையும் அவர் குறித்துள்ளார். திருந்திய திரவிட மொழிச் சொற்கள் இருப்பன போன்றே திருந்தாத் திரவிட மொழிச் சொற்களையும் தமிழ் கொண்டுள்ளது. இவ்வாறான சொற்களைக் கொண்டும் வரலாற்றை ஆராய்ந்துள்ளார் பாவாணர். சான்றுக்குத் தமிழ்நாட்டில் இன்றுள்ள மலைவாழ் இனத்தாருள் மிகப் பழமையானவர்களாகக் கருதப்படும் துடவர் கீழிருந்து மலைமேல் சென்றவர் என்பதை 'மேக்' என்று அவர்கள் மேற்குத் திசையை அழைப்பதினின்று விளக்குவதைக் காட்டலாம். தமிழ்நாட்டில் மேற்குதிசை மேட்டினையும் கிழக்குத்திசை தாழ்வான பகுதியையும் குறிக்கின்றன. ஆனால் மலையுச்சியில் வாழும் துடவருக்கு மேல்திசை மேடாக இல்லை. இருந்தாலும் அவர்கள் மேற்குத் திசையை 'மேக்' என்று அழைக்கின்றனர். (பாவாணர் 1967: முன். 12)

துடவமொழியை ஆராய்ந்த எமனோ (1965 : 18) மொழியியல் அடிப்படையில் துடவ மொழி முன்னை – தமிழ் (Pre – tamil) மொழியுடன் தொடர்புடையது என்றும் தமிழிலிருந்து பிரிந்த காலம் முதல் துடவர் நீலமலையில் வாழ்ந்து வருகின்றனர் என்றும் குறிப்பிடுவார்.

நன்கு வளர்ந்த குமுகாயத்தில் இயல்பாகவே சொற்கள் நேரிதாகவும், சொற்பொருள் நுணுக்கமான கருத்துக்களைத் தெரிவிக்கும் வகையிலும் அமைந்திருக்கும். அவ்வகையில் தமிழில் நுண்ணிய கருத்துக்களைத் தெரிவிக்கும் வகையில் அமைந்துள்ள சொற்கள் அதன் வலிமையைத் தெற்றென தெரிவிக்கின்றன.

திரவிட மொழிகளிலுள்ள சொற்கள் தமிழ்ச் சொற்களினின்று பொருள் திரிந்தனவாகவும், வடிவு திரிந்தனவாகவும் இருப்பனவற்றைக் காட்டுவார் பாவாணர். திரவிட மொழிகளில் நிலவும் புதுச் சொற்களும் தமிழில் மறைந்த வேர் சொற்களைக் கொண்டனவாகவும் மறையா வேர்ச்சொற்களைக் கொண்டனவாகவும் காட்டுவார் அவர். இவ்வகையில் ஏறக்குறைய திரவிட மொழிகளிலுள்ள சொற்கள் அனைத்திற்கும் தமிழில் இனச்சொற்கள் இருக்கின்றன.

தமிழின் வளம் பலதுறைகளிலும் சிறந்து காணப்படுவதை விளக்கியுள்ளார் பாவாணர். குறிப்பாகத் தம் சொல் லாராய்ச்சிக் கட்டுரைகள் என்னும் நூலில் ஒருபொருட் பன்மொழிகள் பலபொரு ளொரு சொற்கள் போன்றன மிக்கிருப்பனவற்றைக் காட்டியுள்ளார். திரவிட மொழிக் குடும்பத்தில் பிற மொழிகளைக் காட்டிலும் தமிழ் வளமையுடன் இருக்கிறது. இது இதன் தாய்த் தன்மையை நிறுவுவதற்கு ஏற்றதாக இருக்கிறது. அதுவும் தமிழில் ஒரு பொருட் பன் மொழிகளாக இருப்பன திரவிட மொழி களில் தனிச்சொற்களாக வழக்கில் இருப்பன தமிழின் திரவிடத் தாய்த்தன்மையைச் சிறப்பாக எடுத்துக்காட்டுகின்றன.

வேர்ச்சொல்

எமனோவும் பரோவும் தொகுத்த திரவிடச் சொற்பிறப்பு அகரமுதலியில் வேர் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்ட 4570 சொற்பகுப்புகளுள் 3250 - க்கும் மேற்பட்ட சொற்பகுப்புகளில் தமிழ்ச் சொற்கள் இடம் பெற்றுள்ளன. இது திரவிட மொழிக் குடும்பத்தில் பெரும்பான்மையான சொற்களின் வேர்மூலங்களைத் தமிழ் தாங்கி நிற்பதைக் காட்டுகிறது. இந்தச் சொற்பிறப்பு அகரமுதலி இன்றைய மொழியியல் அடிப்படையில் வேர்பகுப்புச் செய்து அதற்கேற்பச் சொற் பகுப்புகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவ்வாறில்லாமல் பாவாணர் காட்டும் வேர் அடிப்படையைப் பொருத்திப் பார்த்தால் தமிழ்ச் சொற்கள் இடம் பெறாத எஞ்சிய சொற்பகுப்புகளுள் பெரும்பான்மையானவற்றிற்கும் தமிழ் வேர்மூலத்தைக் காட்டலாம்.

திரவிடக் குடும்பத்தில் வேர் அடிப்படையில் தமிழ் பெற்றுள்ள முதன்மையான இடத்தைக் காட்டும் வகையில் இவ்வகர முதலியில் தமிழ்ச் சொற்கள் முதலாவதாகக் காட்டப்பட்டுள்ளன. தமிழ்ச்சொல் இடம் பெற்றுள்ள பெரும்பான்மையான பதிவுகளில் வேர்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, December-2019 Available at: www.ijtlls.com

அடிப்படையில் தொடர்புடைய தமிழ்ச் சொற்கள் குடும்பங் குடும்பமாகவும் கூட்டங் கூட்டமாகவும் இயங்குகின்றன என்னும் பாவாணரின் (1979 : 109) கூற்றை உறுதிபடுத்துவதாக இருக்கிறது.

“திரவிட மொழிக்குழுவினுள் பிற மொழிகளைக் காட்டிலும் தமிழ் மூல மொழியுடன் நெருக்கத் தன்மை கொண்டுள்ளது. அது திரவிட வேர்களின் பழமையான வடிவங்களைத் தக்க வைத்துள்ளது. தென்னிந்திய மொழிகளை ஆராய அதனைப் பற்றி அறிவது தேவையாகும்” (பிரௌன் 1905 : முன். 4).

பாவாணர் தம் ஆய்வு தமிழல்லாத பிற திரவிட மொழிகளிலுள்ள திரவிடச் சொற்கள் அனைத்துக்கும் தமிழில் வேர்காட்ட இயலும் என்பதை வெளிபடுத்தியது. அம்மொழிகளில் உருவான புதுச்சொற்களையும் மறைந்த வேர்ச்சொல்லை உடையன (எ-டு: தெலுங்கு அம்முஞீவில்), மறையா வேர்ச்சொல்லை உடையன (எ-டு: தெலுங்கு அள் (காது) ஞீ அடுகு) என வகைப்படுத்துவார் (1944 : முன் 11). இதில் மறைந்த வேர்ச்சொல்லை மீட்டுருவாக்கம் செய்துள்ள நிலையையும் காண்கிறோம்.

“திரவிடக் குடும்ப மொழிகளுள் முதன் முதலில் திருந்திய தன்மை எய்தியது தமிழ். சொல்வளம் மிக்க மொழி இது. பழமைத் தன்மை பலவற்றை உள்ளடக்கிய மொழி இது. ஆகையால் திரவிடக் குடும்ப மொழிகளுள் தலைமை இடத்தில் வைத்துக் கணக்கிடும் தன்மை கொண்டது” என்பார் கால்டுவெல் (1856: முன். 6)

திரவிடக் குடும்ப மொழிகளுள் முதலாவதாக வைத்து எண்ணத்தக்க வகையில் அமைந்த மொழி தமிழ். திரவிடக் குடும்பத்தின் மூலக்கூறுகளில் பெரும் பாலானவற்றைத் தக்க வைத்துள்ளது தமிழ் என்றும் பிற திரவிட மொழிகள் எல்லாம் அதிலிருந்து திரிபுற்றன என்றும் கருதப்படுகின்றன. தமிழில் அடங்கியுள்ள அளவுக்குப் பொதுத் திரவிடத் தன்மை பிற திரவிட மொழிகளில் இல்லை என்பது உறுதி என்கிறது இந்திய மொழிகளில் அளவீடு.

இதுபோன்ற அறிஞர் பெருமக்களின் கூற்றுகள் திரவிட மொழிக் குடும்பத்தின் மூல வேர்களைத்தமிழ் தாங்கி நிற்கிறது என்பதை விளக்குகின்றன.

பெருநிலப்பரப்பு

கடல்கோள், இனப்பெருக்கம், நாடு காண் விருப்பம் போன்ற காரணங்களால் இயல்பாய்த் தோன்றிய தமிழ் பல்வேறு மொழிகளாகத் தோன்றிய தமிழ் பல்வேறு மொழிகளாகத் திரிந்தன என்பார் பாவாணர். இன்றைய நிலையில் தமிழ் வேங்கட மலைக்குத் தெற்கே, மேற்குத் தொடர்ச்சி மலைக்குக் கிழக்கே, வங்கப் கடலுக்கு மேற்கே இந்துமாவாரியின் வடக்கே உள்ள நிலப் பரப்பில் வழங்குகிறது.

“பனிமலை தோன்றாத முதற்காலத்தில் நாவலந்தேய முழுவதும், தொல்காப்பியர் காலத்தில் வேங்கடத்திற்கும் (தெற்கேயழிந்து போன) குமரி மலைக்கும் இடையிலும் வழங்கி வந்து தற்போது வேங்கடத்திற்கும் குமரிமுனைக்கும் இடையில் மேற்குத் தொடர்ச்சி மலைக்கும் மைசூர் சீமைக்கும் கிழக்கில் வழங்கி வருவது தமிழ்மொழியாம்” (1944 : முன். 3) என்று காலந்தோறும் தமிழ் வழங்கிய இடங்களைக் குறிப்பிடுவார் பாவாணர்.

முன்னர்க் கொடுந்தமிழ் நிலங்களாக இருந்தன இன்றைய திரவிட மொழி நிலங்களாக இருக்கின்றன (பாவாணர் 1986 ˙3). கடல் கொண்ட தென்னாட்டை எடுத்துக் கொண்டாலும், இன்றைய இந்திய நாட்டை எடுத்துக் கொண்டாலும் தமிழ் வழங்கிடம் முன்னர் பெரிய நிலப்பரப்பாய் இருந்தது. இது தமிழின் திரவிடத் தாய்மைப்பண்பைக் காட்டுவதற்குரியதாக இருக்கிறது.

பெயர்

தமிழுக்குத் தமிழ் என்னும் பெயர் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே அமைந்துவிட்டது. இன்றுவரை இம்மொழியின் பெயர் தமிழ் என்றே அடைக்கப்பட்டு வருகிறது. வெவ்வேறு காலக்கட்டங்களில் தமிழிலிருந்து தனியான மொழிகளாகப் பிரிந்தவை தெலுங்கு,

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, December-2019 Available at: www.ijtlls.com

கன்னடம், மலையாளம் என்றாற் போன்று பெயர்களைத் தாங்கி நிற்கின்றன. இதில் இரண்டு தன்மைகள் குறிப்பிடத்தக்கனவாக இருக்கின்றன. ஒன்று திரவிட மொழிகளை நோக்க தமிழ் நீண்டகால வரலாற்றைக் கொண்டுள்ளது. இரண்டவதாகத் தமிழ் என்றே தொடர்ந்து வழங்கி வற்துள்ளது இதன் தாய்மைப் பண்பைக் காட்டுகிறது. அதாவது இதிலிருந்து பிரிந்த மொழிகள் வெவ்வேறு பெயர்களைத் தாங்கி இருக்க இது அதே பெயருடன் விளங்குகிறது.

தாய்

குடும்ப மொழிகளுள் காலத்தால் பழமையானதும் வளமையாக விளங்கும் மொழியை மற்ற மொழிகளுக்குத் தாய் என்று குறிப்பிடுவது இந்திய ஐரோப்பிய மொழிக் குடும்பத்திலும் உண்டு. அங்கு இலத்தீன் மொழியிலிருந்து உரோமன்சு மொழிகள் அனைத்தும் பிறந்தன என்று கொள்ளப்படுகிறது. பிறகு இலத்தினும், உரோமன் மொழிகளும் சேர்ந்து இந்திய – ஐரோப்பிய மொழிக் குடும்பம் என்றழைக்கப்படுகிறது. (இலேமன் 1966 : 6,7). அதேபோல் திரவிட மொழிகள் அனைத்தும் தமிழினின்று பிறந்தன என்று கொள்வதே சரியானது. ஆங்கு இலத்தீனும் உரோமன்சு மொழிகளும் சேர்ந்த இந்திய – ஐரோப்பியக் குடும்பம் என்றாவது போல் தமிழும் திரவிட மொழிகளும் சேர்ந்து ஒரு மொழிக்குடும்பம் எனக் கொள்ள வேண்டும். இம்மொழிக் குடும்பத்திற்குத் தான் பாவாணர் தமிழியத் எனப் பெயரிட்டார். தமிழும் திரவிட மொழிகளிலுள்ள திரவிடக் கூறுகளும் சேர்ந்து தென்மொழி (1968 ˙ 1) என்று தமிழியத்திற்கு ஒருமுந்து நலையையும் காட்டியுள்ளார்.

முடிவாக

தமிழ், திரவிடம் என்னும் இரு சொற்களும் முற்றிலும் வேறுபட்ட சொற்களாகத் தோன்றினாலும், பிறப்பால் தொடர்புடையனவாக நான் கருதுகிறேன், அவை இரண்டையும் ஒன்றாகவே கருதுகிறேன் என்பார் கால்டுவெல் (1856 : முன். 8) இக்குடும்பத்தாருக்குத் திரவிடம் என்று தனிப்பெயர் வழங்கி இருந்தாலும் முதன்மையாகக் கொண்டு இக்குடும்பத்தைக் கால்டுவெல் பார்த்துள்ளதை இது காட்டுகிறது.

இன்று திரவிட மொழிகள் பேசும் பகுதிகள் முன்னர்த் தமிழ் பேசும் பகுதிகளாக இருந்துள்ளதும், தமிழ் வளமையான மொழியான இருப்பதும், திரவிடச் சொற்களின் வேர்மூலங்களைக் கொண்டிருப்பதும், மிகப்பழமையான மொழியாக இருப்பதும் தமிழின் திரவிட தாய்த் தன்மையைக் காட்டுகின்றன. இதனைத் தமக்கேயுரிய பாங்கில் தமிழ் என்னும் பெயர் திரவிடமாகத் திரிந்தது போலவே தமிழாகிய மொழியும் பிற திரவிடமாய்த் திரிந்தன (1944 : முன். 9) என்று குறிப்பிடுகிறார் பாவாணர்.

உசாத்துணை நூல்கள்

1. பாவாணர், *இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்* 1999 தமிழ்மண், அறக்கட்டளை, சென்னை- 17.
2. பாவாணர், *வண்ணனை மொழி நூலின் வழுவியல்*, 1968 சைவ சித்தாந்தக் கழகம், சென்னை.
3. பாவாணர், *திரவிடத்தாய்,* 1964, சைவ சித்தாந்தக்கழகம், சென்னை.
4. பாவாணர், *தமிழ் வரலாறு*, 1990, சைவ சித்தாந்தக் கழகம், சென்னை.
5. பாவாணர், *சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்* 1990, தமிழ்மண், அறக்கட்டளை, சென்னை -17.
6. கால்டுவெல், *திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்*, 1987,
7. த. மீனா ஜெயக்குமார். *தமிழ் இலக்கியத்தில் மண்ணும் மனித உறவுகளும்*, 2006.